இலக்கிய
ஆய்வு வரிசை - 1

# ஆய்வுப் பேழை

கா. ம. வேங்கடராமையா எம். ஏ

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# ஆய்வுப் பேழை

பேரறிஞர்

**கா. ம. வேங்கடராமையா** எம்.ஏ.

விற்பனை உரிமை

**பராசக்தி பதிப்பகம்**

5/2 சேஷாசல முதலி தெரு

சைதாப்பேட்டை, சென்னை-600 015

திருந்திய பதிப்பு 1987

பக்கம் 156 + 6 = 162

விலை : ரூபா 15-00

வெளியீடு
அன்னபூர்ணா பதிப்பகம்
திருப்பனந்தாள்-612 504

ஸ்ரீ தேவி பிரிண்ட் ஹவுஸ், சென்னை-15

# பதிப்புரை

யாதானு நாடாமால்
ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

இதற்கண் உள்ள கட்டுரைகள் 18. இவை யான் அவ்வப்பொழுது பல திங்கள் இதழ்களில் வெளியிட்டவை. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். இது கற்போருக்குப் பெரு விருந்தளிக்கும் என்பது ஒருதலை.

இதனை அச்சிடப் பொருள் உதவியுடன் ஊக்கமும் அளித்த **திரு ம. வே. ஜெயராமன்** அவர்கட்கு மேலும் மேலும் பன்னலங்கள் பெருகுக என்று செந்திலாண்டவன் திருவருளை வாழ்த்துகிறேன்.

மார்கழித்
திருவாதிரை,
2—1—1980

இங்ஙனம்,
**கா. ம. வேங்கடராமையா,**
திருப்பனந்தாள்.

## இதனுள் ...

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | காஞ்சிக்கடிகை | 1 |
| 2. | எத்து நூல் எண்பது லக்ஷம் | 12 |
| 3. | கல்லெழுத்துக்களில் கங்காபுரியினர் | 16 |
| 4. | மனுசரிதக் கல்லெழுத்து | 22 |
| 5. | முதலாம் விக்கிரமாதித்தனின் கத்வல் பட்டயங்கள் | 26 |
| 6. | இரண்டாம் நந்திவர்மனின் காசாக்குடி செப்பேடுகள் | 35 |
| 7. | நிருபதுங்கவர்மனின் வாகூர்ச் செப்பேடுகள் | 42 |
| 8. | தந்தி சக்தி விடங்கியார் | 51 |
| 9. | இசை ஞானியார் | 67 |
| 10. | இரு வில்லிகள் | 71 |
| 11. | எண்ணலங்காரம் | 79 |
| 12. | தொனி | 92 |
| 13. | தோட்டிமையுடைய தொண்டர் | 103 |
| 14. | திருநெல்வாயில் அரத்துறை | 108 |
| 15. | வாரணவாசி | 119 |
| 16. | கண்காள் காண்மின்களோ | 126 |
| 17. | கல்வெட்டுக்களும் இசையும் | 130 |
| 18. | இரண்டாம் இராசராசனது திருவொற்றியூர்க் கல்லெழுத்து | 140 |

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

ஜஸ்டிஸ், டாக்டர்

*B. S.* **சோமசுந்தரம்,** B. A., B. L. அவர்களுக்கு



இந்நூல்

பணிவுடனும், நன்றியறிவுடனும்

காணிக்கையாக்கப் பெற்றது

# 1. காஞ்சிக் கடிகை

## காஞ்சிபுரத்தின் பழமையும் பெருமையும்

இந்தியப் புண்ணியத் தலங்கள் ஏழனுள் ஒன்ருகக் கருதப்பெறுவது காஞ்சி, அசோகன் காஞ்சியில் ஸ்தூபிகளைக் கட்டினுன். கி. மு. 150-ல் இருந்த பதஞ்சலி முனிவர் தமது மகாபாஷ்யத்தில் காஞ்சிபுரத்தைக் குறிப்பிட்டிருக்கிருர். கி. மு. முதல் நூற்ருண்டின் இறுதியில் கரிகாலன் என்னும் சோழன் வடநாடு நோக்கிப் படையெடுத்துச் சென்றபொழுது வேடன் ஒருவனுல் காஞ்சியின் வளப்பத்தை அறிந்து, மதில்களை எழுப்பி, வேளாளர்களைக் குடியிருத்திஞன். தொண்டை நன்ஞட்டில் யாவரும் ஏத்தும் நிலையில் விளங்குவது காஞ்சி மாநகரம். சங்க காலத்தில் இது சிறந்த நகரமாகத் திகழ்ந்தது பெருபாணுற்றுப்படையில் இது சிறப்பிக்கப்பெறுகிறது; அந்நாளில் தொண்டைமான் இளந்திரையன் என்பான் ஆண்டதாகத் தெரிகிறது. மணிமேகலைக் காலத்தில் காஞ்சியில் ஆண்டவன் இளங்கிள்ளி என்பவன். இவன் புத்தர் கோயில் ஒன்று கட்டினுன். வஞ்சி நகரத்தில் இருந்த மாசாத்துவான் கூறியவண்ணம் மணிமேகலை காஞ்சிமாநகரத்துக்குச்சென்று, அங்குப் புத்தபீடிகை அமைத்தாள்; அமுதசுரபியைக் கொண்டு எல்லா உயிர்களின் பசிப் பிணியையும் போக்கினுள்; அறவண அடிகளிடம் தவத் திறம் பூண்டு தருமம் கேட்டாள்.

## பல்லவர் கோநகர்

இத்தகைய பழம்பெருமை வாய்ந்த காஞ்சிபுரம், சிம்மவிஷ்ணு என்ற பல்லவப் பேரரசன் காலம் முதல் (கி.பி.575) பல்லவர்களுடைய கோநகரமாக அமைந்திருந்தது. இவனுக்கு முன்னும் சில சில சமயங்களில் பல்லவர் கையில் இருந்தது; கைம்மாறியதும் உண்டு. காகுத்தவர்மன் என்

னும் கதம்ப அரசனுடைய தாளகுண்டா கல்வெட்டு, 'பல்ல வானும்புரி' என்று இதைக் குறிக்கிறது.

### காஞ்சிக் கடிகை

பல்லவர் கோநகரமாக விளங்கிய காஞ்சிபுரம் கல்வியில் சிறந்த மாநகரமாகத் திகழ்ந்து வந்தது. காஞ்சிபுரத்தில் இருந்த கல்வி நிலையம் கடிகா (Ghatika கடிகை) எனப் பட்டது. கடிகை என்ற சொல் கடிகா என்ற வடசொல்லின் தற்பவமாகும். 'கட்' என்ற தாதுவினின்று தோன்றியது இச் சொல்; இத் தாது 'ஆழ்ந்து வேலை செய்', 'சுறுசுறுப்பாக இரு' என்ற பொருள்படும்; எனவே கடிகா என்பது 'ஆழ்ந்து அறிவுபெற முயலும் இடம்' என்று பொருள்படக்கூடும் என்று ஆய்வாளர் கூறுகிறார்கள். கீல்ஹார்ன் என்பார் கடிகா என் பதைக் கோஷ்டி என்ற சொல்லுடன் தொடர்புபடுத்திக், கடிகா என்பது தூய பிராம்மணர்களின் கூட்டத்தைக் என்பர்.

### காஞ்சிக் கடிகையின் பழமை

ஏறத்தாழக் கி. பி. 345 முதல் 370 வரை மயூரசர்மன் என்ற கதம்பகுல அரசன் ஆண்டு வந்தான். இவன் வீர மறையவன். இவன் ஸ்ரீசைலத்தைச் சேர்ந்த நாடுகளைக் கைப்பற்றி ஆண்டவன். இவனுடைய பிரபவுத்திரன் (கொட் பேரன்) காகுத்ஸவர்மன் எனப் பெறுவான். இவன் பல்ல வரை அறவே வெறுத்தவன். இவனது கல்வெட்டு ஒன்று தாளகுண்டாவில் கிடைத்துள்ளது. தாளகுண்டா, மைசூர்ப் பகுதியில் சிமோகா ஜில்லாவில் சிகார்பூர் தாலுகாவில் உள்ள ஊராகும். இவ்வூர்க் கல்வெட்டில், "மயூரசன்மன் காஞ்சிக் கடிகையில் படித்தான்" என்று சொல்லியிருக்கிறது. ஏறத்தாழக் கி. பி. 360இல் இது நிகழ்ந்திருக்கலாம். எனவே 4-ஆம் நூற்றாண்டிலேயே வேற்றுநாடுகளினின்று காஞ்சி புரத்துக்குப் பிறர் வந்து கல்வி கற்கக்கூடிய அளவு பழமை

யும் பெருமையும் பொருந்தியிருந்தது இக் காஞ்சிக் கடிகை என்று கொள்ளலாம்.

## எத்தகைய கல்வி

மயூரசர்மன், 'தார்க்குக'ஞகைக் காஞ்சிக்குச் சென்ருன் என்று சொல்லப்படுகிறது. (கடிகாம் விவேச தார்க்குகா:). தார்க்குகன் என்பது யாசகன் என்று பொருள்படும். இதனுல் அறிவை யாசித்தற்கு மயூரசன்மன் சென்ருன் என்று தெரிகிறது. மயூரசன்மன் தான் மட்டும் செல்லவில்லை; தன் ஆசிரியன் வீரசர்மனுடன் சென்ருன். பிரவசனம் முழுவதையும் கற்க விழைந்து அங்கு இருவரும் சென்றனர். (அதிஜிகாம்ஸுஹ் ப்ரவசநம் நிகிலம்.) இதனுல் வேதங்களைப் பிரவசனம் செய்யச் சென்றமை அறிய வருகிறது. பிரவசனம் செய்தலாவது கூர்ந்து ஆய்ந்து கற்பது என்று பொருள்படும். ஆசிரியனும் மாணவனும் ஆகிய இருவரும் வேதங்களில் ஆராய்ச்சிக் கல்வி கற்றற்பொருட்டுச் சென்றனர்போலும். பல்லவ மன்னனுகிய நந்திவர்மனது காசாக்குடிச் செப்பேடுகளும், கடிகையில் நான்கு வேதங்களும் கற்பித்தனர் என்று கூறுகின்றன. (சாதுர்வேத்யமவீவ்ருதத் ஸ்வகடிகாம் பூதேவதாபக்திதா.) எனவே காஞ்சி கடிகாவில் வேத ஆராய்ச்சிக் கல்வியே கற்பிக்கப் பெற்றது என்பது தெளிவு.

## கடிகையும் பல்லவ அரசரும்

காஞ்சிக் கடிகா பல்லவ அரசரது மேற்பார்வையில் இருந்தது. அவர்களுடைய ஆதரவிலேயே சிறப்புடன் திகழ்ந்தது. பல்லவ அரசர் யாவரும் அதனைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தனர். அதனிடத்தில் பெருமதிப்பு வைத்திருந்தனர். பல்லவர் ஆதரவில் திகழ்ந்த இக் கடிகையில் கதம்ப அரசைத் தோற்றுவித்த மயூரசர்மன் (முன்னர்க் கூறியது போலப் படிக்க வந்தவன்) முற்றக் கற்க முடியாதவனுஞன். ஒரு சமயம் பல்லவருடைய குதிரைச் சேகவனுக்கும் மயூரசர்மனுக்கும் கடுமையாகச் சண்டை

மூண்டது "அந்தோ! இந்தக் கலியுகத்தில் பிராமணர்கள் க்ஷத்திரியரைக் காட்டிலும் வன்மை குறைந்தவராகவே இருக்கிருர்களே! என்னதான் தாம் குருவைத் தொழுது சீராக வேதத்தைப் படித்தாலும் பிரமசித்தி பெற அரசனது உதவியைத்தானே நாட வேண்டியிருக்கிறது? இதனினும் துன்பந் தரத்தக்கது யாது?'' என்று அந்தக் குதிரைச்சேகவன் ஏளனமாகப் பேசினும். இதனைக் கேட்டதும் மயூரசர்மன் கொதித்து எழுந்தான்; குசையும் சமிதையும் கற்களும் சுருக்கும் நெய்யும் பிறவும் ஏந்தும் கையில் ஒளி பொருந்திய வாளை ஏந்தினுன்; பல்லவனுடைய காவலர்களை வென்று, காஞ்சியை விட்டு ஸ்ரீபர்வதம்வரை பரவியுள்ள அடவியல் புகுந்து சென்ருன்.

## பல்லவரின் தொடர்ந்த ஆதரவு

பல்லவர்க்கும் மயூரசர்மனுக்குக் விரோதம் இருந்தமையால்தான் மேற்கூறிய சம்பவம் நிகழ்ந்தது; மயூரசர்மனும் பிரமசித்தி அடையாது ஓடவேண்டியவனுனன்.

ஏறத்தாழக் கி. பி. 400க்குச் சிறிது முற்பட்ட காலத்தில் கந்தசிஷ்யன் என்ற பல்லவ அரசன் இருபிறப்பாளர்தம் கடிகாவைச் சத்தியசேனன் என்ற அரசனிடமிருந்து மீட்டான் என்று வேலூர்ப்பாளையப் பட்டயம் பகர்கின்றது. 'ஸ்கந்த ஸிஷ்ய ஸததொ பவத்விஜாநாம் கடிகாம் ராஜ்ஞாஹ ஸத்ய ஸேநாஜ் ஜஹாரய:' S. I. I. Vol. II, Part V, P. 508, 112-13) என்பது பட்டயத்தில் கண்டது. எனவே நான்காம் நூற்ருண்டின் இறுதியில் காஞ்சிக் கடிகா பகைவர் கைவசப்பட்டுக் கலங்கியது; கந்தசிஷ்யன் (கி.பி. 400-436) மீண்டும் அதைக் கைப்பற்றி நன்னிலையில் அமைத்தான்; பின்னர் இக்கடிகை 8-ஆம் நூற்ருண்டின் இறுதி வரையில் சிறந்து விளங்கியது.

சிம்மவிஷ்ணு காலத்தில் (கி. பி. 575-615) பாரவி என்னும் சிறந்த வடமொழிப்புலவர் காஞ்சிபுரத்துக்கு வரவழைக்கப் பெற்ருர் என்று அவந்திசுந்தரி கதா கூறுகிறது.

ராஜசிம்மன் (கி. பி. 685–705) என்ற பல்லவ அரசன் காலத்தில் பல்லவப் பெருநாட்டில் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. பாரவியின் பேரனாகிய தண்டி பஞ்சக்கொடுமையை (அவந்தி சுந்தரி கதாஸாரம் என்ற நூலில்) பின்வருமாறு கூறுகிறார்.

சோழ பாண்டிய நாடுகள் பஞ்சக் கொடுமையால் மிக்க துயருற்றன. பெண்கள் புறக்கணிக்கப்பட்டனர். அக்கினி ஹோத்திரங்கள் நிறுத்தப் பெற்றன. நெற்களஞ்சியங்களில் நெல் இல்லையாயிற்று. வீடுகளிலிருந்து மக்கள் விரட்டப் பட்டனர். பெருமை அழிந்தது. மரங்கள் வெட்டுண்டன. செல்வர் கொலையுண்டனர். கௌசிகியின் மகனாகிய தண்டி யின் உற்றார் உறவினர் சிலர் மாண்டனர். சிலர் நீங்கினர். தண்டியும் வாழ வழியின்றிக் கையில் பணமுமின்றி நாடெங் கும் சுற்றி அலையலானான். பஞ்சம் நீங்கியபிறகு காஞ்சிக்கு வந்தான். அவந்திசுந்தரி கதை நூலை எழுதினான்.

பஞ்சத்தினால் சீரழிந்த கடிகையை ராஜசிம்மன் மீண்டும் நன்னிலையடையச் செய்தான். இதனையே வேலூர்ப்பாளையப் பட்டயம், ''நரஸிம்ஹவர்மா புநர் வ்யாதாத்யோ கடிகாம் த்விஜாநாம்'' என்று கூறுகிறது. (இதில் நரசிம்மவர்மன் என்றது ராஜசிம்மனையே ஆகும்.)

இங்ஙனம் சீர்செய்யப் பெற்றதும் கடிகை மீண்டும் நன்கு நடைபெறலாயிற்று. ஏறத்தாழ 705-இல் ராஜசிம்மன் இறந் தான். அவன் மகன் இரண்டாம் பரமேசுவரன் 710 வரை ஆட்சி செய்து அவனும் இறந்தான். அவனுக்கு அடுத்துப் பல்லவப் பேரரசை ஏற்று நடத்தத் தக்க அரசன் இல்லை. அப்பொழுது கடிகையாரும் பிறரும் இரண்யவர்ம மகாராஜன் என்பவனைக் கண்டு தமக்கோர் அரசனைக் கேட்டு, அவன் மகனையே (பல்லவமன்னனாகிய நந்திவர்மனை) அரசனாகப் பெற்றனர். அந்நாளில் இக்கடிகையாருள் ஒருவர் தரணி கொண்ட போசர் எனப் பெற்றார். இவரை 'வித்தாகமிகர்' அதாவது ஆகமங்களில் சிறந்த அறிவு படைத்தவரென்று கூறுவர்.

இரண்யவர்ம மகாராஜன், தன் மகன் பன்னிரண்டு வயசுப் பாலகனுயிற்றே, எங்ஙனம் அவனை அரசனுக்குவது என்று மயங்க, இந்தத் தரணிகொண்ட போசர் இரண்யவர்ம மகாராஜனிடம், 'பல்லவமல்லன் அரசாள்வதற்குத் தவம் செய்திருக்கிருன்; அஞ்சவேண்டா' என்று கூறி உடன்படு மாறு செய்தார். பின்னர் யானைத்தலை போன்ற மகுடங்களைக் கொணர்ந்து அளித்தபொழுது இரண்யவர்மன் திகைக்கத் தரணிகொண்ட போசர், "இவை களிற்றின் தலையல்ல; நின் மகனுக்குரிய மகுடங்கள்; ஏற்றுக்கொள்க என்று கூறி ஏற்கு மாறு செய்தார். பின்னர்க் காஞ்சிக்கு அழைத்துச்சென்று நந்திவர்மன் என்று பெயர் சூட்டிப் பல்லவ மல்லனை அரச னுக்கினுர். இங்ஙனம் கடிகையாரும், அவர்களுள் ஒருவராகிய தரணிகொண்ட போசரும் ஏறத்தாழக் கி. பி. 710-இல் அர சனைத் தேர்ந்தெடுப்பதில் பெரும்பங்கு கொண்டனர். (காஞ்சி புரம் வைகுண்டப் பெருமாள் கோயில் சிற்பங்களின் கீழ் உள்ள கல்வெட்டுத் தொடர்கள் இவற்றைக் கூறுகின்றன. S. I. I. Vol. IV, எண் 135 பார்க்க; 37 of 1888).

மேற்குறித்த பல்லவமன்னனுகிய நந்திவர்மனது ஆட்சிக் காலத்தில் சாளுக்கிய அரசனுகிய இரண்டாம் விக்கிரமாதித் தன் காஞ்சியின்மேல் படையெடுத்து வந்தான்; பல்லவரை முறியடித்துக் காஞ்சியில் நுழைந்தான்; கைலாசநாதர் கோயிலின் செல்வத்தைக் கண்டு வியந்தான்; 'ராஜஸிம் ஹேச்வரக்ருஹம்' எனப்பெற்ற அக்கோயிலின் செல்வத்தை அக்கோயிலுக்கே அளித்தான். இதனை அக்கோயில் முன் மண்டபத் தூணில் கண்ட கல்வெட்டில் குறித்தான்; அன்றி யும், 'இதனை அழிப்பவர்களும், இவ்வரசனுல் அளிக்கப் பெற்ற தருமத்தை நிலைகுலையச் செய்பவரும் கடிகையிலுள்ள மகாஜனமான்களைக் கொன்றவர் புகும் உலகில் புகுக' என்றும் எழுதியிருக்கிருன். இதனுல் கடிகையாரிடம் பல்லவப் பகை வனுகிய விக்கிரமாதித்தனுக்கு இருந்த பெருமதிப்பு விளங்கு கிறது. இதில் கடிகையாரை 'மகாஜனமான்' என்று கூறியிருப் பது அறியத்தக்கது.

## படித்தவர் யார்?

மயூரசர்மன் என்னும் வீர மறையவனும், அவன் ஆசிரிய ராகிய வீரசர்மனும் கற்றற் பொருட்டுக் காஞ்சிக் கடிகைக்கு வந்தனர். காசாகுடிப் பட்டயம், ''ஸ்வகடிகாபூதேவதாம்'' அதாவது பிராமணர்களை யுடையது கடிகை என்று கூறு கிறது. வேலூர்ப்பாளையப் பட்டயம் ''கடிகாம்த்விஜாநாம்'' அதாவது இருபிறப்பாளர் கடிகை என்று கூறுகிறது. எனவே காஞ்சிக் கடிகையில் படித்தவர் பிராமணர்களே யாதல் கூடும்.

## கடிகையின் அளவு

இக் கடிகையில் கற்றவர் எத்தனைப் பேர் என்று அறிவ தற்குத் தக்க சான்றுகள் இல்லை. எனினும் காஞ்சிக் கடிகையில் பன்னூறு மாணவர்கள் உயர்கல்வி கற்றிருத்தல் வேண்டும் என்றும், பல பேராசிரியர்கள் இருந்திருத்தல் வேண்டும் என்றும் கொள்ளுதலில் தவறில்லை. பல்லவ மன்னனாகிய இரண்டாம் நந்திவர்மனுடைய 62-ஆம் ஆண்டுக்குரிய திரு வல்லம் சாஸனம் ஒன்றில் (S. I. I. Vol. III, Part I, P. 91). ''இது அழித்தான் கடிகை ஏழா இருவரையும் கொன்ற பாவத்தில் படுவான்'' என்று காணப்படுகிறது, 'ஏழாஇருவர், என்றது 'ஏழாயிரவர்' என்பதாகும். இது இக்கல்வெட்டின் காப்புரைகளுள் ஒன்று. இதனால் கடிகையாரைக் கொல்வது 'பார்ப்பார்த் தப்பிய கொடுமை'யினும் பாவமிக்கது என்ற கருத்து அறியவரும். இங்குக் கண்ட கடிகை ஏழாயிரவர் என்றது காஞ்சிக் கடிகையாரையே குறித்ததாதல் வேண்டும்' இவ் வல்லம், காஞ்சிக்கு அண்மையில் இருப்பது. இந் நந்தி வர்மனை அரசனாக்குவதில் பெரும்பங்கு கொண்டவர் காஞ்சிக் கடிகையார். இரண்டாம் விக்கிரமாதித்தனது கைலாசநாதர் கோயிலிலுள்ள கன்னடக் கல்வெட்டும் இங்ஙனமே காப்புரை கூறுகிறது, எனவே திருவல்லம் கல்லெழுத்துக் காப்புரை யில் கண்ட கடிகை ஏழாயிரவர் காஞ்சிக் கடிகையாரே

ஆவர் எனலாம். தில்லை மூவாயிரவர், அஷ்டஸகஸ்ரம், (இரட்டபாடி ஏழரை இலக்கம், முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரம்) என்று எண்ணொடு பொருத்திக் குறித்தாற்போலக் கடிகையாரும் கடிகை ஏழாயிரவர் எனப்பெற்றனர். ஆகை யால் காஞ்சிக் கடிகையில் ஏறத்தாழ ஏழாயிரம் பேர் இருந் தனர் போலும். (டாக்டர் ஸி. மீனுட்சி அவர்கள் திருவல்லம் கல்லெழுத்தில் குறிக்கப்பெற்றவர் வல்லத்துக் கடிகையார் என்று கருதுவர்.)

## கடிகையின் செல்வ நிலைமை

பல்லவ அரசர்களது மேற்பார்வையிலும் பாதுகாப்பிலும் காஞ்சிக் கடிகை இருந்தது. ஆகவே செல்வத்திற்குக் குறையே இருந்திருக்க முடியாது. கடிகையார்க்கு என்று நிலபுலங்கள் இருந்திருத்தலும் கூடும்; இது ஒரு கல்லெழுத் தினின்று (285 of 1921; 119 of S. I. I., Vol. xii) தெரிய வருகிறது. இது கோப்பெருஞ்சிங்கனது 5-ஆம் ஆண்டு (கி.பி. 1240-க்குரிய) ஆத்தூர்க் கல்வெட்டு. இதில் "கடிகை யார் இறையிலி நிலம் மூன்றேகாலும்" என்றுள்ளது. மூன்றே கால் என்பது மூன்றேகால் வேலி நிலத்தைக் குறிக்கும் இறை யிலி நிலம் என்றமையின், இறையிலி ஆக்கியது இதற்கு முன்னரே என்று அறியலாம். 13-ஆம் நூற்றுண்டில் கடிகை யார் இல்லாதவராயினர். எனினும் இறையிலி நிலம் அவர் பெயராலேயே அமைந்திருந்தது போலும். இதனுல் காஞ்சிக் கடிகையார்க்குச் சொந்தமான நிலங்களும் இருந்திருக்க வேண்டும் என்பது உறுதி.

## காஞ்சியில் எங்கு இருந்தது

காஞ்சிபுரத்தில் இக் கடிகை எவ்விடத்தில் அமைந்து இருந்தது என்பதும் ஒரு நல்ல கேள்வி. வேதாகமங்களைப் படிப்பிக்கும் கல்வி நிலையங்கள் பெரும்பாலும் பண்டைக் காலத்தில் கோயில்களில் அமைந்திருந்தன என்பது யாவ

ரும் அறிந்தது. எனவே காஞ்சிக்கடிகையும் காஞ்சிபுரத்தில் மிகப் பழமையான கோயில்களுள் ஒன்றில் இருந்திருத்தல் வேண்டும். கச்சிநெறிக் காரைக்காடு, கச்சி ஏகம்பம், திரு மேற்றளி என்பன காஞ்சிக்கோயில்களுள் மிகப் பழமை வாய்ந்தவை. இவற்றுள் முதலிரண்டைச் சம்பந்தரும், பின் இரண்டை அப்பரும், கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் பாடியுள் ளனர். ஐயடிகள் காடவர் கோனும் க்ஷேத்திரத் திருவெண் பாவில் கச்சி ஏகம்பத்தைப் பாடியுள்ளார். எனினும் அப்பர் திருமேற்றளியைப் பாடுங்கால் 'கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்' என்று குறிப்பிட்டுள்ளார்; ஆகவே மிகப் பழங் காலத்தில் கச்சி மேற்றளியில் கடிகை இருந்திருத்தல் வேண் டும் என்று ஊகிக்கலாம்; துணிந்து கூற இயலாது.

அப்பர் காலத்துக்குப் பிற்பட்ட ராஜசிம்மனால் கைலாச நாதர் கோயில் கட்டப்பெற்றது. அங்கு விக்கிரமாதித்தனது கல்வெட்டு இருக்கிறது என்றும் அக் கல்வெட்டை அழிப்பார் கடிகையாரைக் கொன்றவர் புகும் உலகில் புகுக என்று கூறி யுள்ளான் என்றும் மேலே கூறப்பட்டது. கடிகையாரைக் கைலாசநாதர் கோயில் கல்வெட்டில் கூறியுள்ளமையின், கைலாசநாதர் கோயில் எடுப்பித்த பிறகு, கடிகை அக் கோயிலில் நடைபெற்றது என்றும் கொள்ளலாம். இவ் ஊகத்தை உறுதிப்படுத்தத் தண்டியலங்கார மேற்கோள் பாடல் துணைபுரிகிறது. வடமொழித் தண்டி, கைலாசநாதர் கோயில் கட்டிய கொற்றவனாகிய இராஜசிம்மன் காலத்தவர்; ஆனால் தமிழ்த் தண்டியோ பிற்காலத்தவர்; எனினும் மேற் கோள் பாடலில் கண்ட பொருள் கடிகை இருந்த இடத்தை நிர்ணயிக்கப் பெரிதும் துணை புரிகிறது என்பதில் ஐயமில்லை.

காஞ்சிபுரத்துக் கிழக்கெல்லையில் இப்போதும் வரதராஜப் பெருமாள் கோயில் இருக்கிறது; மேற்கில் கைலாசநாதர் கோயில் இருக்கிறது; வடக்கிலும் தெற்கிலும் இரண்டு ஏரிகள். அவற்றுள் ஓர் ஏரிக்குப் பிற்காலத்தில் முடிகொண்ட சோழப் பேரேரி என்பது பெயர். (A. R. No. 35 of 1888); இது

காஞ்சிபுரத்தின் வடக்கில் அமைந்தது. தெற்கிலும் ஓரிரண்டு ஏரிகள் இருந்தமை கல்வெழுத்துக்களிற் காண்கிறோம். இனி, காஞ்சிபுரத்தை மயிலுக்கு ஒப்பிட்டுக் கூறிய தண்டி, கடிகை காஞ்சிபுரத்தின் மேற்கில் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்; அப் பாடல் வருமாறு:

"ஏரி யிரண்டும் சிறகா எயில்வயிருக்
காருடை பீலி கடிகாவா — நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு."

இதில் அத்தியூர் என்பது வரதராசப்பெருமாள் கோயில் உள்ள நகரப் பகுதி. இது காஞ்சியின் கிழக்கெல்லையாகும். கடிகாவா என்பது கடிகாவாக என்பதன் ஈறு தொகுத்தல். கடிகா என்பது காஞ்சிக் கடிகை. இங்ஙனம் பொருள் கொள்ளாது, 'கடி-கா' எனக் கொண்டு, நறுமணம் பொருந்திய சோலை' என்றே பொருள் தரப்படுகிறது. சம்பந்தர்,

'குருந்தம் மல்லிகை கோங்கு மாதவி
நல்ல குராமரவம்
திருந்து பைம்பொழில் கச்சி ஏகம்பம்'
'சேலு லாம்பொழில் கச்சி ஏகம்பம்'
'ஏரினார் பொழில் சூழ்ந்த கச்சி ஏகம்பம்'

என்ற பகுதிகளில் கச்சிக்கு அடையாகப் பொழிலைக் கூறினார்;

'கச்சி தன்னுள் திண்ணமாம்
பொழில் சூழ்ந்த் ஏகம்பம்'
'கச்சி மாநகருள் ஏல நாறிய
சோலை சூழ் ஏகம்பம்'
'கச்சி மாநகருள் மரவம்
பொழில் சூழ் ஏகம்பம்'

என்ற இடங்களில் ஏகம்பத்துக்கு அடையாகப் பொழிலைக்

கூறினர். ஏகம்பத்துக்கும் மேற்கில் அமைந்ததே கைலாச நாதர் கோயில். சம்பந்தர் காலத்துக்குப் பிறகே கைலாச நாதர் கோயில் இராஜசிம்மனுல் கட்டப்பெற்றது. அது இப் பொழுது வயல்வெளிகளின் இடையில் இருப்பினும், அந் நாளில் மாடமாளிகைகளால் சூழப்பெற்றிருந்தது. தண்டி, ராசசிம்மன் காலத்தவர். தமிழ்த் தண்டியும் கைலாசநாதர் கோயிலை அறிந்தவரென்பது சொல்லாமே அமையும். ஆகவே கைலாசநாதர் கோயிலை மேற்கெல்லையாகக் கூறுதலையே அவர்களிடமிருந்து எதிர்பார்க்கலாம். ஏகம்பம் சூழ்ந்ததும் அழியத்தக்கதுமான சேரிலையை மேற்கெல்லையாகக் கூறினர் எனலும் பொருத்தமில் கூற்ரும். கைலாசநாதர் கோயிலைக் கூறுவதினும் ஆங்கிருந்த கடிகையைக் கூறுவதற்கும் ஓர் இயைபு உண்டு. மயிலுக்குப் பீலி பெருமையும் பொலிவும் தந்ததுபோலக் காஞ்சிக்குக் கடிகை சிறப்பும் அழகும் அளித் தது. ஆகவே இப்பாடலில் கண்ட கடிகா என்பது காஞ்சிக் கடிகை என்றும், அது காஞ்சிபுரத்து மேற்கெல்லையில் இருந் தது என்றும் கருதலாம்.

# 2. எத்து நூல் எண்பது லக்ஷம்

## முன்னுரை

''எத்துநூல் எண்பது லக்ஷம்'' என்பது ஒரே வரியான் அமைந்த ஒரு கல்வெட்டு. இது ''கங்கை கொண்ட சோழ புரத்துக் கோபுர வாசலுக்குத் தென்புறம் காட்டிலே கல் தூணிலே இருந்த எழுத்து'' எனத் தென்னிந்திய கோயிற் சாஸனங்கள், பாகம் II, பக்கம் 644-5ல்,677-ஆவது சாஸன மாக வெளியிடப் பெற்றுள்ளது.

## செவி வழிச் செய்தி

மேற்குறித்த ஒரு வரிச் சாஸனத்தைக் குறித்து ஷ நூலில் எழுதப் பெற்றுள்ள செவிவழிச் செய்தி பின்வருமாறு:-

கங்கை கொண்ட சோழபுரத்துத் திருக்கோயில் முதல் இராசேந்திரன் என்னும் சோழவரசனால் கட்டப் பெற்றது என்பதை யாவரும் அறிவர். தனது கங்கா விஜயத்தையும், வடநாட்டில் தான் பெற்ற வெற்றியையும் நினைவுகூர்தற் பொருட்டுத் தான் வென்று கொண்டு வந்த பெரும் பொருட் குவியலைக் கொண்டு இக்திருக்கோயிலை இவ்வரசன் கட்டினான். இக் கோயிலைக் கட்டிக் கடவுண்மங்கலம் செய்தபின், ஒருநாள், 'இக்கோயிலைக் கட்ட எவ்வளவு பொருள் செலவாயிற்று' என்று அரசன் அறிய விழைந்தான். இக்கோயில் திருப்பணியிலே முழுமையும் ஈடுபட்டிருந்த பெருஞ் சிவபக்தனாகிய அமைச்சன் கோயில் எடுப்பிப்பதில் முழுக் கவனஞ் செலுத்தினனே யன்றிக் கணக்கைக் குறித்துக் கொள்ளவில்லை. 'அரசனுக்கு என்னவிடை தருவது' என்று அறியாது திகைத்த அமைச்சன் இறைவனிடம் முறையிட்டான். மறு நாட்காலை தந்தி முகத்து எந்தையாகிய விநாயகர் ஒரு கணக்குப்பிள்ளை போலப் போந்து, கணக்குக் கட்டுகளோடு

அரசன் திருமுன் நின்ருர். 'கணக்கைப்படிக்கலாம்' என்றனன் அரசன். "எத்துநூல் எண்பது லக்ஷம்"என்று படித்து நிறுத்தி அரசனைப்பார்த்தார் புதிய கணக்கர். அரசன் சிறிது சிந்தனையில் ஆழ்ந்திருந்து கணக்கில் மனநிறைவு கொண்டவனுய், அக் கணக்கரைப் போகுமாறு உத்தரவளித்தான்.

## எற்று நூல் எண்பது லக்ஷம்

திருமணம் முதலிய மங்கலச் செயல்களுக்குத் திட்டம் அமைக்குங்கால் "மஞ்சட் குங்குமம் ஒரு அணு"[1] என்று எழுதும் பழக்கம் இன்னும் சிலரிடையுள்ளது. பெருங்கோயில் எடுக்குங்கால் மேற்குறித்தவற்றின் இடத்தை எத்து நூல்–எற்று நூல் கொள்கின்றது. பெரும் பாறைகளை வேண்டியவாறு உடைப்பதற்கு எற்று நூலால் கோடு அமைத்துக் கொள்வர். இவ் வெற்று நூற் செலவு எண்பது லக்ஷம் ஆயிற்று என்ருல், இக் கோயில் கட்டுவதற்குக் கணக்கில் அடங்காப் பெருந்தொகை ஆகியிருத்தல் கூடும் என்பதை அரசன் அறிந்தான் போலும்!

## கணக்கு விநாயகர்

இது கட்டுக் கதையாகவும் இருந்தல் கூடும்! எனினு இக் கதைக்கு அடிப்படையாக அமைந்ததே இக் கல்லெழுத்து. கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலுக்கு மேற்கே அரை கி. மீ. தொலைவில் கணக்கு விநாயகர் கோயில் என்ற பெயரில் ஒரு கோயில் இருப்பது இக் கதைக்கு உதவியாக இருக்கிறது.

# பிற சிறு கல்லெழுத்துக்கள்

## கங்கையில் இட்டது சிங்கக் கிணற்றினில்!

வாரணசியில் ஒரு எலுமிச்சம்பழம் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலின் உள்ளே இருக்கும் சிங்கமுகக்

கிணற்றில் காணப்பட்டதாம்! கங்கை கொண்ட சோழ புரத்துக் கோயிலில் கல்துரவுக்குத் தென்புறம் காட்டில்[2] பாழ் மண்டபத்தில் எழுதியிருக்கும் சாஸனங்களில் ஒன்று (ஷை நூல்[3] சாஸனம் 676) இச் செய்தியைப் பின் வருமாறு கூறும்;-

வாறணசியில்[4] கெங்கைக்கரை யொறத்தி[5] லகப்பட்டு யிருந்த எலுமிச்சம்பழம் சிங்க கொணத்தில்[6] கண்டு சொழன்[7] மனம்.........ந்து தென்று பெறியோர்கள்[8] சொல் படி கல்வெட்டு''

## வாரணசி சமான மாகுமே!

''மனத்தான் வகுக்கவும் எட்டாத'' இக்கோயில் முற் காலத்தில் எவ்வளவு சீரும் சிறப்பும் உடையதாயிருந்தது என்பதை அளவிட்டுரைத்தல் ஒல்லாது. அத்தகைய பெரு நகர் காசி க்ஷேத்திரத்தைக் காட்டிலும் மிகச் சிறந்ததென அக்காலத்து மக்கள் மதித்திருந்தனர் போலும்! இதனையே பின் வரும் கல்லெழுத்து அறிவிக்கின்றது:-

''வாறணசி சமான மாகுமெ சொளமண்டல வா(ழி)''

## முடிப்புரை

இக் கோயில் இந்நாளில் புறக்கணிக்கப் பெற்ற நிலையில் இருந்து வருகிறது; இத்திருக்கோயில் தமிழ்ப் பெருமகனின்[9] வெற்றிச் சிறப்புக்கு நினைவாக அமைந்தது; அவ்வீரப் பெருமகனின் சிவபக்திக்குச் சின்னமாய் இலங்குவது; கருவூர்த் தேவரால் திருவிசைப்பாப் பாடப் பெற்ற பெருமையுடையது; ''வாரணசி சமான மாகுமே'' என்று புகழப் பெற்றது. இத் தகைய சீரும் சிறப்பும் பொருந்திய திருக்கோவிலுக்குப் பலரும் சென்று வழிபடல் வேண்டும்; அங்கு ஓதும் திருவிசைப்பா முழக்கம் எங்கும் பரவ வேண்டும்; பல்லாற்றானும் முயன்று முன்னைய நிலையை எய்துவிக்க வேண்டும்! திருவருள் முன்னிற்க!

1. 25 பைசே என்று இந்நாளில் எழுதலாம்.
2. படியெடுத்த காலத்தில் காட்டேர்ந்த பகுதி, இந் நாளில் தூய்மையாக உள்ளது,
3. South Indian Temple Inscriptions published by the Goverment Oriental Manuscripts, Library Madras
4. வாறஞ்ஞசி-வாரஞ்ஞசி-காசி
5, யொறத்தி-ஓரத்தி
6. கொணத்தில்-கிணற்றில்
7. சொழன்-சோழன்
8. பெறியோர்கள்-பெரியோர்கள்
9. முதல் இராசேந்திர சோழன்

# 3. கல்லெழுத்துக்களில் கங்காபுரியினர்

## கங்கைகொண்ட சோழன்

சோழப் பேரரசர்களில் மிகச் சிறந்த அரசனாகத் திகழ்ந்தவன் முதலாம் இராசேந்திரன் ஆவன். இவன் கி. பி. 1012 முதல் 1044 வரை ஆட்சி புரிந்தவன்; கங்கைவரை படையெடுத்துச் சென்று வாகை சூடியமையின் ''கங்கைகொண்ட சோழன்'' எனச் சிறப்புப் பெயர் எய்தினான்; 'அலைகடல் நடுவண் பலகலஞ் செலுத்திக்' கடாரத்தை வென்றமையின் 'கடாரங்கொண்ட சோழன்' எனப்பெற்றான்.

## கங்கை கொண்ட சோழன்

இராசேந்திரன் I தான் கொண்ட கங்கை வெற்றியின் சின்னமாகக் 'கங்கை கொண்ட சோழபுரம்' என்னும் நகரமும், 'கங்கைகொண்ட சோழேச்சரம்' என்னும் திருக்கோயிலும் நிர்மாணித்தான். அந்நகரம் அந்நாளில் மிகப்பெரியதாக அமைந்திருத்தல் வேண்டும். அந்நகரம் இருந்ததற்கு அறிகுறியாகக் கங்கைகொண்ட சோழபுரம் என்னும் பெயருடன் ஒரு சிற்றூரும், கங்கை கொண்ட சோழேச்சரம் என்னும் திருக்கோயிலும் காட்சியளிக்கின்றன. பண்டிருந்த பெருநிலையை அறிவிக்கும் முறையில் இந்நாளைய கங்கைகொண்ட சோழபுரத்தைச் சுற்றிலும் சில ஊர்கள் உள்ளன. சுண்ணாம்புக்குழி என்பதொன்று; இது கோயில் கட்டச் சுண்ணாம்பு தயாரித்த இடம் ஆகலாம். கணக்கு விநாயகர் கோயில்; இது கோயிலுக்கு அரை கி.மீ. தொலைவில் ஓடைக்கு அப்பால் உள்ளது. மண்மலை, மெய்க்காவல்புத்தூர், குயவன்பேட்டை, உட்கோட்டை முதலியன அந்நகரப் பகுதிகளாம். உட்கோட்டை என்பது அரண்மனைகள் இருந்த பகுதி ஆகும். ஆயிரக்கலவன் என்ற ஊரும் இருக்கிறது. அஃது ஆயுதக்களம் என்ப

தன் திரிபாகலாம். இது போன்ற இன்னும் பல சிற்றூர்களும் அடங்கிய நகரமே கங்கைகொண்ட சோழபுரமாகும்.

## கங்காபுரி

இந்நகரம் கங்காபுரி என்றும், கங்கை மாநகர் என்றும், கங்காபுரம் என்றும் வழங்கப்பெற்றுள்ளது. வீரராசேந்திர சோழனின் ஐந்தாவது ஆட்சியாண்டிற்குரிய மணிமங்கல சாஸனம், 'பெரும் புனற்றுறைது கங்கைமாநகர் புகுந்தபின்' என்றும், 'இகலிடைப் பூண்ட ஜயத்திருவொடும் கங்காபுரி புகுந்தருளி' என்றும் கூறுதல் காணலாம். கங்காபுரம் என்று தண்டியலங்கார மேற்கோட் பாடலில் உள்ளது.

## அறங்கள் பல

பெருநகரமாகத் திகழ்ந்த கங்காபுரியில் வாழ்ந்தோருள் பலர் பல்வேறு அரசர்கள் காலத்தில் தம்மாலியன்ற அறங்களைச் செய்து வந்துள்ளமை பல ஊர்களிற் கண்ட கல்லெழுத்துக்களினின்று அறியப்பெறுகின்றது. அவ்வறங்களிற் சில காண்பாம்.

## சிவபுரியில்

சிவபுரி என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஓரூர். இங்கு முதல் இராசேந்திரனின் ஆட்சியாண்டு குறிக்கப்பெறாத கல்வெட்டுண்டு (510 of 1926). கங்கைகொண்ட சோழபுரத்து அரண்மனையில் திருமஞ்சனம் ஆட்டும் பணிமகளிருள் ஒருத்தி 'நாட்டாமை' என்ற பெயருடையவள். அவள் சிவபுரிக் கோயிலுக்குச் சிறிது பொன் அறஞ்செய்தாள்.

## தலைச்சங்காட்டில்

தலைச்சங்காடு என்பது சம்பந்தரால் பாடப்பெற்ற சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. இத்தலத்துள்ள திருவாய்ப்பாடி

ஆழ்வார் கோயிலில், கங்கைகொண்ட சோழபுரத்தில் "வீர சோழ மடிகை" என்ற பகுதியில் இருந்த ஒரு வியாபாரி. ராசேந்திர சோழன் மாடை 400 கழஞ்சு பொன் அளித்தான். இஃது 800 காசுக்குச் சமம். இப் பொன்னைக் கொண்டு தலைச்சங்காடு ஊர் அவையினர், அக்கோயில் நிலங்கள் சில வற்றுக்கு இறை நீக்கினர். (400 கழஞ்சுக்கு ஆண்டொன்றுக்கு வட்டி 150 கழஞ்சு). அங்ஙனம் முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டொன்றால் (253 of 1925) அறியலாம்.

### திருவெறும்பூரில்

தேவார காலத்தில் இத்தலம் திருவெறும்பூர் எனப்பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைப் பாடியுள்ளார். இது திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ளது. இங்கு இரண்டாம் இராசேந்திரனின் 5-ஆம் ஆட்சி யாண்டுக்குரிய கல்லெழுத்து உள்ளது (121 of 1914). கங்கைகொண்ட சோழபுரத்து உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்துப் பெண்டாட்டி ஒருத்தி திருவெறும்பூர்க்கோயிலில் ஒரு விளக்குத்தண்டு வாங்கப் பணம் அளித்தனள்.

### திருவாரூர்

இது ஏழுவிடங்கத் தலங்களுள் முதன்மையான தலம்; வீதி விடங்கத்தியாகர் என்பது தியாகேசப்பெருமான் திருப்பெயர் ஆகும். உடையார் வீதிவிடங்க தேவர் நம்பிராட்டியார்க்கு ஒரு இரத்தின ஆரத்தைக் கங்கை கொண்ட சோழபுரத்தான் ஒருவன் அளித்ததாக இரண்டாம் இராசேந்திர சோழனின் எட்டாம் ஆட்சி யாண்டுக்குரிய கல்லெழுத்தில் உள்ளது (676 of 1919).

### திருக்காளத்தியில்

திருக்காளத்தி, மூவர் பாடலும் பெற்ற தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் விளக்கு வைப்பதற்காக 96 பசுக்களை ஒருவன்

அளித்தான். அவனுக்குத் 'தெங்கங்குடையான் கூத்த வடுகன்' என்று பேர். அவன் கங்கைகொண்ட சோழபுரத்தில் ''மலையரணப் படைவீடு'' என்ற பகுதியில் ஒரு 'சிறுதனட அலுவலன். இச்செய்தி, ஆட்சியாண்டு குறிக்கப் பெருத திருக்காளத்திக் கல்வெட்டொன்ருல் (130 of 1922) அறியப் பெறும்.

## திருவாவடுதுறையில்

இதுவும் மூவர் பாடலும் பெற்ற சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. திருவாவடுதுறைச் சபையினர் விக்கிரம சோழனுடைய மூன்ருவது ஆட்சியாண்டில் இரண்டு வேலி நிலத்தை இறையிலியாக்குதற் பொருட்டு 100 காசு பெற்ருர்கள். இந்நிலம் விக்கிரம சோழனுடைய மாதேவிகளில் ஒருவராகிய முக்கோக்கிழானடிகளின் பணிப் பெண்ணுல் கொடுக்கப் பெற்றது. அப் பணிப்பெண்ணின் பெயர் 'பவழக் குன்று பெரியாள்' என்பதாகும். இந்நிலம் குலோத்துங்க சோழநல்லூரில் மங்களேசுவரமுடைய மகாதேவர்க்கு அளிக்கப் பெற்றது. இக் குலோத்துங்கசோழநல்லூர், கங்கை கொண்ட சோழபுரத்துக் கைக்கோளர்க்குரிய 'வீரபோகம்' ஆகும். இங்ஙனம் திருவாவடுதுறைக் கல்வெட்டொன்று இயம்புகிறது (69 of 1926).

திருவாவடுதுறையில் ''பெருந்திருவாட்டி'' என்ற ஒரு அறச்சாலை முன்னுளில் இருந்தது. இதற்கு ''அறச்சாலைப் புறம்'' ஆக 13 வேலி நிலம் ஒதுக்கப்பெற்றது. உய்யக் கொண்ட சோழச் சதுர்வேதிமங்கலத்தார் 716¼ அன்ருடு பழங்காசு பெற்று அந்நிலத்தை இறையிலியாக்கினர். இவ் வறச்சாலை கங்கைகொண்ட சோழன் திருக்கொற்ற வாசலில் புறவாயில் சேனுபதி 'இளங்காரி குடையான் சங்கரன் அம்பலம் கோயில் கொண்டான் ஆன அநந்தபாலர்' என்பவரால் நிறுவப்பெற்றது (71 of 1926).

## கோட்டூரில்

இது சம்பந்தர் தேவாரம் பெற்ற சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. (இது திருக்களர் என்ற தலத்துக்கு 3 கல் தொலைவில் உள்ளது). இவ்வூர்க் கோயிலில் நீர் இறைக்கும் ஒரு உவச்சனுக்காக நிபந்தம் அளிக்கப் பெற்றது. இவ்வறத்தைச் செய்தவன் கங்கைகொண்ட சோழபுரத்துத் தரணி சிந்தாமணிப் பெருந்தெருவில் இருந்த ஒரு வியாபாரி ஆவன். இதனை மூன்றும் குலோத்துங்க சோழனின் மூன்றும் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (454 of 1912) காணலாம்.

## சீகாழியில்

சீகாழி, திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்த தலம். இத் தலத்துப் பெரிய கோயிலில் திருஞானசம்பந்தருக்குத் தனி ஆலயம் உண்டு. இவ்வாளுடைப் பிள்ளையார் திருக்கோயிலின் முதற் பிரகாரத்தைப் பழுது பார்த்தற்குக் கங்கைகொண்ட சோழபுரத்தவ்ன் ஒருவன், கங்கைகொண்ட சோழபுரத்துக் கங்கைகொண்டசோழன் திருமதிளுக்குள் வடகூரில் உத்தம சோழப் பெருந்தெருவிலுள்ள வானமாளிகை உடையான் வேம்பன் வைசியார் மகன் நுரம் பூண்டான் (தருமபுர ஆதீனப் பதிப்பு. 2-ம் திருமுறை - தல வரலாற்றுக் குறிப்பு - பக்கம் 65) என்பவன் மூன்றும் இராசராசனின் இரண்டாம் ஆட்சியாண்டு 219-ஆம் நாளில் பணம் அளித்திருக்கிருன் (388 of 1918).

## மடவிளாகத்தில்

இவ்வூர் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தது. இங்கு மூன்றும் இராசராச சோழனின் 18-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுள்ளது (484 of 1926). கங்கைகொண்ட சோழபுரத்துக் கங்கைகொண்ட சோழேச்சரத்து நிமந்தக்காரன் ஒருவன், கல்லூரான க்ஷத்திரிய சிகாமணி நல்லூர் ஊரவரிடம் திருவீரட்டானமுடைய நாயனுர் திருப்பள்ளி

யெழுச்சிக்காக 8 கண்ட கோபலன் மாடை அளித்தனன். இதற்காக 2000 குழி இறையிலிநிலத்தை ஊரவர் கோயிலுக்கு உரிமையாக்கினர்.

## முடிப்புரை

மேலே குறிப்பிட்டவாறு பலர் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்து தமிழ்நாட்டில் உள்ள பல கோயில்களில் அறஞ்செய்தவர்களாகக் காணப் பெறுகின்றனர். அன்னோரும் பிறரும் இன்னும் எத்தனையோ கோயில்களுக்குப் பல அறங்களைச் செய்திருக்கலாம். அவை இந்நாளில் அறியக் கூடவில்லை. இன்னணம் நல்லறஞ் செய்தோர் பலரும் வாழ்ந்த கங்கைகொண்ட சோழபுரம், இன்று ஒரு சிற்றூராகப் பழம் பெருமை சிறிதும் தோன்றுமே இருக்கிறது. பல அறங்களையும் செய்தாருடைய அறப்பயன் என்று தான் வெளித்தோன்றுமோ? என்றுதான் கங்கைகொண்ட சோழேச்சுரர் பழம் பெருமையுடன் காட்சியளிப்பரோ?

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல். — திருக்குறள்

# 4. மனுசரிதக் கல்லெழுத்து

சுவஸ்தி ஸ்ரீ பூமாலை இடைந்து பொன்மாலை திகழப் பாமாலை மலிந்த பருமணித்திரள்புயத் திருநிலமடந்தையொடு ஜயமகளிருப்ப – வேதமும் மெய்மையும் ஆதியுகம்போலத் தலைத்தலை சிறப்ப வந்தருளி வெலற்கரும் போர்புல ஆணை பார்த்திபர் சூட மண்முழுதுங்களிப்ப மநுநெறி வளர்த்து தன் கோயில் கொற்ற வாயிற்புறத்துமணி நாவொடுங்க – திரிபுவன முடையாளிவன் திருவுளத்தருள் முழுதுடையாளென உட னிருப்பச் செம்பொன் வீரசிம்மாசனத்துக் கோக்கிழானடிக ளோடும் எழுந்தருளிய கோப்பரகேசரிவர்மனான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு ஐஞ் சாவது மிதுன ஞாயிற்று பூர்வபட்சத்து சப்தமியும் ஞாயிற்றுக் கிழமையும் அத்தமுமான நாள் 340 கெயாமாணிக்க வளநாட் டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் உடையார் வீதி விடங்கர் சித்திரைத்திங்கள் திருநாளில் சதைய......... திருக் காவணத்தில் சிம்மாசனத்து எழுந்தருளியிருந்து பதியிலாளர் தியாகவிநோத்......... கண்டருளாநிற்ப ஸ்ரீ காரியம் சுப்பிர மங்கல முடையான் மாதவன் இரவியான மானுலைய மூவேந்த வேளார் விண்ணப்பத்தினுல் பதிபாத மூலபட்டுடை பஞ்சா சாரிய தேவகன்மிகளுக்கும் கோயிலங்......... பார்க்கும் திரு வாய் மொழிந்தருளியபடி நம் ஏவலால் பூலோக ராஜ்யம் செய்கிற சூர்யபுத்திரன் மநு தன் புத்திரன் ஏறிவருகிற தேரில் பசுவின் கன்றகப்பட்டு பிரமாதப்பட அதின்மாதாவான சுரபி கண்டு துக்கித்து, மநுவின் வாசலில் மணியையெறிய, அது கேட்டு, மநு தன் மந்திரி இங்கனுட்டுப் பாலையூருடையான் உபயகுலாமலனைப் பார்த்து நீ சென்று இதனை அறிந்து... வாயிற்புறத்து ஒரு பசு மணி எறியா நின்றது என்று சொல்ல, அதுகேட்டு, மநு புறப்பட்டு; பசுவையும் பட்டுக்கிடந்த...... படி வினவி தன்புத்திரன் பிரியவிருத்தனைத் தேரிலே ஊர்ந்து, குறுக்கவென்று உபய குலாமனுக்குச் சொல்ல அவன் சந்தா

யத்தோடும் புறப்பட்டுத் தன் செவிகளைத் தரையிலே குடைந்துகொண்டு துக்கித்தனாய், மநு தானே புறப்பட்டு, தன் புத்திரனைத் தானே தேரிலே ஊர்ந்து குடுக்க, அப்போதே நாம் அவனை அநுக்கிரகித்து கன்றுக்கும், மந்திரிக்கும், மநு புத்திரனுக்கும் ஜீவன் குடுக்க, அது கண்டு மநு சந்தோஷித்துக் கன்றினை எடுத்துக்கொண்டு, பசுவுக்கு காட்டிகுடு...... அபிஷேகம் பண்ணி இவனுக்குத் தன் புத்திரன் மாளிகை.... மங்கல...மூரும் குடுத்து மநுவும் உபயகுலாமலனும் தபசினைத் தலை நின்றமையால், பாலையூர் உடையான் உபயகுலாமலன் வம்சத்தனாகிய பாலையூர் உடையார் சந்திரசேகரனாதி விடங்கனான குலோத்துங்க சோழமகாபலிவாண......வம்சாதியாக வருகிற மாளிகை மனை பழயபடி மாளிகை ஆக எடுத்துக் குடி வைப்பதாக நாம் சொல்ல......இதிலே நித்தமும் நாம் அடியார்க்குச் சோறு இடப்பெற வேணுமென்று இவன் நமக்குச் சொன்னமையில் காட்டிப் பெறுவதாகும் இம்மாளிகை வம்சாதி அகஸ்வமாய்வரு..... மாளிகையிலே எழுத்து வெட்டிவித்துக் கொடுக்கவென்று.. ...... பாலையூருடைய உபயகுலாமலன் மநுவின் பக்கல் பெற்றுடைய மாளிகை மனை தனக்கும்........ நாம் காணிக்கையாகத் தந்தோம். இம்மாளிகை பழய........மனை நிலத்துக்குக் கீழ்பாற்கெல்லை தூது......... மூடுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை......... வடக்கும் மேத்பாற்கெல்லை அருமொழிஸ்வரமுடையார் களிச்சேரி பால்நறத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை பாலையூருடையான் மாளிகைத் தெருவுக்குத் தெற்கும் இவ்விசைந்த பெரு நான்கு எல்லை நடுவுட்பட்ட மாளிகை மனை குழி நூற்றிருபதும், இப்பாலையூருடையான் சந்திரசேகரனாதி விடங்கனான குலோத்துங்க சோழ மகாபலிவாண ராஜனுக்கு வம்ஸாதியாக ஸ்வமானபடி ஸ்ரீ காமேஸ்வரருக்கும் பதிபாத மூலபட்டுடை பஞ்சா-ரிய தேவ கன்மிகளுக்கும் .........ர்க்கும் உடையார் வீதி விடங்க தேவர் திருவாய் மொழி........கல்வெட்டியது இது. பலமாகேஸ்வர...........

# ஆராய்ச்சிக் குறிப்பு

## பண்டை நூல் கூற்றுக்கள்

பெரியபுராணத்தில் மனுசரிதம் திருவாரூர்ச் சிறப்பு என்ற பகுதியில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. இவ்வரலாறு,

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்"

என்று சிலப்பதிகாரத்திலும்,

"மகனை முறை செய்த மன்னவன்"

என்று மணிமேகலையிலும்,

"மேலைக் கறவைக் கன்றூர்ந்தானைத்
தந்தையு மூர்ந்தான்"

என்று பழமொழியிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

## மகாவம்சம் கூறுவது

கி. மு. இரண்டாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் சோழ நாட்டில் ஏழாரன் என்னும் அரசன் இருந்தான். அவன் பகைவர்க்கும் நண்பர்க்கும் ஒரே நிலையில் நீதி வழங்கினுன்; தன் மகன் தேர் ஊர்ந்து சென்று அறியாது பசுக்கன்றைக் கொன்றதற்காக, அத்தனி மகனைக் கிடத்தி, அவன்மீது தானே ஊர்ந்து கொன்ற உத்தமன். இவ்வரசன் அக் காலத்தில் இலங்கையை ஆண்ட அசேலன் என்பவனை வென்றுன் என்றும் மகாவம்சத்தினின்று அறிகின்றோம். இலங்கை வரலாற்றைக் கூறும் நூலாகிய மகா வம்சத்தில் இச்செய்தி கூறப்படுவது அறியத்தக்கது.†

---

†சோழர் வரலாறு - Dr. மா. இராசமாணிக்கம் - முதற் பாகம் - பக்கம் 40

## மனுசரிதக் கல்லெழுத்து

இக்கல்லெழுத்து திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி திருக்கோயில் இரண்டாம் பிராகாரம் வடபுறச் சுவரில் உள்ளது. மனுவேந்தன் மந்திரியான உபயகுலாமலன் வம்சத்தனுன பாலையூருடையான் சந்திரசேகரன் ஆதிவிடங்கனுன குலோத்துங்க சோழ மகாபலிவாணராயனுக்கு 120 குழி மனையும் மாளிகையும் பாலையூரில் தரப்பெற்றதை இக் கல்லெழுத்து விவரிக்கிறது. இது கி. பி. 1118 முதல் 1113 வரை அரசாண்ட விக்கிரமசோழரின் 5-வது ஆட்சியாண்டில் அளிக்கப்பெற்ற சாசனம் ஆகும்.

## இச் சாஸனத்தினின்று அறிவன

மனு திருவாரூரில் இருந்து அரசு புரிந்தவர் என்றும், மனுவின் மந்திரியின் பெயர் இங்கனுட்டுப் பாலையூடையான் உபயகுலாமலன் என்றும், மனுவின் மகன் பெயர் பிரிய-விருத்தன் என்றும், மனுவின் மந்திரி வம்சத்தவன் - விக்கிரம சோழன் காலத்தில் இருந்தவன் - பாலையூர் உடையார் சந்திரசேகரன் ஆதிவிடங்கனுன குலோத்துங்க சோழ மகா பலிவாணராயர் என்பவர் ஆவர் என்றும் இக்கல்லெழுத்துப் பகுதியினின்று அறிகிறோம்.

## கன்றிழந்த பசுவின் சிற்பம்

திருவாரூர்த் திருக்கோயிலில் இவ் வரலாற்றை நினைவுப் படுத்தும் சிற்பம் இருக்கின்றது. ஒரு கற்றேர், பசு, கன்று; கன்றை இழந்த பசு கீழ் நோக்கிய பார்வையுடையது; அப் பார்வை கவலைக்குறியுடையது. இச் சிற்பமும் இச்சரிதத்தை நினைவுறுத்தும் சாதனங்களில் ஒன்று.

## முடிப்புரை

இங்ஙனம் மகாவம்சத்திலும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பழந்தமிழ் நூல்களிலும், சோழர் கல்லெழுத்திலும், திருவாரூர்த் திருக்கோயிற் சிற்பத்திலும், பெரிய புராணத்திலும் விளக்கம் பெறும் மனுநீதிச் சோழர் வரலாற்றை நினைவு கூர்ந்து மக்கள் பசுக்களைப் போற்றி ஆபயன் வளர்ப்பாராகுக.

# 5. முதலாம் விக்கிரமாதித்தனின் கத்வல் பட்டயங்கள்

## சாளுக்கியரும் பல்லவரும்

தக்காணத்தில் ஆண்ட பழைய அரச பரம்பரையினருள் சளுக்கியர் சிறப்பிடம் பெறுவர். இம்மரபினர் வாதாபியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவர்; பெருவலியும் பெருவீரமும் படைத்தவர். இவர்களுடைய கொடி சூகரம். அதாவது பன்றியாகும். இம்மரபினருள் முதலரசன் விசயாதித்தன் என்பவனுவன். இவனும் இவனுக்குப்பின் ஆண்ட அரசர்களும், காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ அரசருடன் இடையுருது போர் செய்தவராகவே காணப் பெறுகின்றனர். பல்லவ அரசருள் கி.பி. 615 முதல் ஆண்டவன் மகேந்திரவர்மன் எனப் பெறுவன். அவன் காலத்துச் சாளுக்கிய அரசன் இரண்டாம் புலகேசி. இவன் கி.பி. 609முதல் 642 வரை ஆண்டவன். இப்புலகேசி, மகேந்திரவர்ம பல்லவனுக்குத் தோற்று ஓடினும், பின்னர் இவன் மகன் நரசிம்மவர்மன்(கி.பி. 630–668) அரசு செய்த காலத்திலும் மீண்டும் படையெடுத்து வந்து தோற்றுச் சென்றவன். இப் புலகேசி காலத்தில்தான் வாதாபி பல்லவ வீரர்களால் (ஏறத்தாழக் கி. பி. 640ல்) அழிக்கப் பெற்றது. இப் புலகேசியின் மகன், விக்கிரமாதித்தன் I (655-680) எனப் பெறுவான். இவனும், நரசிம்ம பல்லவ அரசனுடைய பேரனுகிய பரமேசுவரவர்மன் (670–685) காலத்தில் பல்லவ நாட்டின் மேல் படையெடுத்துக் காவிரிக் கரை வரையிலும் வந்தான்; உரகபுரம் என்னும் இடத்தில் பாடி வீடு அமைத்துக் கொண்டான்.

## கத்வல் பட்டயம்: குறிப்பு

முதல் விக்கிரமாதித்தன் உரகபுரத்தில் இருந்த காலத்தில் கொடுக்கப் பெற்றவையே கத்வல் பட்டயங்கள். இவை மூன்று செப்பேடுகள் கொண்டவை; விளிம்புகள் சிறிது உயர்ந்தவை; நீளம் 9 அங்குலம்; அகலம் நடுப்பகுதியில் $4\frac{1}{8}$''; இரண்டு முனைப்பகுதிகளும் $4\frac{1}{4}$''. இம்மூன்று செப்பேடுகளும் $\frac{3}{8}$'' கனமுள்ள $3\frac{1}{2}$'' வளையத்தில் கோக்கப்பட்டவை. வளையத்தின் முனைகள் ஒரு அங்குலம் விட்டமுள்ள முத்திரையுடைய செம்பினுல் பிணிக்கப்பட்டுள்ளன. அம் முத்திரை பன்றி ஓடுவது போன்ற உருவத்தைத் தன்னகத்தே கொண்டது. முதல் ஏட்டிலும் இறுதி ஏட்டிலும் உட்புறத்தில் எழுதப்பட்டுள்ளன. இச் செப்பேடுகளின் எடை 160 தோலா.

## கிடைத்தமையும் ஆய்வும்

இச் செப்பேடுகள் ஒரு பள்ளி மாணவரிடம் இருந்தன. இவை ஐதராபாத் பகுதியில் கத்வல் என்ற அவன் ஊரில் அவன் வீட்டில் இருந்தன; வயல்களிலிருந்து இவை கிடைக்கப்பெற்றனவாம். இவற்றைக் கர்நூல் கலெக்டர் வழியாகப் பெற்று, ராவ்பகதூர் திரு. வெங்கையா அவர்கள் படியெடுத்துக் கொடுக்கப், பேராசிரியர் E. Hultzsch Ph. D. அவர்கள் ஏறத்தாழ 1909-ல் ஆய்ந்து Epigraphia Indica Volume Xல் பக்கம் 100–106ல் ஆய்வுரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும் தந்துள்ளனர். உல்ஷ் துரை எழுதிய ஆய்வுரையை ஒட்டியே இங்கு எழுதப் பெறுகின்றது. இச் செப்பேடுகளில் கண்ட மொழி சமஸ்கிருதம் - செய்யுளும் வசனமுமாம்.

## ஆங்கில வழி தமிழாக்கம்

(வரி 1) ஓம் ஸ்வஸ்தி (செய்யுள் 1) (வராகாவதாரத் தோத்திரப்பாடல்).

(வரி 5) அசுவமேதம் செய்தவனும் சளுக்கிய மரபினை அணி செய்தவனும் ஆகிய புலகேசி வல்லப மகாராஜனுக்குப் ப்ரபவுத்திரனும்,

(வரி 6) வனவாசி முதலாகிய பகை மன்னருடைய நாடுகளைத் தன் பராக்கிரமத்தால் வென்று, தன் புகழ் நிறுவிய கீர்த்திவர்ம பிருதிவி வல்லப மகாராஜற்குப்பேரனும்,

(வரி 8) வடபுலத்துக்குத் தலைவனாகிய புகழ் பொருந்திய ஹர்ஷவர்த்தனரை வென்று பரமேசுவரன் என்ற விருது பூண்ட சத்யாச்ரய ஸ்ரீ பிருதிவி வல்லவ மகாராஜாதிராஜ பரமேசுவரற்கு அன்பு மகனும் ஆகத் திகழ்ந்தவன்.

(வரி 10) இவன் பிறர் உதவியின்றிச், சித்திரகண்ட என்ற தன் குதிரையின் மேலேறிப், பகை மன்னருடைய இரத்தத்தைப் பருகுவதற்குரிய நாக்குப் போலத் திகழ்ந்த கூரிய ஒளி பொருந்திய வாளை, ஆதிசேடன் போல் உலகப்பொறை தாங்கும் தன் புயங்களில் ஏந்திப் பல போர்களை நடத்திப் பல அரசர்களை வென்றவன்; விழுப்புண் பலவும் பெற்றவன்; மூவரால் தான் பெறமுடியாது போகவிருந்த அரசுரிமையைத் தனக்குரியதாக ஆக்கிக்கொண்டு, நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டவன். பிராம்மணர்களுக்கும் கோயில்களுக்கும் முன்னர் உரியனவாய்ப் பின் மூவர் நாடுகளில் அடங்கிய சொத்துக்களை மீண்டும் பிராமணர்களுக்கும் கோயில்களுக்கும் உரியனவாகுமாறு உத்தரவிட்டவன்.

(செய்யுள் 2) (இவன் யார் எனின், இவன்) அநிவாரித விக்ரமாதித்யன்; பல பகுதிகளிலுள்ள பகை மன்னர்களுடன் போரிட்டுத் தன் வமிசத்தாருக்குரியனவாகிய அரசுரிமையை மீட்டுக்கொண்டு, பரமேசுவரன் என்ற விருதினைப் பூண்டவன்.

(வரி 17) அன்றியும்,

(செய்யுள் 3) ஸ்ரீ வல்லபன் நரசிம்மனுடைய பெருமையை அழித்தான்; மகேந்திரனுடைய வல்லமையை மறையச் செய்தான்; ஈசுவரனைத் தந்திரத்தால் அடக்கினான்.

(செய்யுள் 4) இவன் தென்னாடு என்னும் கன்னிப் பெண்ணை அவளுடைய ஒட்டியாணம் எனத் திகழும் காஞ்சியைக் கைப்பற்றி வலிதில் மணக்க முயன்று அவட்குக் கட்டில்(?) ஆகத் திகழ்ந்த பல்லவரை நசுக்கினான்.

(செய்யுள் 5) ரணரசிகனாகிய இவன் வலிமை பொருந்திய சிறந்த தோள்களையுடையவனாய், மகாமல்லனுடைய வமிசத்தை அழித்து ராஜமல்லன் என்ற விருது பொருத்தமாகப் பூண்டான்.

(செய்யுள் 6 ) இவன் ஈசுவர போதராஜாவை (போத்தரசனை) வென்று, ஏறமுடியாத மதில்களை ஏறித், தகர்க்க முடியாத மதில்களைத் தகர்த்துக், கடக்க முடியாததும் ஆழமானதுமான அகழியைக் கடந்து, தென்னாட்டின் ஒட்டியாணமாகத் திகழ்ந்த காஞ்சியைக் கைப்பற்றினான்.

(வரி 22 ) உலக வலய முழுவதையும் தன் போராற்றலால் வென்றவனாகிய இந்த விக்ரமாதித்ய சத்யாச்ரய ஸ்ரீ ப்ரிதிவி வல்லப மகாராஜாதிராஜ பரமேசுவரன் எல்லா மக்கட்கும் உத்தரவிடுவதாவது:-

( வரி 23 ) நீங்கள் அறிவீராகுக: சகரயாண்டு 596 க்கு மேற் செல்லா நின்ற நம்முடைய வருஷவர்த்தனம் யாண்டு இருபதாவது நிகழுங்கால், நம்முடைய வெல்படையானது சோளிக விஷயத்தில் புகுந்து, காவிரித் தென்கரையில் உரகபுரத்தில் பாடிவீடு கொண்டு தங்கி இருக்கையில், வைசாக நிறைமதி நாளில் செடுல்லி என்ற ஊரில் அரச அளவுப்படி 50 நிவர்த்தனம் பரப்புள்ள வயலும், ஒரு கண்டுக நெல்லும், கங்கமஹாதேவி யின் வேண்டுகோட்படி, காப்பியகோத்திரத்தவனும் ஈசுவர ஷடங்கவித் என்பவரின் பேரனும் சுவாமி சந்தசர்மனின் மகனும் ஆன கன்ஹசர்மனுக்கு நம்மாலளிக்கப்பெற்றது.

( வரி 28 ) அவ்வூரிலேயே வத்ஸ கோத்திரத்தவனும் மஹி ஸரஸ்வாமின் என்பவரது பௌத்திரனும், தாதம்ம

ஸ்வாமின் என்பாரது புத்திரனும் ஆன பாதர்மஸ்வாமின் என்பாருக்கு அரசாங்க அளவின்படி 50 நிவர்த்தனம் பரப்புள்ள வயல் அளிக்கப் பெற்றது.

( வரி 30 ) அவ்வூரிலேயே 50 நிவர்த்தனம் பரப்புள்ள வயலும் ஒரு சலகெ நெல்லும் கொன்ன சர்மனுக்குக் கொடுக்கப் பெற்றது.

( வரி 31 ) உலக வாழ்வும் அரசபோகமும் பிறவும் மின்னொளிபோல் நிலையற்றது என்பதைக் குறிக்கொண்டு சந்திரனும் சூரியனும் பூமியும் கடலும் உள்ளளவும் நம்மரச வமிசத்தவரும் பிறரும் தம்புகழை நிலை பெறுத்தற்பொருட்டுத் தம் மறங்களினின்று இதனை வேறுபடுத்தாது இக் கொடையையும் காக்கக் கடவர்.

(வரி 33) வேதம்துறை செய்தானாகிய வியாசர் சொல்லுகிறார். (செ. 7-9)

(செய்யுள் 10) சளுக்கிய வமிசத்தில் பிறந்தவன், பல்லவ மரபினை அழித்தவன், பகைவர்களை அலைப்பவன், உத்தரவுகளுக்கு எவராலும் எதிர்ப்பில்லாதவன் - அளித்தது இச்சாஸனம்.

(வரி 37) மஹாஸந்தி விக்ரஹிக ஜயஸேநனால் இச்சாஸனம் எழுதப்பெற்றது.

(வரி 38 ஆஜ்ஞப்தியாகிய குந்தஸ்வாமினுக்கு அரசனால் இச்சாஸனம் தரப்பெற்றது. ஓம் நமோநம: நமஸ்ஸகலவிதே!

## அறியும் செய்திகள்

விக்கிரமாதித்தன், புலகேசியின் பிரபவுத்திரன்; கீர்த்திவர்மனின் பேரன்; சத்யாச்ரயனுக்கு (இரண்டாம்புலகேசிக்கு) மகன். இச்சத்யாச்ரயன் ஹர்க்ஷவர்த்தனனைத் தோற்கடித்தவன்.

'சித்திர கண்ட' என்பது விக்கிரமாதித்தனுடைய குதிரையின் பெயர்.

விக்கிரமாதித்தனுக்கு அநிவாரித, ஸ்ரீ வல்லப, ரணரசிகர ராஜமல்ல என்ற விருதுப் பெயர்களுண்டு.

விக்கிரமாதித்தன் பல்லவ அரசர்களாகிய முதலாம் நரசிம்மவர்வன், இரண்டாம் மகேந்திரவர்மன், பரமேசுவர வர்மன் ஆகியோரை வென்றவன். காஞ்சிபுரம் தக்ஷண திசைக்குக் காஞ்சி எனும் அணிகலம் (ஒட்டியாணம்) போன்றது; அதன் மதில் ஏறமுடியாதது; அதன் அகழி ஆழமானது, கடக்க முடியாதது.

இச்செப்பேடுகள் சகரயாண்டு 596-ல் கொடுக்கப் பெற்றன; அதாவது ஆங்கிலயாண்டு 674; அது விக்கிரமாதித்தனது 20ஆவது ஆட்சியாண்டாகும். இவை சோழநாட்டில் காவிரிக்குத் தென் கரையில் அமைந்த உரகபுரத்தினின்று அளிக்கப் பெற்றன.

சோளிக விஷயம் என்பது சோழ மண்டலத்தைக் குறிக்கும்.

உரகபுரம் என்பது உறையூர். இவ்வூர் இப்பெயரால் காளிதாசரின் இரகுவம்சத்தில் பாண்டியரது தலைநகரமாகக் குறிக்கப் பெற்றது என்றும், உரகம்-பாம்பு, எனவே உரகபுரம் நாகப்பட்டினம் ஆதல் கூடும் என்றும், Dr உல்ஷ் கருதுவர். திரு. வெங்கையா அவர்கள் உறையூரையே உரகபுரம் என்பர். உறையூர்க்கு அண்மையிலுள்ள பெருவளநல்லூரில் நடந்த போரில் இவ்விக்கிரமாதித்தன் தோற்று ஓடியதாகத் தெரியவருவதால் உறையூரே உரகபுரம் எனப் பெற்றதாதல் வேண்டும் என்பது உறுதி.

விக்கிரமாதித்யனுடைய மனைவி பெயர் கங்கமஹாதேவி. கங்கமஹாதேவியின் விருப்பத்தின் படியே கன்ஹ சர்மன்,

பாதம்மஸ்வாமின், கொன்ன சர்மன் ஆகியோர்க்குச் செடுல்லி என்ற ஊரில் தனித்தனி 50 நிவர்த்தனம் வயல் தானமாக அளிக்கப் பெற்றது.

நிவர்த்தனம் :ஒருவன் குறிப்பிட்ட நிலப்பகுதியினின்று புறப்பட்டுக் குறிப்பிட்ட நேரத்துக்குள் நடந்து புறப்பட்ட இடத்தை அடைந்தால், அவனால் எல்லைகோலப்பட்ட நிலப் பரப்பே நிவர்த்தனம் எனப் பெறும்.

கன்ஹசர்மன், ஈச்வர ஷடங்கவித் என்பாரின் பேரன் என்றுளது. ஷடங்கவித் என்பது வேதாங்கங்கள் ஆறிலும் வல்லவர் என்றும் பொருள்படும். (சுந்தரமூர்த்தி சுவாமி களின் தந்தையாரும் சடங்கவி சிவாசாரியர் எனப்பெற்றமை இங்குக் கருதுக).

இச்செப்பேடுகளை எழுதியவன் ஜயசேன என்ற பெய ரினன். இவன் ஒரு அமைச்சன் போலும். இவன் அலுவல் மஹாஸாந்தி விக்ரஹிக் எனப்பெற்றது. ஸந்திவிக்ரஹம் பஞ்சதந்திரங்களுள் ஒன்று. பிரித்தலும் பேணிக்கொளலும் இவர் செய்வன.

இதில் ஆஜ்ஞப்தியாக இருந்தவன், குந்த ஸ்வாமின் என்ற பெயரினன். ஆஜ்ஞப்தி என்பது ஆணத்தி என்று தமிழ்க் கல்லெழுத்துக்களில் பயிலும். ஆணத்தி - அரசனது கட்டளையை நிறைவேற்றுபவன்.

ஸகலவிதே-முற்றுமுணர்ந்தவன். நம-வணக்கம்.

## சில பொதுசுலோகங்கள்

சுலோகம், 1

ஜயத்யா விஷ்க்ருதம் விஷ்ணோ: வாராஹம் புரோபி தார்ணவம் த³ ர்ஷிணோந்நத த³ண்ஷட்ராக் ²ராவிஸ்ராந்த பு⁴வநம்வபு :

இதன்பொழிப்பு: பன்றியால் கலக்கப்பட்ட கடல் சூழ்ந்ததும், தென்புறம் மேடான, கோரைப்பல்லில் இருக்கும்படியானதுமான உலகத்தை உடைய, பிரகாசம் பொருந்திய விஷ்ணுவின் உடலானது விளங்குகிறது.

## சுலோகம் 7, 8, 9

ப3ஹுவ பி4 ரவ்வஸுதா4 தத்தா ராஜபி4ஸ்ஸக2ராதி3 பி:
யஸ்ய யஸ்ய யத3ா பூமிஸ் தஸ்ய தஸ்ய தத3ா ப2லம்

இதன்பொழிப்பு: சகரர் முதலிய பல அரசர்களாலே பூதானம் செய்யப்பட்டது; எவரெவர் எவ்வளவு பூமியைத் தானம் செய்தனரோ, அவ்வளவிற்கு அவர்கள் பயன் அடைகின்றார்கள்.

ஸ்வந் த3ாதும் ஸுமஹச்ச யக்யம் த்ஹு க3 மந்யஸ்ய
பாலநம் தாநம் வா பாலநம் வேதி தா3நாக்சரயே யோநு
பாலநம்

இதன் பொழிப்பு: தன் பொருளைப் பிறர்க்கு அளிக்கலாம். பிறர் தானத்தைப் பரிபாலனம் செய்வது துன்பமானது. தானம் சிறந்ததா காத்தல் சிறந்ததா என்று ஆலோசித்தால் காத்தலே மிகச் சிறந்தது.

ஸ்வத3த்தாம் பரத3த்தாம் வாயோ ஹரேத வஸுந்தராம்
ஷஷ்டிம் வர்ஷி ஸஹஸ்ராணி விஷ்டாயம் ஜாயதெ க்ரிமி:

இதன் பொழிப்பு: "தான் கொடுத்ததாயினும், பிறர் கொடுத்ததாயினும் ஒரு தரம் கொடுத்த தானத்தைக் கைப்பற்றுகிறவன் இந்தப் பூமியிலே அறுபதினாயிர வருஷம் புழுவாகப் பிறந்து உழல்வான்" (தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் II, பக்கம் 1058.)

## முடிப்புரை

இக்கத்வல் பட்டயங்களின் வரலாற்றுச் சிறப்பு இதுகாறும் கண்டவற்றான் நன்குதெளியப்படும். விக்கிரமாதித்தன்

உரகபுரத்தினின்று பாண்டியனைத் தாக்கி "நெல்வேலி"ப் போரில் தோற்றான்; பாண்டியனிடம் தோற்றவன் பின்னர்ப் 'பெருவளநல்லூர்'ப் போரில் பல்லவனிடம் தோற்றனன் என்பதும் வரலாற்றில் கண்ட உண்மை. இங்ஙனம் வரலாற்று மூலங்களைக் கண்டு ஆய்ந்து வரலாறு கட்டிய பேராசிரியர்களின் உழைப்பு மறக்கற்பாலதன்று.

# 6. இரண்டாம் நந்திவர்மனின் காசாக்குடி செப்பேடுகள்

## பொது

இச் செப்பேடுகளைக் காரைக்காலுக்கு 4 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காசாக்குடி என்ற ஊரில் 1879-ல் பாண்டிச்சேரி (புதுச்சேரி)யினரான M. Jules de la Fon என்பவர் கண்டுபிடித்துப் படி எடுத்துக்கொண்டார். அவற்றை ஆதாரமாகக் கொண்டு பாரிஸ் பேராசிரியர் Julien Vinson அவர்கள் 1891ல் தமிழ்ச் சாசனங்களின் மாதிரி (Specimen de Paleographic Tamoule) என்று ஒரு ஆய்வுரை எழுதி வெளியிட்டார். அவ்வாய்வுரையின் படி யொன்று பேராசிரியர் உல்ஷ் (E. Hultzsch, Ph. D.) அவர்களுக்குக் கிடைத்தது. இவ்வாய்வுரையினால் அச் செப்பேடுகளின் சிறப்பையறிந்து உல்ஷ் துரைமகனார், இந்தியாவில் பிரஞ்சுப் பகுதிகளின் கவர்னர் அவர்கள் வழியாக, 1895-ல் அச் செப்பேடுகளின் சொந்தக்காரரிடம் இருந்து அவற்றைப் பெற்றுப் படி எடுத்துக் கொண்டார். அச் செப்பேடுகளின் மூலம், ஆங்கில மொழி பெயர்ப்பும், ஆய்வுரைகளும் 1895-ல் தென்னிந்திய சாஸனங்கள், தொகுதி II, பகுதி III, பக்கம் 342 முதல் 361 வரை அச்சிடப் பெற்றுள்ளன.

இப்பொழுது இச்செப்பேடுகள் சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. இச்செப்பேடுகள் குறித்த விரிவான விளக்கவுரை முப்பது செப்பேடுகள் என்ற நூல் 141-180 பக்கங்களில் உள்ளன.

அவை பதினொரு செப்பேடுகள், ஒரே வளையத்தில் கோக்கப் பெற்றிருந்தன. அந்த வளையத்தின் மேல் நந்திச் சின்னம் பொறிக்கப் பட்டிருந்தது; நந்தி இடதுபுறம் திரும்பியிருப்பது; அதன் மேல் இலிங்கம் இருந்தது. அச் செப்பேடு

களில் வரி 1–104 வரை வடமொழி; 105–133 வரி தமிழ்; 133–136 வடமொழி; 137-ம்வரி தமிழ்; இறுதி சில எழுத்துக்கள் வடமொழி.

## நுதலிய பொருள்

வரி 1–16 கடவுள் வாழ்த்து; வரி 17–34 பிரமன் முதல் அசோகன் வரை ஆண்டமை; வரி 34-44 பல்லவ குலத்தின் புகழ்; வரி 45–50 ஸ்கந்தவர்மன் முதலிய 8 அரசர்கள் ஆண்டமை; வரி 50-62 சிம்மவிஷ்ணு முதல் இரண்டாம் பரமேசுவரன் வரை ஆண்டமை; வரி 62-64 நந்திவர்மன் அரசனுனது; வரி 64-66 பீமவர்மன் மரபினர்; வரி 66–80 நந்திவர்மனின் சிறப்பியல்புகள்; வரி 80 சாஸனம் கொடுத்த ஆண்டு; வரி 80–85, வரி 92–97 ஜேஷ்டபாத சோமயாஜியின் சிறப்புக்கள்; வரி 85–92 பிரம்ஹஸ்ரீ ராஜன் சிறப்புக்கள்; வரி 97–102 தானம் பெற்ற ஊர்பற்றியவை; வரி 103 ஆஜ்ஞப்தி; வரி 104–133 தமிழ்ப் பகுதி; வரி 133–137 வடமொழிச் சுலோகங்கள்; வரி 137–138 நிலப்பரப்பு. இப்பட்டயம் "ஸ்வஸ்தி ஸித்திரஸ்து நம:" என்று முடிகிறது.

## சிம்மவிஷ்ணு முதல் பரமேசுவரன் II வரை (வரி 50–62)

இப் பகுதியில் 7 வடமொழிச் செய்யுட்கள் உள்ளன; சிம்மவிஷ்ணு முதல் இரண்டாம் பரமேசுவரன் வரை ஆண்ட பல்லவ அரசர்களைப் பற்றிக் கூறப் பெற்றவை பின்வருமாறு:

### சிம்மவிஷ்ணு (செ. 20)

உலகில் சிங்கம் போன்று (அவநி சிம்மன்) சிம்மவிஷ்ணு தோன்றிப் பகைவரை அழிப்பதில் ஈடுபட்டான்; களப்பிர, மாளவ, சோள, பாண்டிய, சிங்கள, கேரளர் ஆகியோரை வென்றான்.

மகேந்திரவர்மன் I (செ. 21):

பின் மகேந்திரவர்மன் உலகை ஆண்டான். இவன் மகேந்திரன் போன்று புகழ் படைத்தவன்; இவனுடைய ஆணையை எல்லோரும் மதித்தனர்; இவன் தன் பகைவரைப் புள்ளலூரில் அழித்தான்.

நரசிம்மவர்மன் I [செ. 22]

வெற்றி வீரன் நரசிம்மவர்மன் பிறந்தான்; இலங்கையை வென்று இராமனைக் காட்டிலும் மேம்பட்ட புகழ் பெற்றான்; செருக்கிய பகைவர் குலத்துக்குத் தூமகேது போன்றவன்; வீரத்தால் வாதாபியை வென்று (வாதாபி என்னும் அசுரனை அழித்த) அகத்தியனைப் போன்றவனாயினான்.

மகேந்திரவர்மன் II செ. 23 )

இவனுடைய நீண்ட கைகள் பகைவர் கூட்டத்துக்கு இடி போன்றவை; இவன் காலமுதல் கோயில்களின் நன்மைக்காகவும் பிராமணர்க்கும் தர்ம கர்மங்கள் தொடங்கப் பெற்றுச் சிறந்தன.

பரமேஸ்வர போத வர்மன் I ( செ. 24 )

இவன் இச்சைப்படியே இவ்வுலக அரசர்கள் நடந்தார்கள்; இவன் பூதி (செல்வம்) உடையவன்; பூதர்க(மக்க)ளுக்குத்தலைவன்; நந்தி இலச்சினையுடையவன்; கட்வாங்கத்தைக் கொடியில் உடையவன்; மலைபோல் வன்மையுடையவன் [பூதி (விபூதி) தரித்தவனும், பூதங்களுக்குத் தலைவனும், நந்தியை உடையவனும், கட்டுவாங்கங் கொண்டவனும், மலையில் வசிப்பவனும் ஆன சிவனுக்கு ஒப்பானவன், இவ்வரசன்.]

**நரசிம்மவர்மன் II** (இராஜசிம்ஹன்) (செ. 25)

இவன் பரமேசுவரனே அவதாரம் எடுத்தாற் போன்ற வன்; உடல்வலியாலும் பெயராலும் நரசிம்மாவதாரத்தை யொத்தவன்; இந்த க்ஷத்திய சூளாமணி தேவர்க்கும் பிரா மணர்க்கும் செல்வத்தை யளித்தான்; பக்தியோடு தனக்குரிய பூதேவியை நான்மறையாளர் நுகருமாறு கொடுத்தான்.

**பரமேசுவரவர்மன் II** ( செ. 26 )

விரும்பிய செல்வங்கள் எல்லாவற்றையும் பெற்றான்; கலி யின் கொடுமைகளை வென்றான்; பிரகஸ்பதி விதித்த வழியில் உலகத்தை நடத்தினான்.

**நந்திவர்மன் அரசனானது** ( வரி 62-64 ) (செ. 27)

பகைவர்களைத் தன் ஆணையாலேயே அடக்கிய பரமேசு வரன் (II) ஆண்ட ராஜ்யத்தை நந்திவர்மன் ஆண்டான்; அவன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டான் (-பிரஜாபி:); அவன் அறிவினால் பெருமதிப்புக்குரியவன்; கடல் போன்ற பல்லவ குலத்தில் முழுமதி போன்றவன்.

**நந்திவர்மனின் முன்னோர்** (பீமவர்மன் மரபினர்: வரி 64-66)

ஆறாவது (தலைமுறையினன்—ஷஷ்ட: செ. 28) ஸ்ரீ சிம்ஹ விஷ்ணுவின் தம்பி பீமவர்மன்; ஐந்தாவது (-பஞ்சம:) மக்க ளால் புகழப்படும் பல்லவேந்திரனாகிய புத்தவர்மன்; நான்கா வது, இந்திரன் போன்ற ஆதித்தவர்மன்; மூன்றாவது, கோவிந்தவர்மன்; இரண்டாவது (-த்வீதிய:) மக்களுக்கு அடைக்கலம் தரும் ஹிரண்ய வர்மன். (குறிப்பு: இவ்விரணிய வர்மனே இரண்டாம் நந்திவர்மனின் தந்தை.)

**நந்திவர்மனின் சிறப்பியல்புகள்** ( வரி 66-80 )

ஸ்ரீதரன்; போரில் விஜயன்; கர்ணீசுதன் போல் பல கலை களிலும் வல்லவன்; அம்பு ஏவுதலில் இராமன்; யானை

நூலறிவு வாத்ய விஷயங்கள் ஆகியவற்றுள் வத்ஸராஜன் போன்றவன்; வாமவிலோசனர் (பெண்கள்) நடுவில் காமன்; கவி புனைவதில் வல்லவன்; தந்திரங்களில் (பிரஸ்பதி) நயபரன்; மக்களை மகிழ்விப்பதில் தருமன் (யுதிஷ்டிரன்); பல்லவ குலத்தைக் காப்பவன்; சாத்விக சார்வபௌமன் (பிறவி மன்னன்); மற்போரிலும் விநயகுணங்களிலும் உயர்ந்தவன்; பீம வர்மன் மரபில் ஹிரண்ய வர்மனது மகன்; அரிசரணபரன்; தூய தாய் வயிற்றில் பிறந்தவன்; லக்ஷணங்களை யுடையவன்; ரோஹிணியின் மகன்; நரேந்திரன்.

பரமேஷ்டியின் பாதபங்கயத் தூளியைத் தன் தலையில் தரிப்பவன்; தேவர்களையும் பிராமணர்களையும் பூஜை செய்பவன்; கலியின் கொடுமைகளினின்று விடுபடுபவன்; பகை மண்டலங்களை வன்மை என்னும் நெருப்பால் கொளுத்துபவன்; மித்ரமண்டலங்களை அன்பு நீர்பாய்ச்சி வளர்ப்பவன்; ஒரு கை எல்லா புவனங்களையும் காக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. வணங்கும் அரசர்களது முடிகளின் மணிகள் இவனது திருவடிகளில் படுகின்றன. இவன் கற்பக விருக்ஷம் போன்றவன்; க்ஷத்திரிய மல்லன்; பல்லவ மல்லன்; பப்ப பட்டாரகரின் திருவடிகளைத் தியானிப்பவன்; நந்தி வர்மன் என்னும் பெயரினன்; பெருங்குணக் கடலைப் பொங்கியெழச் செய்கின்ற திங்கள் போன்றவன்; மகாராஜன்; ராஜாதிராஜ பரமேசுவரன்.

## ஜ்யேஷ்டபாத சோமயாஜி

தானம் பெற்றவர், ஜேஷ்டபாத ஸோமயாஜி என்று வடமொழிப் பகுதியிலும் (வரி 93), தமிழ்ப் பகுதியில் (103) செட்டிறெங்க ஸோமயாஜி என்றும் குறிக்கப் பெற்றுள்ளார். இவர் கடல் போன்ற வேதங்களைக் கற்றவர்; இனிய ரசம் பொருந்திய ஸாம வேதத்தைத் தனது ரசத்தால் கானம் செய்பவர்; கல்பம் வியாகரணம் ஜோதிஷம் நிருக்தம் சிக்ஷை சந்தஸ் ஆகிய ஆறு வேதாங்கங்களையும் செம்மையாக அத்யயனம் செய்தவர்; பதம் வாக்கியம் பொருள் ஆகியவை நன்கு அறிந்

தவர்; சுருதிஸ்மிருதிகளைக் கரைத்துக் குடித்தவர்; கர்ம காண்ட ஞான காண்டத்தில் பாண்டித்ய முடையவர்; உலக யுக்திகளையும் கலைகளையும் நன்கு அறிந்தவர்; காவ்யம் நாடகம் இதிகாசம் புராணங்களில் சிறப்பறிவு படைத்தவர்; சர்வ கர்மாநுஷ்டானங்களை யுடையவர்; உலகத்துக்கு விளக்குப்போன்றவர்; மிக்க அடக்கமுடையவர்; இரு பிறப்பாளரிற் சிறந்தவர்; சாந்தோக சூத்திரத்தவர்; பாரத்துவாஜ கோத்திரத்தவர்; வாஜபேயம் முதலிய யாகங்கள் செய்தவர்; துண்டகராஷ்டிரத்தில் பிரமலோகம் போன்ற பூனியம் என்ற ஊரில் வாழ்பவர்; திருவேடந் தரிப்பதில் சிறந்தவர் (-வேஷ விசிஷ்டாய); பாவங்களில் தரித்திரர் (-தோஷ தரித்ராய); ஏக புருஷர் (ஒப்பற்றவர்); ஈருலகங்களையும் சிந்தை செய்பவர்; அறம் பொருளின்பங்களை (-திரிவர்க்கம்) அடைபவர்; நான்கு வேதங்களையும் கற்றவர்; பஞ்சமகா பூதங்களின் இயற்கை அறிந்தவர்;ஆறங்கங்களையும் அறிந்தவர்;பகலவனை ஒத்தவர் (–ஸப்தஸப்தி பிரதிமாய); நற்பண்புகளையுடையவர்; சிறந்த பிராணமர் (-ஸுப்ராஹ்மணாய).

## பிரம்மஸ்ரீராஜன்

இச் செப்பேடுகளில் விஜ்ஞப்தியாக இருந்தவன் பிரம்ம ஸ்ரீராஜன் என்பவன். இவன் உலகத்தில் தனி நண்பன் (–லோகைகமித்ராய); கடல் மணிகளையுடையது போல எல்லா நற்பண்புகளையுமுடையவன்; கம்பீரமுடையவன்; சீரும் திருப்பொலிவும் பொருந்தியவன்; கடுஞ்சொல்லன் அல்லன்; ஆண்களிற் சிறந்தவன்; இந்திரனுக்கு பிரஹஸ்பதி போலப் பல்லவ அரசனாகிய நந்திக்கு முதன் மந்திரி; உருவத்தாலும் நீதியாலும் அழகுடையவன்; அறிஞர்களில் சிறந்தவன்; திண்மையும் வீரமும் உடையவன்; பிரஹ்ம க்ஷத்திரிய குணங்கள் நிரம்பியவன்; சந்திரனும் நக்ஷத்திரங்களும் உள்ள வரை நந்தி போத்தராசாவிடம் பக்தியுடையவன்; குலத்தில் சிறந்தவன்; (குடும்பத்தில்) மூத்த மகன்.

[குறிப்பு: இவன் வடமொழிப் பகுதி வரி 91-இல் பிரஹ்ம ஸ்ரீராஜன் என்றும், வரி 103-இல் பிரஹ்மயுவராஜன் என்றும், தமிழ்ப்பகுதி வரி 106-இல் பிரஹ்மதுவராஜன் என்றும் குறிக்கப் பெற்றுள்ளான்.]

**தருமம்**

நந்திவர்மன் II என்னும் பல்லவ அரசனது இருபத்தி ரண்டாவது ஆட்சியாண்டில் (கி.பி.732ல்), பிரம்ஹஸ்ரீராஜன் என்னும் மந்திரியின் விண்ணப்பத்தால், கோரசர்மன் ஆணத்தியாகத் தொண்டைமண்டலத்தில் பூனியம் (பூண்டி) என்னும் ஊரவரான ஜேஷ்டபாத சோமயாஜி என்னும் அந்த ணர்க்குத் தொண்டை மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட் டத்துக் கொடுங்கொள்ளி என்ற ஊரை ஏகதீரமங்கலம் என்று பெயரிட்டு, முன் பெற்ருரை மாற்றித் தேவாதானப் பிரமதேயம் நீக்கிக் குடிநீக்கிப் பிரமதேயமாக அளிக்கப்பெற்றது. சே யாறு வெஃகா திரையனேரி ஆகியவற்றினின்று ஆற்றுக் காலும் வெள்ளக்காலும் தோண்டிக் கொள்ளலாம். இக்கால் களில் இருந்து குறங்கறுத்தும் குற்றம் பண்ணியும் கொண்டுண்டார் தண்டிக்கப்படுவர். இவரும் இவர் வழி யினரும் மாடமும் மாளிகையும் சூட்டோட்டால் கட்டிக் கொள்ளலாம். இவ்வூர் எல்லா வரிகளினின்றும் நீக்கப் பெற்றது. இவ்வூர்க்கு எல்லை: கிழக்கிலும் தெற்கிலும் பாலை யூர் (இந்நாளைய பாலூராக இருக்கலாம்); மேற்கு - மணற் பாக்கமும் கொள்ளிப்பாக்கமும்; வடக்கு - வெளிமானல்லூர்.

**பிரசஸ்தி** எழுதியவன்: திரிவிக்ரமன் (செ. 31)

இவன் மூன்று வேதங்களிற் சொன்னவண்ணம் கிரியை களைச் செய்பவன்; சகல சாஸ்திர உண்மைகளை அறிந்தவன்.

இச் செப்பேடுகளை எழுதியவன் (வரி 136): ஸ்ரீ பரமேசுவர மகா காஷ்டகாரி.

# 7. நிருபதுங்கவர்மனின் வாகூர்ச் செப்பேடுகள்

## வாகூர்ப்பதி

வாகூர் அல்லது பாஹூர் (Bahur) கடலூரினின்று புதுச்சேரிக்குச் செல்லும் பெருவழியில் புதுச்சேரிக்கு இப்பால் உள்ளது: இந்நாளில் வாகூர் சிற்றூராக இருக்கிறது. பெருவழிக்கு ஒருபுறத்தில் இரண்டு கல் தொலைவில் இருக்கிறது. பெருவழிக்கு இன்னொரு புறம் பழைய குளமும், பெருமாள் கோயிலும் காணப் பெறுகின்றன. இவ் வெல்லாப் பகுதிகளையும் பழைய வாகூர்ப்பதி கொண்டதாய்ப் பேரூராக இருந்திருத்தில் வேண்டும். இந்நாளைய வாகூரில் ஒரு சிவன் கோயில் உள்ளது; மூலேசுவரர் என்பது இறைவன் திருநாமம். இக் கோயிலில் மூன்றும் கிருஷ்ணன், முதல் இராசராசன், முதல் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன் ஆகியோர் கல்லெழுத்துக்கள் உள்ளன. (S. I. I. Vol. VII, No. 738 to 814; A. R. 171 to 187 of 1902.)

## வாகூர்ச் செப்பேடுகள்

வாகூர்ச்சிவன்கோயில் கோபுரத்துக்கு (Pagoda) 6மீடர் தொலைவில் கற் கட்டடத்துக்குள் ஒரு மீட்டர் ஆழத்துள் 5 செப்பேடுகள் கிடைத்தன. அவை 91.5 மி. மீ. உயரம் உள்ளவை; 201.9 மி. மீ. அகலமுடையவை; 4.1 மி. மீ. கனமுள்ளவை. ஒவ்வொரு செப்பேட்டிலும் 13.5 மி. மீ. குறுக்களவுள்ள துளையுண்டு; இடது பக்கத்தினின்று 9 மி. மீ. தொலைவில் அத்துளை இருக்கிறது. எல்லாச் செப்பேடுகளையும் பிணிக்கும் வளையம் கிடைத்திலது; வளையத்தின் இரு முனைகளையும் பிணித்து வைத்திருக்கக்கூடிய முத்திரையும் கிடைக்கப் பெறவில்லை. அவை அங்குச் செப்பேடுகள் புதை

யுண்டதற்கு முன்னமேயே காணுமற் போயிருத்தல் கூடும், இரண்டாவது செப்பேட்டின் இரண்டாவது பக்கமும் மூன்ரு வது செப்பேட்டின் முதற்பக்கமும் சிதைந்துள்ளனவாகும். இங்ஙனம் இச்செப்பேடுகள் திரு. M. Jules Delafon என்பவ ரால் 1879-ல் கண்டுபிடிக்கப்பட்டன. அவை பாரிஸ் மாநகரில் Bibliotheque Nationalesல் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள் ளன. (Epigraphia Indica Vol. XVIII, பக்கம் 5.)..

## ஆய்வாளர்

1905ல் பாரிஸில் வெளியிட்ட கீழைநாட்டு நினைவுகள் (Memoires Orientaux) என்ற சுவடியில் திரு M. J. வின்சன் (M. Julien Vinson) என்பார் எழுதிய 9-ம் நூற்ருண்டுக்குரிய பாகூர்க்கல்லூரி (Le College de Bahour au IXe siecle) என்ற கட்டுரையில் பக்கம் 211–263ல் பாகூர்ச்செப்பேடுகள் குறித்து எழுதப் பெற்றுள்ளன. Epigraphia Indica Volume IV-ல் பக்கம் 180–81ல் இச் செப்பேடுகள் குறித்துப் பேராசிரியர் E. உல்ஷ் (Hultzsh) அவர்கள் சில குறிப்புக்கள் தந்துள்ளார். ராவ்பகதூர் H. கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் 1917-ல் S. I. I. Vol. IIல் பக்கம் 513–17ல் செப்பேட்டுப் பாடம் தந்து ஆராய்ச்சி முன்னுரையும் எழுதியுள்ளார். இச்செப்பேடுகளின் வரலாற்றுச் சிறப்புக்கருதிப் பேராசிரியர் உல்ஷ் அவர்கள் Epigraphia Indica, Volume XVIII-ல் பக்கம் 5–15ல் ஆங்கில எழுத்துருவில் பாடமும் ஆங்கிலமொழி பெயர்ப்பும் ஆய்வு ரையும் 1925ல் சிறப்புற எழுதியுள்ளார். திரு R. கோபாலன் அவர்கள் M.A.. பல்லவர் வரலாறு என்ற நூலில் பக்கம் 140 141, 199, 200 ஆகிய பக்கங்களிலும் Dr. C. மீனுட்சி அவர்கள் M.A., 'பல்லவர்கால ஆட்சியும் வாழ்க்கையும்' (Administration & Social Life under the Pallavas) என்ற நூலில் பக்கம் 205-7லும், Dr. இராசமாணிக்கனர் அவர்கள் M.A., பல்லவர் வரலாறு என்ற நூலில் 255-57 பக்கங்களிலும் பாகூர் பட்டயங்கள்-கல்லூரி குறித்து எழுதியுள்ளனர். ஜோவோதுப் ராய்த்துரை (Jouveau Dubreuil) தம்முடைய பல்லவர் என்ற

நூலில் 49-ஆவது பக்கமுதல் செப்பேட்டுச் சமஸ்கிருதப் பகுதியை திரு T. A. கோபிநாதராவ் அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்புடன் தந்துள்ளார். பல்லவர் செப்பேடுகள் முப்பது என்ற நூலில் இப்பட்டயம் முன்னுரை தமிழ் மொழி பெயர்ப்பு ஆகியவற்றுடன் தரப்பெற்றுள்ளது. (பக்கம் 263-276).

### செப்பேட்டு மொழி - மொழி நிலை

செப்பேட்டில் கண்டமொழி சமஸ்கிருதமும் தமிழும் ஆகும், எழுத்துருவம் கிரந்தமும் தமிழும். இதில் 32 சமஸ்கிருத செய்யுட்கள் (வரி 1-45; 74-77) உள்ளன; எஞ்சிய பகுதி (வரி 45-74; 78-9) தமிழ்-வசனமாகும். தமிழ்ப் பகுதியிலும் கிரந்த எழுத்துக்களில் சில சொற்கள் எழுதப்பட்டுள்ளன. 34 ஆவது வரியில் கிரந்தப் பகுதியில் “ றைப் புணைச்சேரி” என்பது தமிழ் எழுத்தில் உள்ளது. நிலைதாங்கி என்ற தமிழ்ச் சொல் வரி 30ல் கிரந்த எழுத்திலேயே எழுதப் பெற்றுள்ளது. தமிழ் உச்சரிப்பு முறையின்படி தந்தி வர்மன் Danti என்பதற்கு மாருக Tanthi என்றும் க்ஷ என்பதற்குப் பதில் ட்ச என்றும், மேயி; நெல் வாயி என்ற உருவங்களும் உள்ளன.

### நுதலிய பொருள்

முதற் செய்யுள் திருமால் வணக்கம்; 2-8 செ. பிரமன் முதல் விமல கொங்கர் வரை பல்லவர் கால் வழிமுறை; 9-11 செ. நந்திவர்மன்; 12 நந்திவர்மன் III; 13-14 சங்கா; 15-17 நிருபதுங்கன்; 18-21 மார்த்தாண்டன்; 22-23 மூன்றூர்கள்; 24-26 வித்யாஸ்தானம்; 27-30 ஆஜ்ஞப்தி, பிரசஸ்தி எழுதியோர்; வரி 45-74 தமிழ்ப் பகுதி-மூன்றூர்கள் எல்லை; அறம் செய்தமை; செ. 31 அரசனின் வேண்டுகோள்; செ. 32 பட்டயம் எழுதியோன்; வரி 78-79 தமிழ்ப்பகுதி, செ. 32 -ல் உள்ள செய்தியே

### காலம்

வாகூர்ச் செப்பேடுகள் நிருபதுங்களின் 8-ஆவது ஆட்சியாண்டில் கொடுக்கப்பெற்றன (வரி 46, 51); அதாவது கி. பி. 858 ஆகும்.

## அரசன்

பட்டயம் கொடுத்த அரசன் பெயர் விஜய ந்ரிப துங்க வர்மன் (வரி 45). ந்ரிபதுங்கவர்மன் (வரி 74), ந்ரிபதுங்க (வரி 24, 25, 32), துங்கவர்மன் (வரி 42) என்று பல உருவங் களில் குறிக்கப் பெற்றுள்ளது. இவன் நல்ல குணவான்; மூன்று உலகுக்குமரசன்; உதய சூரியன் போன்று ஒளிபடைத்தவன்; பாண்டியனுக்கு ஒருசமயம் படையுதவி செய்தவன் (செ. 16); பகை மன்னர் கூட்டத்தை அரிசிலாற்றங்கரைப் போரில் எரித்தவன்; புவனேசுவரனாகிய இவன் இளமை முதற்கொண்டு அரசர்களுள் புகழ் பொருந்தியவன்; இவன் புகழ் இராமன் போன்று பிற இடங்களிலும் பரவியுள்ளது (செ. 17:)

இவன் தந்தை—மூன்றும் நந்திவர்மன்.

இவன் தாய்—சங்கா. இவள் முராரிக்கு இலக்குமி போலநந்திவர்மனுக்கு மனைவியாவள்; ராஷ்டிரகூட குலத்தில் தோன்றியவள்; உலகம் போலப் பொறையுடையவள்; தாய் போல் குடிமக்களால் விரும்பப்பட்டவள்; மிக்க அழகு உள்ளவள்; அரசனது நற்பேறே உருவெடுத்தாற் போன்றவள்; மதி காந்தி கலாதிகளையுடையவள்.

## விண்ணப்பித்தவன்

நிருபதுங்கன் காலத்தில் வாகூர்ப்பகுதியில் ஆண்டு வந்தவன் வேசாலிப் பேரரையன் எனப் பெற்றான் (வரி 46). இவன் மார்த்தாண்டன் (செ. 18) என்ற இயற்பெயர் உடையவன்; நிலைதாங்கி என்ற சிறப்புப் பெயருடையவன்; குரு குலத்தில் பிறந்தவன்; தன்னைச் சரணடைந்த பிரஜைகளைக் காப்பவன்; உலகத்துக்குச் சந்திரன் போன்று திலகமாக விளங்குபவன்; சமுத்திரம்போல் கம்பீரமுடையவன்; சூரியன் போல் உலகை ரக்ஷிப்பவன்; உலகத்தில் நிலைபெற்றவன். இவனே ஆணத்தி வழியாக இச்செப்பேடுகளில் கண்ட அறத்தைச் செய்தான் (செ. 21).

## வாகூர்க்கல்லூரி

வாகூரில் ஒரு வித்யாஸ்தானம் இருந்தது. இது வடமொழிக் கல்லூரி. 'கங்கையின் வேகத்தைச் சடையில் தாங்கிய சிவனைப்போல் சதுர்த்திசைகளிலிருந்தும் வந்த கல்வி வல்லார்கள் பொருந்திய ஆழமுடைய வித்யா நதி வாகூர்க் கிராமத்தில் தங்கி விட்டது' என்று (செ. 25)-ல் உள்ளது; எனவே வாகூர்க்கல்லூரி கல்விக்கடல் போல் விளங்கியது ஆதல் வேண்டும். "சதுர்த்திசாகணகுலா" என்பது பேராசிரியர் உல்ஷ் கொண்ட பாடம் [E. I, Vol. VIII Part I, Page 11]. ஆனால் திரு. H. K. சாஸ்திரி "சதுர்த் தசகணகுலா" என்று பாடம் கொள்வதோடு, வாகூர்க் கல்லூரியில் 14 கணத்தவர் இருந்தனர் என்றும், இவ்வூர்ப் பேரறிஞர்களால் இக்கல்லூரி நிர்வகிக்கப்பட்டது என்றும் கூறுவர். டாக்டர் மீனாட்சி அவர்கள் "சதுர்த்தசா வித்யா ஸ்தான விதித பரமார்த்தஸ்ய" என்று (Gupta Incriptions P. 113) பிறவிடங்களில் வருதலையும், அங்குக் கொடுக்கப் பெற்ற விளக்கங்களையும் காட்டி, 'சதுர்த்தசவித்யா' என்பது 4 வேதங்கள், 6 அங்கங்கள், புராணம், மீமாஞ்சை, நியாயம், தருமசாஸ்திரம் என்னும் பதினான்குமாம் என்பர். எனவே வாகூர் வித்யாஸ்தானத்தில் பதினான்கு வித்தைகள் கற்பிக்கப் பெற்றனவாதல் தெளிவு.

## அறம்

வாகூர் வித்யாஸ்தானத்தை நடத்தச் சேட்டுப் பாக்கம், விளாங்காட்டான் கடுவனூர், இறைப்புனைச்சேரி என்ற மூன்று ஊர்களும், பழைய அறமும் பிரமதேயமும் நீக்கி முன் பெற்றுரை மாற்றி வாகூர் வித்யாஸ்தானத்துக்கு வித்யா போகமாக அளிக்கப்பெற்றன. இம் மூன்றூர்களும் வேசாலிப்பேரரையன் ஆட்சியிலுள்ள நாட்டுப்பட்ட ஊர்களாகும். அரசனது இசைவு பெற்றுத் தன் நாட்டுள்ள இம்மூன்றூர் களையும் இத்தலைவன் இந்த வித்யாஸ்தானத்துக்கு அளித்தனன். சமஸ்கிருதப் பிரசஸ்தியில், விளாங்காட்டங் கடுவ

னூர், ''ரகரத்தை இறுதியில் உள்ளதும் வித்யா விளாங்கா ஆதியாக உடையதுமான பெயருடைய ஊர்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்விளக்கத்தால் விளாங்காட்டங்கடுவனூரை அறிந்து கொள்ள முடியாது; எனினும் தமிழ்ப்பகுதியினின்று இப்பெயர் நன்கு அறியப்படுவதாயிற்று. வித்யா என்ற அடை, வித்யாஸ்தானத்துக்கு இவ்வூரைத் தருதலால், தரப்பெற்றது என்று கொள்ளலாம்! வாகூர், அருவா நாட்டுக் கீழ்வழி வாகூர் நாட்டின் கண்ணது.

**எல்லை**

விளாங்காட்டங்கடுவனூர்க்கும் சேட்டுப்பாக்கத்துக்கும் எல்லை:—

கிழக்கு — காடும் நென்மலிப் பாக்கமும்.

தெற்கு — நென்மலிப்பாக்கமும், நெல்வாய்ப்பாக்கமும், உறத்தூரும்.

மேற்கு — மாம்பாக்கமும், விளாங்காட்டாங் கடுவனூர்ப் பிரமதேசம் 60 செரு.

வடக்கு — வாகூர்.

இறைபுணைச் சேரிக்கு எல்லை:-


கிழக்கு — நத்தம் உள்ளிட்ட காடு

தெற்கு — நெருஞ்சிக் குறும்பு

மேற்கு — வாகூர்

வடக்கு — கிறிமான்பட்டி

இவற்றைப் பின்வருமாறு வரைந்து காட்டல் தகும்:-




## இந்நாளில்

விளாங்காட்டங்கடுவனூர் என்பது இந்நாளில் கடுவனூர் என்ற பெயரோடுள்ளது. இது வாகூர்க்குத் தென்மேற்கில் மூன்றுமைல் தொலைவிலுள்ளது. இறைப்புணச் சேரிக்குக் கிழக்கேயிருந்த காட்டுப்பகுதியைக் காட்டுப்பாக்கம் என்ற ஊர் நினைவு படுத்துகிறது; அதன் வடக்கிருந்த கிரிமாம்பட்டி. இன்றைய கிரிமாம்பாக்கம் ஆதல்கூடும்; இந்நாளைய பின்னுச்சிக்குப்பம், பட்டயத்தில் குறிப்பிட்ட இறைப்புணச் சேரியாதல் தகும்.

## ஆணத்தி

இதற்கு ஆணத்தி (ஆஜ்ஞப்தி)யாக இருந்தவன் உத்தம சீலன் எனப்பெற்றான் (வரி 41 ). இவன் (ந்ருப) துங்கவர் மனின் மந்திரியாவன் (வரி 42 ); பிரஹஸ்பதி போன்றவன்; விடேல் விடுகு காடுபட்டித் தமிழ்ப் பேரரையன் என்ற சிறப்புப் பெயருடையவன் (See P 17 of மீனாட்சி.)

## நிறை வேற்று முறை

முதலில் நாட்டார்க்கு இச்செய்தி திருமுகத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. நாட்டார், திருமுகம் கண்டு தொழுது தலைக்குவைத்துப் பதாகைநடந்து கல்லுங் கள்ளியும் நாட்டி, அறையோலை விடுத்தனர்.

## ஊர்களோடு கொடுத்தவை

ஊரிருக்கையும் மனையும் மனைப்படப்பும் மன்றும் கன்று மேய் பாழும் குளமும் கொட்டகாரமும் கிடங்கும் கேணியும் காடும் களரும் ஓடையும் உடைப்பும் நீர்பூசி நெடும் பெறிந்து உடும்போடி ஆமை தவழ்ந்த தெல்லாம் உண்ணிலம் ஒழி வின்றித் தரப்பெற்றன.

## செப்பேடு எழுதியவர்

இச்செப்பேடுகளை எழுதியவன் நிருபதுங்கன் என்ற பெயருடையவன்; இவன் உதிதோதித குலதிலகன்; தட்டார் குலத்தவன்; பலகலைகளிலும் வல்லவன்; பல்லவ குலத்து வழிவழித் தொண்டு செய்து வந்தவன்; மாதேவிப் பெருந் தட்டான் என்பவனின் மகன்; உதிதோதயப் பெருந்தட்டா னின் பேரன்; கச்சிப் பேட்டுக் கீழ்ப்பைசாரம் என்ற ஊரினன்.

## பிரசஸ்தி எழுதியவர்

வடமொழிப் பகுதியை எழுதியவன் நாயகன் என்ற பெயரினன்; (தாசயன் என்று கூறுவாரும் உண்டு. செ. 30; S. I. I. Vol. II பக்கம் 514). இவன் வாகூர்க் கல்லூரியில் அலுவலில் இருந்தவனென்றும் எல்லாச் சாத்திரங்களிலும் வல்லவனென்றும் கொள்ளலாம்.

## பொது

நிருபதுங்க பல்லவன் காலத்து இவ்வித்யா போகம் தரப்பெற்றமையின் பல்லவநாட்டின் தென்பகுதியில் இவன் காலத்து இக்கல்லூரி சிறப்புற்றிருந்ததால் வேண்டும். இவ் வறக்கொடை பெறுதற்குமுன்பே இக்கல்லூரி சிறந்திருந்தது இவ்வூர்க் கோயிலில் மூன்ரும் கன்னரத்தேவன், முதல் இராச ராசன் முதலியோருடைய கல்வெட்டுக்கள் இருந்த போதிலும் அவற்றுள் ஒன்றுதானும் இக்கல்லூரியைக் குறிக்காதது பெரு வியப்பைத்தருகிறது. எனவே பல்லவர் ஆட்சி நீங்கியவுடன் இக்கல்லூரியும் பெருமைகுன்றி, நிலையான அரச ஆதரவு அற்று, நாளாவட்டத்தில் மறைந்தது போலும்!

# 8. தந்தி சக்தி விடங்கியார்

## முதல் ராசராசன் பட்டத்தரசி

பிற்காலச் சோழ அரசர்களில் அறிவாற்றல்கள் அமைந்து சோழப் பேரரசை வளர்த்த பேரரசர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் முதலிராசராசச் சோழராவர். இவர் இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனுக்கு வானவன் மாதேவிபால் பிறந்தவர்; கி. பி. 985-1014 வரை ஆண்ட அருந்திறல் அரசர். இவருக்குப் பல மனைவியர் இருந்தனர். அவர்களுள் பட்டத்தரசியாக விளங்கியவர் உலோக மாதேவியார் ஆவர். இவருக்குத் தந்தி சக்தி விடங்கியார் என்ற வேறொரு பெயருமுண்டு. இவ்வம்மையே இம்மன்னன் வாழ்நாள் முழுமையும் பட்டத்தரசியாக விளங்கினர். இவ்வரசன் சிவலோகம் சேர்ந்த பிறகும் இவ்வம்மையார் சில ஆண்டுகள் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பது ஒரு கல்லெழுத்தால் அறியக்கிடக்கிறது[1]. இராசராசன் I சிறந்த சைவனாக விளங்கியமை யாவரும் அறிந்ததொன்று. இவ்வம்மையாரும் தன் கணவனைப்போல் சிவபக்தி மிக்கவராய்த் திகழ்ந்தவர். திருவையாற்றில் உலோகமாதேவீச்சரம் என்னும் திருக்கோயில் எடுப்பித்தமையும், திருவலஞ்சுழி திருக்கோயிலில் க்ஷேத்திரபாலதேவரை எழுந்தருளுவித்தமையும் இதனை வலியுறுத்தும்.

## 1. உலோகமாதேவீச்சரம்

இத்திருக்கோயில் உலோகமாதேவியாரால் எடுப்பிக்கப் பெற்றது; ஆகலின் உலோகமாதேவீச்சரம் எனப்பெற்றது. இது திருவையாற்றில் ஐயாறப்பரது திருக்கோயில் வடக்குப் பிராகாரத்தில் உள்ளது. இக்கோயில் இவ்வம்மையாரால் எடுப்பிக்கப்பெற்றது என்பது பின்வரும் கல்லெழுத்துப்பகுதியால்[2] அறியப்பெறும்:-

---

1. S. I. I. Vol, V. No. 515. 2. S. I. I. Vol.V. No. 52.

"உடையார் ஸ்ரீராசராசதேவர் நம்பிராட்டியார் தந்தி சக்தி விடங்கியாரான ஸ்ரீஒலோக மாதேவியார் வடகரை இராசேந்திர சிங்க[3] வளநாட்டுப் பொய்கை நாட்டுத்[4] திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவேஸ்வரம்.''

இத்திருக்கோயில் இந்நாளில் "உத்தரகைலாயம்'' என வழங்குகிறது[5].

இத்திருக்கோயில் வழிபாட்டிற்கு நிபந்தங்களும். இங்கு எழுந்தருளுவித்த திருமேனிகளும், தரப் பெற்ற திருவாபரணங்களும், திருப்பரிகலங்களும் இத்திருக்கோவிலிலுள்ள கல்லெழுத்துக்களினின்றறியப் பெறுகின்றன.

## நிலம் அளித்தமை[6]

ஐயாறப்பர் திருக்கோயில் தேவர்கன்மிகள் ஒலோகமாதேவீச்சரத்து மஹாதேவர் கன்மிகளுக்கு 3 வேலி நிலத்தை வேலி ஒன்று 100 கழஞ்சு பொன் வீதம் 307 கழஞ்சு ஒன்பது மஞ்சாடிக்கு விற்றனர். "இந்நிலத்தில் அகப்பட்ட மேனேக்கிய மரமும் கீணேக்கிய கிணறும் உடும்போடி ஆமை தவழ்ந்த தெப்பேர்ப்பட்டதும் காராண்மை மீயாட்சியும் புகு வழிபுகவும் பொதுவழி போதவும் பாயும் வழி பாயவும் வரும் வழி வரவும் இந் நிலத்தால் வந்த மன்றும் கன்றுமேய்பாழும் பெறுவதாகவும். குலேயும் குரம்பையும் செய்யாததாகவும். †செந்நீர்க்ககவணே செய்யாததாகவும். இந்நிலத்தால் வந்தது

---

3. இராசேந்திரசிங்கன் என்பது இராசராசனின் பட்டப்பெயர்களில் ஒன்று.
4. பொய்கைநாடு: இது திருவையாற்றைச் சுற்றியுள்ள நிலப்பரப்பு.
5. பண்டாரத்தார்- பிற்காலச் சோழர் வரலாறு பாகம் I பக்கம் 127.
6. S. I. I. Vol V No. 518 †செல் நீர்க்கு அக அணை சென்னீர்க்ககவணை - போகும் நீர்க்கு உள்மடை.

மணம் புகுதவும் பிணம் போகவும் சுடுகாடு பெறுவதாகவும்'' என்னும் மிக எச்சரிக்கையுடன் குறிக்கப்பெற்ற பாதுகாப்பு முறை கவனிக்கத்தக்கது. இந்நிலத்தின் எல்லையும் கல்வெட்டில் மிக்க அழகாக விவரிக்கப்பெற்றுள்ளது. திருவையாறுடையார் ஸ்ரீகோயிலிற் பெரிய புறத்திருச்சுற்றுலையின் வடக்கில் 4 கோல் அகலமுடைய திருவிழாவீதி இருந்தது. அவ் வீதிக்கு வடக்கில் அந்நிலம் அமைந்திருந்தது.

## கோயில் பட்டரும் கோயில் எடுத்த ஆண்டும்

இக்கல்லெழுத்தில் கையொப்பமிட்ட சிவப்பிராம்மணர்களில் ஒருவர், ''வாளுவன் சிவபாத சித்தன் பரதேவனை ஒலோகமாதேவிபட்டன்'' என்று இத் திருக்கோயிற் பெயரோடும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளார். இச்சாசனம் இராசராசனது 21-ஆம் ஆட்சியாண்டிலேயே தரப்பெற்றதாதலின் இத் திருக்கோயில் கி. பி. 1005-க்குள்ளாகவே கட்டப்பெற்றிருத்தல் வேண்டும் எனத்தெரிகிறது.

## திருவிளக்குத் தொண்டு

இத் திருக்கோயிலில் திருவிளக்கு இடுவதற்கு இராசராசனது 21- ஆம் ஆட்சியாண்டில் ஒரு நிபந்தம் அளிக்கப்பெற்றுள்ளது. பெரும்புலியூர்க்குடி மன்றுடி ஐயாறன் வளவன் என்பவர் இரண்டு விளக்குகள் எரிக்க 192 குடிநீக்காச் சாவாமூவாப் பேராடுகளை அளித்தார். இவ்வரசனது 22 ஆம் ஆட்கியாண்டில் ஒரு விளக்கு எரிக்க இன்னொருவர் 96 சாவா மூவாப் பேராடுகளை அளித்தார். இவர் வீமயன் வம்பவை என்ற பெயருடையவர்; இவர் சாளுக்கிய வீமயன் என்பார் மனைவி; வஞ்சயன் பெற்றப்பை என்பவருடைய மகள்.

---

7. S. I. I. Vol. V No. 517
8. ,, ,, 516
9. ,, ,, 521

## திருவாபரணங்கள்

ஒலோகமாதேவீச்வரமுடைய மகாதேவர்க்கும், ஒலோக விடங்கதேவர் உள்ளிட்ட திருமேனிகளுக்கும் செய்வித்த பொற்கொள்கை முதலான திருவாபரணங்களும் திருப்பரிகலங்களும் ராசராச சோழனது 24-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றில் விவரிக்கப்பெற்றுள்ளன[9].

பொன்னுற் செய்யப் பெற்றனவும் மணியும் முத்தும் மிடைந்தனவும் ஆன ஆபரணங்கள் ஒலோகவிடங்கத் தேவருக்கு 18–ம், நம் பிராட்டியார்க்கு 19-ம், பிள்ளையார் சுப்பிரமணிய தேவருக்கு ஆறும் தரப்பெற்றன.

பொன் மாலைகளில் மூன்றொன்றாக அடுக்கியனவும், ஐந்தொன்றாக அடுக்கியனவும், சுவாமிக்கும் அம்மைக்கும் தரப்பெற்றன. சுவாமிக்கு முகத்தில் கட்டிய நாயக மாணிக்கம் ஒன்று அரைக்கழஞ்சே நாலு மஞ்சாடி எடையுடையது. பொற்கொள்கை குடிஞைக்கல்லால் பொன் நிறை 327 கழஞ்சு. ஒலோக விடங்கத் தேவருக்குச் சாத்தியருளும் முடி 105 ½ கழஞ்சு. நம்பிராட்டியார் முடி 48 கழஞ்சு. சுப்பிரமணிய தேவருக்குத் தரப்பெற்றவற்றுள் சூலமும் உண்டு.

## திருப்பரிகலங்கள்

பொன்னால் மடலும், வட்டிலும், சாமரைக்கைகளும், ஈச் சோப்பிக்கைகளும், வெள்ளியில் தளிகை மண்டை, கலசம், சட்டுவம் முதலியனவும், செம்பில் தளிகை, காளம், கலசம், முதலியனவும், ஈழச்சியல் விளக்கும். மலையாளச் சியல் விளக்குகளும் சோழியச் சியல் விளக்குகளும், வெண் கலத்தில் தட்டு, சட்டுவம், எறிமணி, தூபமணி முதலியன வும் அளிக்கப்பெற்றன.

செம்பின்மேல் பொன் கடுக்கின பாவைக் கண்டியில் ஆடுகிற பாவை ஒன்று, உடுக்கை வாசிக்கிற பாவை

ஒன்று, பாடுகிற பாவை ஒன்று, பீடம் ஒன்று உட்படக் கண்ணாடி ஒன்றும் அமைத்துத் தரப்பெற்றது.

இங்ஙனம் பல உலோகங்களிலும் தரப்பெற்ற பொருள்கள் 100 க்கு மேற்பட்டனவாம்.

இவற்றையெல்லாம் கல்லில் வெட்டுக என்று உத்தர விடப் பெற்றவர் உடன் கூட்டத்ததிகாரம் செய்கின்ற கோவலூருடையான் காடன் நூற்றெண்மனும், அதிகாரிச்சி எருதன் குஞ்சரமல்லியும்[10] ஆவர்.

இராசேந்திரசோழனது 3ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று[11] தந்திசக்திவிடங்கியார் 164 பொற்காசுகளை அளித்தார் என்றும், மற்றொன்று 7 வெண்கல விளக்குகளை அளித்தார் என்றும்[12] கூறுநிற்கும்.

## தட்டாரக்காணம்

சக்கடி சமுதையன் என்று ஒரு தட்டார் செம்பியன்மாதேவிப் பெருந்தட்டான் என்று கூறப்பெற்றார். இவர் ஒலோகமாதேவீச்வரத்துத் தட்டாரப்பணி செய்பவராகத் தந்திசக்தி விடங்கியாரால் நியமிக்கப்பெற்றுத் தட்டாரக்காணி அளிக்கப்பெற்றார். இச் செய்தி இராசேந்திர சோழனது 4–ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.[13]

## விமலாதித்தர் தொண்டு

கீழைச்சாளுக்கியரோடு மணவுறவு கொண்டு வெற்றியுற்றவர் சோழர். இராசராசசோழன் தன்மகளாகிய குந்த

---

10. பெண் பாலார்; சோழர்கள் காலத்து அரசியலில் ஆண்களேயன்றிப் பெண்களும் பெரும் பதவி வகித்திருந்தனர் எனத் தெரிகிறது.
11. S.I.I.Vol.V No.514
12. Colas Part I K.A.N.P. 533
13. S.I.I· Vol. V No.515

வையை விமலாதித்தன் என்னும் கீழைக் சளுக்கிய அரசனுக்கு மணம் செய்து கொடுத்தார். இவ் விமலாதித்தற்கு விஷ்ணுவர்த்தன மகாராஜா என்னும் பெயரும் உண்டு. இவர் ராசராசனது 29-ஆம் ஆட்சியாண்டில் ஒலோகமா தேவீச்சரமுடைய மகா தேவர்க்கு எட்டு வெள்ளிக் கலசங்கள் அளித்தார்; அவற்றின் மொத்த எடை 1148 கழஞ்சு ஆகும்.[14]

## விஷ்ணுவர்த்தன தேவர் தொண்டுகள்

இவர் கீழைச் சளுக்கிய அரசர், இவரே பின் முதற் குலோத்துங்கனுகை விளங்கியவர் என்று ஆராய்ச்சியாளர் கருதுவர்.[15] இவர் 300 ராஜராஜன் மாடையை அளித்தார். இது குடினைளுக்கல்லால் நிறை 337½ கழஞ்சு ஆகும். இப் பொன்னுல் 150 செங்கழு நீர்ப்பூக்கள் செய்து ஒலோகமா தேவீச்சரமுடையார்க்குத் தரப்பெற்றன. இது ராஜாதிராசனுடைய 32–ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1050-ல்) செய்த தருமமாகும்.[16] இவ்விஷ்ணு வர்த்தன தேவர் ராசாதிராசனுடைய 31-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1049–ல்) திருவடி தொழுது பொன்னுல் திருவடிக்காறை இட்டுச் சண்டேஸ்வர தேவர்க்குச் சாத்தியுள்ளார். அன்றியும் பூர்வதேசமும் கங்கையும் கொண்டருளின பெரியதேவர்க்கு (அதாவது முதலாம் இராசேந்திர னுக்கு) யாண்டு27– ல் (கி.பி.1039-ல்) இவரே 99 மாடை ஆட வல்லான் சாத்தியருளத் தந்ததாகவும் இதே கல்வெட்டினின்றறிகிறோம். இவை பிற் குறிக்கப் பெற்றவருடைய கண்காணியால் நிகழ்ந்தனவென்று கூறப்பெற்றுள்ளது:

1. ஒலோகமாதேவீச்வர முடையார்க்கு அணுத்தர பல்லவரையன்.

---

14. S.I.I. 514
15. Colas Part I. K.A.N,P. 580அடிக் குறிப்பு
16. S.I.I. Vol V No. 520

2. அதிகாரிச்சி சோமயன் அமித்திரவல்லி[17]

3. ஸ்ரீகார்யம் செய்கின்ற நந்தனூருடையான் செல்வன் மயிலை.

4. ஸ்தானமுடைய கேத்திர சிவபண்டிதர்க் காகத் திருவாராதனை செய்யும் ஆத்திரையன் நம்பிகாட நம்பி[18]

5. மானமுதலி பாரதாயன் செல்வன் அரங்கனான ராஜ மார்த்தாண்ட பிரம்மமாராயன்.

6. வண்ணக்கு சாத்தன் நின்றானை வீரசோழ அணுக்க மயிலாட்டி.

7. பதியிலாள் நக்கன் அரங்கமான ஜயங்கொண்ட சோழத்தலைக்கோலி.

8. நக்கன் பூமியான பரமாக்க விடங்கத்தலைக்கோலி.

9. நக்கன் சோழவிச்சாதிரியான ஒலோகமாதேவித் தலைக்கோலி.

10. நக்கன் பவழக்குன்றான மதுராந்தகத்தலைக்கோலி.

11. கரணத்தான் கேசுவன் மதுராந்தகன்.

12. பொற்பண்டாரி மணி மத்தி மாதவக் கிரமவித்தன்.

இதில் 7-10 வரையிலும் குறிக்கப்பெற்ற பதியிலார் சோழ அரசர்களால் தலைக்கோல் பட்டம் பெற்ற வர். தலைக்கோல் பட்டம் என்பது ஆடல் பாடல் களிற் சிறந்த பதியிலார்க்கு அரசரால் கொடுக்கப் படுவது.

---

17. இக் கட்டுரை அடிக் குறிப்பு 10 காண்க

18. திருவிசைப்பா ஆசிரியர்களுள் ஒருவராகிய பூந் துருத்திநம்பி காடநம்பி இவராயிருக்கலாம் என்பர் ஆராய்ச்சியாளர்.

## சதயநாள் திருவிழா

ராசராச சோழர் I சதய நாளில் பிறந்தவர். இவர் தஞ்சையில் எடுப்பித்த ராச ராசேச்சரத்திலும் (பெரிய கோயிலிலும்), தந்தி சக்தி விடங்கியார் திருவையாற்றில் எடுப்பித்த உலோகமா தேவீச்வரத்திலும் திங்கள்தோறும் சதயநாளில் சிறப்பாக விழா நடைபெறுதற்கு நிபந்தங்கள் விடப்பெற்றிருந்தன[1].

## உலோகமாதேவீச்வரம் - இந்நாள் நிலை

திருவையாற்று ஐயாறப்பரது திருக்கோயில் திருச்சுற்றில் இத்திருக்கோயில் "உத்தரகைலாயம்" என்ற பெயரால் இந்நாளில் விளங்குகிறது. திருக்கோயில் உள்ளும் புறமும் மிகத் தூய்மையாக உள்ளது. (தருமபுர ஆதீனக் கோயில் களுக்குள்ள தனிச்சிறப்புக்கள் பல; அவற்றுள்ளும் இதுவும் ஒன்று என்பது சைவர்கள் நன்கு அறிவர்). திருக்கோயில் சுற்றிலும் தளவரிசை போடப்பெற்றுள்ளது. திருக்கோயில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பெற்றுள்ளது. முன் மண்ட பச்சுவர்கள் கல்லெழுத்துக்களை மறைக்காது சாந்திடப் பெற்று உள்ளன. திருக்கோயில்சுற்றிலும் கல்லெழுத்துக்கள்உள்ளன சிற்சிலபகுதிகளில் கோயில் பழுதுற்றுஇருக்கிறது. இறையகத் தெற்குச் சுவரில் இரண்டு புரைகளில் முதற்புரையில்ஆடவல் லார்(நடராசர்) சிற்பம் முழுதும் பின்னமாகி விட்டது. அவ் விடத்தில் ஆடவல்லார் சிற்பம் இருந்திருத்தல் வேண்டும் என்பது ஊகித்துத்தான் அறியலாம். அடுத்த புரையில் உள்ளது, தென்திசைக் கடவுள்; கண் கவர் நிலையில் உள்ளது. வடக்குச்சுவரில் முதற் புரையில் இருந்த சிற்பம் இன்னது என்று தெரியும் நிலையில் இல்லை; மற்றொன்று பிரம்மா; நான்கு தலைகள் கொண்ட சிற்பம்; அழகொழுக இன்னும்காட்சி யளிக்கிறது. இறையகத்து எழுந்தருளியுள்ள

---

1. பண்டாரத்தார் சோழர் வரலாறு பாகம் I பக்கம் 91.

சிவலிங்கபெருமான் சிறப்பாக இருந்தருளுகிருர். இறையகத்து வாயிற்காவலர் கம்பீரமான தோற்றமுடையவர். கோயிலின் புறத்தோற்றமும் மிகக் கம்பீரமாகவேயுள்ளது இக்கோயிலைக் குறித்துப் பலரும் நன்கு அறியார். பலரும் சென்று வழிபடின் இக்கோயில் பண்டைய நிலையையடைந்து சிவபாத சேகரனின்[2] மெய்ப்புகழைப் பரப்பும் என்பது திண்ணம்.

## (2) திருவலஞ்சுழியில் க்ஷேத்திரபாலதேவர் திருக்கோயில்

க்ஷேத்திரபாலர் என்பவர் பைரவர் ஆவர். திருவலஞ்சுழியில் இப்பைரவர் கோயிலை எடுப்பித்தவர் ஒலோகமாதேவியார். "இராசராச தேவர் மகாதேவியார் தக்தி சக்தி விடங்கியாரான ஸ்ரீ ஒலோகமாதேவியார் உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்குட மூக்கின்பால் திருவலஞ்சுழியில் நாம் எடுப்பித்த திருக்கற்றளி பிள்ளையார் க்ஷேத்திரபால தேவர்க்கு" என்னும் கல்வெட்டுப் பகுதியால்[3] இதனை அறியலாம். இந்த க்ஷேத்திரபாலதேவர் திருக்கோயில் திருவலஞ்சுழி திருக்கோயில் வெளிப் பிராகாரத்தில் இராசகோபுரத்திலிருந்து இரண்டாம் கோபுரத்துக்குச் செல்லும் வழியில் தெற்குப் பக்கத்தில் உள்ள தோப்பில் இடிந்த நிலையில் உள்ளது; கல்வெட்டுக்களுடன் சிறு கோயிலாக விளங்குகிறது. 1000 யாண்டுகளுக்குமுன் பொன்னும் மணியும் பூட்டிப் பொலிவுடன் விளங்கிய மூர்த்தி இன்று கேட்பாரற்றுத் தன்னந்தனியாக இயற்கையோடு இயைந்து வாழ்கிருர். இப்பைரவ மூர்த்திக்கு 16 திருக்கைகளுண்டு. மூர்த்தி சிறிது பழுதுபட்டிருப்பினும் இன்னும் காண்பார் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கவல்லவராய் உள்ளார்!

---

2 சிவபாதசேகரன் – இராசராசன் I
3 S. I. I. Vol. VIII No. 234.

## ராஜராஜதேவர் அளித்த தேவதானம்

க்ஷேத்திரபால தேவர்க்கும், கணபதியார்க்கும் இன்னம்பர் நாட்டுத் 'தளியககூர்ச்சட்டகள் மடப்புறத்துக்கள நிலத்து' வருமானம் 743 கலனே தூணிப்பதக்கு அஞ்ஞாழியில், முன் மடப்புறத்துக்கள தேவர்க்குக் கொடுக்கப்பெற்று வந்த 200 கலமும் பழம்படியே கொடுப்பதாக நீக்கி 543 கலனே தூணிப் பதக்கு ஐஞ்ஞாழியும் யாண்டு 24-ஆவது முதல் க்ஷேத்திரபால தேவர்க்கும் கணபதியார்க்கும் கொடுக்கப் படுதல் வேண்டும் என்று இராசராசசோழன் தொண்டை மான் ஆற்றூரிலிருந்து உத்தரவிட்டுள்ளார்.[4]

## க்ஷேத்திரபாலர்க்கு அணிகலன்கள்

இக்கோயிலுக்கு ஒலோகமாதேவியாரும், (விமலாதித் தரது மனைவியாரும் இராசராசனது மகளுமாகிய) குந்தவை யாரும், நடுவிற் பிள்ளையாகிய மாதேவடிகளும் பல அணி கலன்களைக் கொடுத்துள்ளனர்.[5] விளக்கம் பின்வருமாறு:-

(i) 222 கழஞ்சால் செய்த ஶ்ரீசந்தம் ஒன்றினால் முகம் ஒன்று; இதற்குரிய பொன் 222 கழஞ்சும் பெற்ற விவரம்: "க்ஷேத்திரபாலதேவர் பண்டாரத்து நல்லூர்ப்பூமி விற்ற தென்றிருக்கும் கிழி ஒன்றினால் குடிஞைக்கல்லால் பொன் நிறை 106 கழஞ்சே முக்காலே அரைக்கால்; துடர் ஒன்றி னால் பொன் 32 கழஞ்சே முக்கால்; அட்டித் தொழுத பொற் பூக்களுட்படப் பொற்பூக்களால் பொன் 2 கழஞ்சே முக்காலே அஞ்சுமா; காசு நூற்றுக்கு மாறிமுதலான பொன் 69 கழஞ்சரையே அஞ்சுமா; விமலாதித்ததேவர் மஹாதேவியார் ஶ்ரீ குந்தவை நங்கையார் கொடுத்த பொன் பதின்கழஞ்சே மஞ்சாடியும் இரண்டுமா".

---

4 S. I. I. Vol. VIII No. 223.
5 ,, ,, 234.

(ii) ஊர்த்தும கேசமும் உட்படத் திருமுடி ஒன்றினல் பொன் 182 கழஞ்சு.

(iii) 40 கழஞ்சு பொன்னல் இடைக்கட்டு, மாங்காய், அரசிலை, கள்ளிப்பூ, தகட்டுக்குழை முதலாகிய பல அணி கலன்கள்.

(iv) விமலாதித்த தேவர் தேவியார் குந்தவை நங்கை யார் கொடுத்த திருவரைப்பட்டிகை ஒன்றினல் தவளைவாய் இரண்டு, படுகண் எட்டு; சள்ளிபூஏழு, அரசிலைஒன்று, கொக்குவாய் ஒன்று உட்பட 49 கழஞ்சே முக்காலே மஞ்சாடி யும் இரண்டுமா.

(v) உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருமகளார் நடுவில் பிள்ளையார் மாதேவடிகளார்[6] இத்தேவர்க்கே கொடுத்த மினுக்கம் வளையில் இரண்டினல் பொன் 49 கழஞ்சு ஏழு மஞ்சாடியும் குன்றி; மேற்படியார் வரக்கட்டின பொன் அரைக் கழஞ்சே அரைக்காலினல் செய்த பொற்பூ ஒன்று

## இராசேந்திரன் I தொண்டு

முதலாம் இராஜேந்திரன் தான் பட்டம் பெற்றதும் க்ஷேத்திர பாலதேவர்க்குத் தில பர்வதம் புக்கருளி, க்ஷேத்திர பாலதேவரை ஸ்ரீ பாதபுஷ்பமட்டித் தொழுது 24¼கழஞ்சினல் பொற்பூக்கள் பன்னிரண்டு அளித்தார்; இவருடைய தேவி யார் வளவன்மாதேவியார் இட்டபொற்பூ ஒன்று; பொன் முக்காலேநாலுமஞ்சாடி.[7]

---

6 பண்டாரத்தார் சோழர் வரலாறு பாகம் I பக்கம் 128 அடிக்குறிப்புக் காண்க.

7 S. I. I. Vol. VIII No. 236; 633 B of 1902.

## 3. திருவிசலூரில் இரணியகருப்பம்

இராசராசன் I திருவிசலூர்த் திருக்கோயிலில் துலாபாரமும் தந்திசக்தி விடங்கியார் இரணியகர்ப்பமும் புகுந்ததாக ஒரு கல்வெட்டறிவிக்கிறது.[8] இக்கோயில் மூலத்தானத்து முன்மண்டபத்து இடதுபுறச்சுவரில் அரசன் அரசியர் உருவங்கள் சிவலிங்கத்தை வணங்குவது போன்று செதுக்கப் பெற்றுள்ளன. இவ்வுருவங்களின் கீழ் மேற்குறித்த கல்வெட்டிருந்தது.[9] திருக்கோயிலை 1932ல் புதுப்பிக்குங்கால் எடுக்கப்பெற்ற இச்சிற்பங்களின்புகைப்படம் இத்திருக்கோயில் அலுவலகத்திலுள்ளது.[10] இந்நாளில் அக் கல்லெழுத்தில்லை. அரசன் அரசி உருவம்மட்டும் செப்பனிடப்பெற்று உள்ளன. (இச்சிற்பங்களை நானும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்களும் 10—6—57ல் நேரில் சென்று கண்டோம். இச்சிற்பங்களில் ஒன்று இராசராசனைக் குறிக்கும் என்றும் மற்றொன்று ஒலோகமாதேவியாரைக் குறிக்கும் என்றும் சொல்லப்பெற்றோம்). இத்திருக்கோயிலில் ஒலோகமாதேவியார் இரணியகர்ப்பம் புகுந்ததற்குரிய பொன்னின் ஒரு பகுதியைக் கொண்டு திருவலஞ்சுழியில் க்ஷேத்திரபால தேவர்க்கு இரண்டு பொன்மலர்கள் செய்து அளிக்கப்பெற்ற செய்தி திருவலஞ்சுழியிலுள்ள முதல் இராசராசசோழனின் 29-ஆம் ஆண்டுக்கல்வெட்டுக் கூறுகிறது.[11]

'திருவிசலூர் மகாதேவர் கோயிலில் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் ஹிரண்யகர்ப்பம் புக்கருளின பொன்னில் .........க்ஷேத்திரபால தேவர்க்குச் சாத்தியருளக் கொடுத்த

---

8 42 of 1907.

9 K. A. N. Cholas Part I Page 536 footnote.

10 List of Photo negatives of the Madras Presidency Page 26, No. 417.

11 S. I. I. VIII 237; 633c of 1902.

பொற்பூ இரண்டில், பொற்பூ ஒன்றினல் குடினைக்கல்லால் நிறைபொன் இருகழஞ்சேமுக்காலே மஞ்சாடியும் ஆறுமா பொற்பூ ஒன்றினல் மேற்படி கல்லால்......[12]

இப்பொன்னின் பெரும் பகுதியைக்கொண்டு திருப்பட்டீச் சரம் திருக்கோயில் திருப்பணி செய்யப்பெற்றதென்று செவி வழிச் செய்தியிருப்பதாகத் திருவிசலூர்த் திருக்கோயில் காரிய கர்த்தர் ஒருவர் கூறினர்.

## 4 தஞ்சையில் பிச்சதேவர்

தஞ்சைப் பெரிய கோயிலில் ஒலோகமாதேவியார் இராச ராசனது 29-ஆம் ஆட்சியாண்டில் பிச்சதேவர்[13] திருமேனி யை எழுந்தருளுவித்துப் பல அணிகலன்களை அளித்ததாக ஒரு கல்லெழுத்துக் கூறுகிறது.[14]

"பாதாதி கேசாந்தம் ஒன்றேமுக்காலே இருவிரலரை உசரத்து ஸ்ரீஹஸ்தம் நாலும் உடைய, இருவிரலே ஒரு தோரை உசரம் உடைய திருவடி நிலையில் எழுந்தருளிப்பலிக்கு எழுந்தருளுகின்றாராகக் கனமாக எழுந்தருளுவித்த பிச்ச தேவர் திருமேனி ஒன்று. இவர் அருகு பலிபாத்ரம் சுமந்து நின்ற 15½ விரல் உசரமுடைய கனமாகச் செய்த பூதம் ஒன்று. பூதம் சுமந்த பதிற்றுவிரலகலத்துப் பலி பாத்திரம் ஒன்று. இவரருகு நின்ற பத்தொன்பதிற்றுவிரல் உசரத்துக் கனமாகச் செய்தமான் ஒன்று. ஒரு முழமே பதினெரு விரல் நீளத்து ஐவிரல் அகலத்து ஏழுவிரல் உசரத்து ரத்ன நியாசம் செய்து[15] இவர் எழுந்தருளி நின்ற உபபீடம் ஒன்று. தேவரைக் கவித்த தோரணக்கல்லால் இரண்டும்[16] அர்த்த

---

12 கல்வெட்டுச் சிதைந்துளது.

13 பிக்ஷாடனர்.

14 34 of Vol II S. I. I.

15. ரத்தினம் பதிக்கப்பெற்று.

16. Two pillars.

சந்திரன் ஒன்றுமாய் அறுமுழமே இருவிரல் சுற்றுடைய கனமாகச் செய்த பிரபைஒன்று."

இவர்க்குக் கொடுத்தன: சப்தசரி[17] விலை காசு நூறு; திரிசரம்[18] காசு 20½; பொற்பூ ஒன்று; திருக்குதம்பை ஒன்று; தோடு ஒன்று; திரள்மணி வடம் ஒன்று; திருக்கைக்காறை (இரண்டு); திருப்பட்டிகை ஒன்று; திருவடிக்காறை (இரண்டு) குறுமடல் ஒன்று பொன் 20½ கழஞ்சு இரண்டு மஞ்சாடியும் குன்றி; ஒரு கபாலம், வெள்ளி 34 கழஞ்சு மஞ்சாடி குன்றி.

ஷை பிச்சதேவர்க்குத் திருவமுதுள்ளிட்டு வேண்டும் நிபந்தங்களுக்கு 743 காசு தந்தார்கள். இக்காசு பொலிசைக்கு விடப்பட்டது. காசு ஒன்றுக்கு முக்குறுணி நெல் வீதம் அளக்கப்பெற்ற நெல் 185 கலனே இருதூணிக்குறுணி. ராஜேந்திர சிங்கவளநாட்டு வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்தவர் இங்ஙனம் தர ஏற்றுக்கொண்டனர்.[19]

## 5. தஞ்சைப் பெரியகோயிலில் படிவம்

பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவர் இராசராசன் I காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலில் ஸ்ரீ காரியம் ஆராய்பவராக இருந்தார்.[20] இவர் சிவனடியார்களிடத்திலும், அரசனிடத்தும் அன்பு பூண்டொழுகியவர். இவர் தஞ்சைப்பெரியகோயிலில் முதல் ராசராசன் படிவத்தையும் அவரது முதற் பெருந்தேவியாகிய ஒலோகமாதேவியாரின் படிவத்தையும் இராசராச சோழனது 29 ஆம் ஆட்சியாண்டில் எழுந்தருளுவித்தார்.

---

17. One ornament of seven strings.
18. One ornament of three strings.
19. S.I.I., Vol. II, No. 35.
20. ஞானசம்பந்தம், மலர் 15 இதழ் 12 - மலர் 16 இதழ் 1 பொய்கைநாடு கிழவன் என்ற கட்டுரையிற் காண்க.

ஒலோகமாதேவியார் பிரதிமம் இருபத்திரண்டு விரலே இரண்டு தோரை[21] உயரத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக எழுந்தருளுவிக்கப்பெற்றது;[22] இவர் எழுந்தருளிநின்ற பத்மம் ஐவிரல் உயரமுடையது. இதனோடு கூடச்செய்த பீடம் ஒன்பதிற்றுவிரல் சமசதுரத்து ஐவிரலே இரண்டு தோரை உயரமுடையது. இவர்க்குப் பொய்கை நாடு கிழவன் கொடுத்தன:—

திருக்குதம்பை ஒன்று பொன் ஏழு மஞ்சாடியும் குன்றியாக இரண்டினால் பொன் முக்கால் கழஞ்சு; திருக்கைக்காறை ஒன்று பொன் கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் மூன்றுமா; திருகைக்காறை ஒன்று பொன் கழஞ்சே எட்டுமா.

## 6. பிறவாறு நினைவு கூர்ந்தமை

செங்கற்பட்டு ஜில்லாவில் இப்பொழுது மணிமங்கலம் என்ற பெயருடைய சிற்றூர் முற்காலத்தில் சிறந்த நகரமாக விளங்கியது. அதற்குஇராசராசன் காலத்தில் லோகமாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்று பெயர் வழங்கியதாகச் சில கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[23]

சோழபாண்டியன்[24] ஜடாவர்மன் சுந்தரபாண்டியனது 13ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று திருநெல்வேலி ஜில்லா மன்னார்கோவிலில் உள்ளது. மன்னார்கோவிலில் பல சேரிகள் [25] இருந்தன. அவற்றுள் ஒன்று லோகமா

---

21. தோரை-நெல்; 8 தோரை ஒரு விரல்; 12 விரல் ஒரு சாண்.
22 S. I. I. Vol II No. 38.
23 292 of 1897; 7 of 1892.
24 சோழர் அரசியலில் சோழ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பாண்டி நாட்டில்தலைவர்களாக விளங்கினர். அவர்கள் சோழபாண்டியர் எனப்பெற்றனர். இச் சோழபாண்டியன் முதலாம் இராஜேந்திரனின் மகனாவன்.
25 சேரி - தெரு.

தேவிச்சேரி என்பது. இங்ஙனம் இவ்வம்மையார் பெயரை ஊர்களும் தெருக்களுக்கும் இட்டு இவ்வம்மையாரைப் பண்டைப் பெருமக்கள் நினைவு கூர்ந்தமை அறியத்தக்கது.

## தாய்

உலோகமாதேவியாரின் தாய் பெயர் குண்டனன் அமிர்த வல்லி என்று கீழூர்க் கல்லெழுத்தால் அறியப் பெறுகிறது (239 of 1902) இது முதலாம் இராசராசனது 9-ஆம் ஆட்சியாண்டுக்குரியது. இவ்வம்மையார் விளக்கெரிக்கப் பொன் அளித்ததாக இக்கல்லெழுத்தில் உள்ளது.

## முடிவுரை

இதுகாறும் கூறியவாற்றுன் தந்திசக்தி விடங்கியாராகிய ஒலோகமாதேவியார் பல திருப்பணிகளை யாற்றிச் சிவம் பெருக்கியமை தெற்றெனவிளங்கும். "தம் புகழ்நிறீஇத்தாம் மாய்ந்த" அம்மையாரின் நினைவு சைவநன்மக்களை நன்னெறிப் படுத்துவதாகும்.

# 9. இசை ஞானியார்

## முன்னுரை

சுந்தரரைத் திருமகனாராகப் பெற்றெடுத்த பெருமை யுடையவர் இசைஞானியார். இவரைப்பற்றிய செய்தி களாகத் தடுத்தாட்கொண்ட புராணம், சுந்தரர் தேவாரம், திருத்தொண்டர் திருவந்தாதி, திருவாரூர்க் கல்வெட்டு ஆகியவற்றினின்று அறிவனவற்றை இங்குக் காண்போம்.

## சடையனார்

இவர் சுந்தரருடைய தந்தையாவர். இவரே இசை ஞானியாரின் கணவனார் ஆவர். இவ்விருவரும் தவம் செய்து பெற்றெடுத்தவரே சுந்தரர். தடுத்தாட்கொண்ட புராணத் தில், ''ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசைஞானியார்'' என்று பின்வரும் பாடலில் இசைஞானியார் கூறப்பெற் றுள்ளார்:—

''மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர்குலத்துள் தோன்றி மேம்படு சடையனாருக்(கு)
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானியார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருவவதாரஞ் செய்தார்.''

## திருத்தொண்டத் தொகையில்

திருவாரூரில் சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடியது யாவரும் அறிந்ததே. அதுவே பெரிய புராணத்துக்கு அடிப் படையாயமைந்த நூலாகும். அத்திருத் தொண்டத் தொகையுள் சுந்தரர் தன்னை ''இசைஞானி காதலன் திரு நாவலூர்க்கோன்'' என்று குறித்துக் கொண்டிருக்கிறார்.

## திருத்தொண்டர் திருவந்தாதி

திருத்தொண்டத் தொகையில் கண்ட அடியார்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாடல் வீதம் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற பெயரில் 89 பாடல்கள் எழுதியவர் நம்பி யாண்டார் நம்பிகள். இத்திருவந்தாதியைத் திருத் தொண்டத் தொகைக்கு வகைநூல் என்பர். இத்திருத் தொண்டர் திருவந்தாதியில் 85 ஆவது பாடல் இசைஞானி யாரைப் பற்றியது ஆகும். இப்பாடல் பின்வருமாறு:—

பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள்
ஊப் பொள்ளல் நீள்பனைக்கைக்
கயந்தான் உகைத்தநற் காளையை
என்றுங் கபாலங் கைக்கொண்
டயந்தான் புகும்அரன் ஆரூர்ப்
புனித அரன்திருத்தாள்
நயந்தாள் தனதுள்ளத் தென்றும்
உரைப்பது ஞானியையே.

("காளையைப் பயந்தாள்" என்றும், "அரன்திருத்தாள் தனதுள்ளத்து நயந்தாள்" என்றும் உரைப்பது ஞானியை என்று கூட்டுக.)

## பெரியபுராணம்

திருத்தொண்டத் தொகைக்கு விரிநூலாக அமைந்தது பெரியபுராணம். பெரியபுராணம் ஆகிய திருத்தொண்டர் புராணத்தில், இசைஞானியார் புராணத்தில் பின்வரும் ஒரு பாடல் மட்டும் காணப் பெறுகிறது:-

"ஒழியாப் பெருமைச் சடையனார்
உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் பரங்கள் எய்தழித்தார்
ஆண்ட நம்பி தனைப்பயந்தார்

இழியாக் குலத்தின் இசைஞானிப்
பிராட்டி யாரை என்சிறுபுன்
மொழியாற் புகழ முடியுமோ
முடியா தெவர்க்கும் முடியாதால்.

**சுந்தரர் தேவாரத்தில்**

சுந்தரர் தம் தேவாரத்தில் மூன்று திருப்பாடல்களில் தம் தாயார் பெயரைக் குறிப்பிட்டிருக்கிருர். அவை பின் வருமாறு:—

(i) (கலயநல்லூர்: தண்புனலும்)

நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன்
நாவலர்கோன் ஆரூரன்.........

(ii) (திருவதிகைத் திருவீரட்டானம்)

என்பிஜனயே கலஞக அணிந்தானை எங்கள்
எருதேறும் பெருமானை இசைஞானி சிறுவன்
வன்பனைய வளர்பொழில்சூழ் வயல்நாவ லூர்க்கோன்
வன்றெண்டன் ஆரூரன்.........

(iii) (திருத்தொண்டத் தொகை): இசைஞானி காதலன்

**திருவாரூர்க் கல்வெட்டு:**

திருவாரூர்த் தியாகேசப் பெருமான் திருக்கோயில் இரண்டாம் பிராகாரத்தில் மேற்குப் புறச்சுவரில் இசைஞானியாரைப்பற்றி ஒரு வடமொழிக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. கல்வெட்டு வடமொழிப் பகுதி மட்டும் தென்னிந்திய சாசனங்கள் நான்காம் தொகுதியில் 397-ம் கல்வெட்டாகவும் (No. 73 of 1890), ஏழாம் தொகுதியில் 485-ம் கல்வெட்டின் தொடர்ச்சியாகவும் (269 of 1901) அச்சிடப்பெற்றுள்ளது இக்கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்

தது. இதில் குலோத்துங்கன் அநபாயன் எனப் பெற்றுன் சம்பந்தர் ''பிரம்ஹ புரீச'' என்றும், நாவுக்கரசர்' ''வாகதி பதி'' என்றும், சுந்தரர் ''ஸ்வ ஸ்வாமிமித்ர'' என்றும் குறிக்கப் பெற்றுள்ளனர். வடமொழிக் கல்வெட்டின் இறுதியில் சுந்தரர், ''ஆளுடைய நம்பி'' என்று குறிப்பிடப் பெற்றதோடு அவருடைய தாய் இசைஞானியார் என்றும், அவ்வம்மையார் ஞானசிவசாரியார் குலத்தில் உதித்தவர் என்றும் அவருடைய கோத்திரம் சைவ கௌதம கோத்திரம் என்றும், அவதரித்த ஊர் கமலாபுரம் என்றும் சொல்லப்பெற்றுள்ளன. கமலாபுரம் என்பது திருவாரூர். இசைஞானியாரைப்பற்றிய கல்வெட்டுப் பகுதி பின் வருமாறு:—

''ஆளுடைய நம்பி மாதாக்கள் இசைஞானியார்
ஜநநீபவதோ ஞானசிவாசார்ய குலேபவது சைவே
கௌதம கோத்ரேஸ்மிஞ்ஞான்யாக்யா கமலாபுரே''

இக்கல்வெட்டில் ''ஆளுடைய நம்பி மாதாக்கள் இசை ஞானியார்'' என்றவை மட்டும் தமிழ் எழுத்துக்களிலும் எஞ்சியவை கிரந்த எழுத்துக்களிலும் உள்ளன.

இக்கல்வெட்டில் இசை ஞானியாரைப்பற்றிக் குறிக்கப் பெற்றவை சேக்கிழார் சுவாமிகளால் யாண்டும் குறிப்பிடப் பெறவில்லை.

### திருநக்ஷத்திரம்

சித்திரை மாசத்தில் சித்திரை நாளே இவ்வம்மையாரின் திருநாள் ஆகும். அந்நாளில் இசைஞானியாரையும், அவர் தம் கணவனுராகிய சடையனுரையும், மகனுராகிய சுந்தரரை யும் போற்றி உய்க.

# 10. இரு வில்லிகள்

## வில்லி

வில்லை உடையவன் வில்லி. வில்லி என்பது இலக்கியச் சொல். இராமகாதையில், இந்திரசித்து போர்க்களத்தில் மடிந்த பிறகு இராவணனுக்கு அவன் தாயைப் பெற்ற பாட்டனாகிய மாலியவான் உபதேசிக்கும்போது, ''விதிவிளைத் தது; அவ் வில்லியர் வெல்க! நீர் வெல்க!'' என்கிறான். 'வில்லியர்' என்ற சொல்லுக்கு வில்லை உடையவர் அல்லது விற்போர் வீரர் என்று அங்கே பொருள் கொள்கிறோம்.

## ஒரு வில்லி

அவன் சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக் கும் முகத்தினன்; ஓவிய உருவன்; நம்பியைக் காண நங்கைக்கு ஆயிர நயனம் வேண்டும் என யாவரும் போற்றும் எழிலன்; வனைந்தனைய திருமேனி வள்ளல்;

''தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரும் அஃதே!
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?''

என்ற வண்ணம் கண்டாரைப் பிணிக்கும் கட்டழகன்; கார் முகில் வண்ணன்; அல்லையாண்டமைந்த மேனி அழகன்;

''கற்றையம் சடையவன் கண்ணில் காய்தலால்
இற்றவன், அன்றுதொட் டின்று காறும்தன்,
நற்றவம் இயற்றி, அவ் அனங்கள் நல்உருப்
பெற்றனன்''

என்ன முப்புரங்கள் செற்ற சேவலோன் துணைவனுன செங்கை யோன் தங்கை (சூர்ப்பணகை) கூறிய சுந்தரன்.

அவன் சுந்தரன் மட்டுமல்லன்; அந்தரத்தவரும் அதிச யிக்கும் வில்லாற்றல் கொண்டவன். தாடகை விளிந்து உருள வில் கோலியவன்; மிதிலை புக்க நாள் திரியம்பகம் எனும் வில் இறுத்து அருளியவன்; கரன் முதல் கருணையற் றவர், கடற்படையொடும் சிரம் உகச் சிலை குனித்து அருளி யவன்; முக்கோடி வாணுளும் முயன்றுடைய பெருந்தவமும் கொண்ட இராவணனை வதம் செய்த ஏந்தல். அச் சுந்தரன்- வில்லி-விசுவாமித்திரனின் வேள்வியை, அரக்கரை அழித்துக் காத்தபோது தேவர்களும் வாழ்த்திய சிறப்பைக் கம்பன் பின் வருமாறு கூறுகிருன்:

''பந்தரைக் கிழித்தன, பரந்த பூமழை
அந்தர துந்துமி முகிலின் ஆர்த்தன;
இந்திரன் முதலிய அமரர் ஈண்டினர்,
சுந்தர வில்லியைத் தொழுது வாழ்த்தினர்.''

இந்திரன் முதலிய தேவர்கள் வாழ்த்திய சுந்தர வில்லி இராமனே அன்ரே?

## இன்னும் ஒரு வில்லி

இவன் விற்படி திரள்தோள் வீரன்; பூசல் விற்குமரன்; கோல்நிறக் குனி வில் செங்கைக் குமரன்; கொற்றவான் சிலைக்கை வீரன்; வாகை வெஞ்சிலைக்கை வீரன்.

இவன் செய்த வரிவில் ஆண்மையைக் கண்டு புலத்தி யன் மருமாளுகிய கும்பகருணன், 'திரிபுரம் செற்ற தேவனும் இவனுமே செருவில் ஒரு வில்லாளர்' என்று ஆயிரங்கால் எடுத்துரைத்தான்.

இவன், மாற்றங்கள் வில்லினுல் சொல்லின் அல்லது வெந்திறல் வெள்கச் சொல்லினுல் சொலக் கற்காதவன்.

''வானெலாம் பகழி; வானின்
வரம்பெலாம் பகழி; மண்ணும்
தானெலாம் பகழி; குன்றின்
தலையெலாம் பகழி; சார்ந்தோர்
ஊனெலாம் பகழி; ஏன்ருேர்
உயிரெலாம் பகழி; வேலை
மீனெலாம் பகழி யாக
வித்திடும்...' விற்ருெழில் வல்லவன்.

''பொன்மலை வில்லி ஞன்தன்
படைக்கலம் பொருந்தப் பற்றி
மின்னெயிற்று அரக்கர் தம்மேல்
ஏவினுன் வில்லின் செல்வன்''

எனக் கம்பனுல் போற்றப்பெற்றவன். முதல்வனுகிய சிவன், 'முன்னுள், எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக் கொடுத்த வரம்' பெற்ற இராவணனே, இவன் வில்லாற்றலைக் கண்டு அதிசயித்து, 'வில்லினுல் இவன் வெலப்படான்' என்ருன். இவன் வில்லாற்றலை,

''நன்று போர்வலி; நன்றுபோ ராள்வலி; வீரம்
நன்று; நோக்கமும் நன்று,கைக் கடுமையும் நன்று
நன்று கல்வியும்; நன்றுநின் திண்மையும் நலனும்
என்று கைம்மறித்து இராவணன் 'ஒருவன்' நீ
என்ருன்.''

இவன் உறங்காமல் வில்லுடன் கடமையாற்றியவன். இதுவே இவனுக்குக் கூறப்படும் தனிச் சிறப்பு. இராவணனுடன் முதற் போர் புரியும் நிலையைக் கம்பன்,

''எய்தான்சரம் எய்தாவகை
இற்றெகென இடையே
வைதாலென ஐதாயின
வடிவாளியின் அறுத்தான்
'ஐதாதலின் அறுத்தாய்இனி
அறுப்பாய்'என அழிகார்
பெய்தாலெனச் சரமாரிகள்
சொரிந்தான்துயில் பிரிந்தான்''

என்கிருன்.

வீடணனுக்கு முடிசூட்டுக என இராமன் இவனை நோக்கி ஆணையிடுவதாகக் கூறும் பாடலிலும் இவன் உறங்காமை சிறப்பிக்கப் பெறுகிறது.

''உய்ஞ்சனன் அடிய னேன்என்
றூழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனி யானை
அழகனும் அருளின் நோக்கித்
தஞ்சநல் துணைவன் ஆன
தவறிலாப் புகழோன் தன்னைத்
துஞ்சலில் நயனத் தைய!
சூட்டுதி மகுடம் என்ருன்''

என்ற இந்தப் பாடலில் 'துஞ்சலில் நயனத் தைய!' என்று இவன் விளிக்கப் பெறுகிருன்.

இவ் வில்லி துஞ்சலில் நயனத்தவனுகச் சிறப்பிக்கப் பெறுவதற்குக் குறிப்பாக ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது. இராமனும் சீதையும் கங்கைக் கரையில் உறங்கியபோது அவர்களுக்கு இடையூறு வாராமல் இரவெல்லாம் இவன் கண் விழித்துக் காத்தான். இச் செய்தியைக் கம்பன்,

''மாலைவாய் நியமம் செய்து
மரபுளி இயற்றி, வைகல்

வேலைவா யமுதன் ஞனும்
  வீரனும் விரிந்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல்
  வைகினர்; வரிவில் ஏந்திக்
காலைவா யளவுந் தம்பி
  இமைப்பிலன் காத்து நின்ருன்"

என்று சுவை பொருந்தச் சித்திரிக்கிருன்; இதே செய்தியைப் பின்னர் வந்த பரதனிடம் குகன் கூறுவதாக ஒரு பாடலில் மெய்ப்பாடு மிளிரச் சொல்கிருன்:

"அல்லையாண் டமைந்த மேனி
  அழகனும் அவளும் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
  வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய்,
  கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்ருன்
  இமைப்பிலன் நயனம் என்ருன்."

இவ் வில்லி, இலக்குவன். இவனை 'உறங்கா வில்லி' என்று சொல்லலாம்.

## கல்வெட்டில் சுந்தர வில்லி

சுந்தர வில்லி என்று இராமனைக் குறிக்கக் கம்பன் பயன்படுத்திய பெயர் 13-ஆம் நூற்ருண்டில் ஒருவனுக்குப் பெயராக இருந்தது என்று புதுக்கோட்டைச் சாசனங்கள் என்ற கல்வெட்டுத் தொகுதியால் அறிகிருேம். அத்தொகுதியின் 342-ஆவது சாசனம், செவலூர்ப் பூமீசுவரர்கோயிலில் சுவாமி கோயில் தென்புறச் சுவரில் உள்ளது. அச்சாசனம் சுந்தர பாண்டியன் என்ற பாண்டிய அரசனுடைய 11-ஆவது

ஆட்சியாண்டில், அதாவது 20—7—1248 அன்று வெட்டப் பெற்றது. அதில் தருமம் செய்தவன் பெயர் ''சுந்தரவில்லி'' என்று காண்கிறது. அவன் முழுப் பெயர் 'பொன்னமராவதிக் கண்டன் சுந்தர வில்லியான நிஷாதராசன் என்பது.

## கல்வெட்டில் உறங்கா வில்லி

உறங்கா வில்லி என்ற பெயர் உள்ள சாசனம் ஸ்ரீவில்லி புத்தூரில் சூடிக் கொடுத்த நாச்சியார் கோயிலில் உள்ளது. அச்சாசனம், ''பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் புதுவையர்கோன் விஷ்ணுசித்தன் கோதைக்கு நாம் வரக் காட்டின பிரணய பத்திரிகை'' என்று ஸ்ரீரங்கநாதரே ஆண்டாளுக்கு எழுதிய கடிதம் போல் உள்ளது. இச்சாசனத்தை வெட்டுவித்தவன் 'உறங்காவில்லிதாசன்' ஆன மகாபலி வாணதராயர் என்னும் அரசியல் அலுவலாளராகிய பரம பாகவதர் ஆவார்.

இக்கல்வெட்டு (577 of 1926) தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் என்னும் கல்வெட்டுத் தொகுதியின் முதற் பாகத்தில் 149-151 பக்கங்களில் காட்டப்பெற்றுள்ளது.

இக் கல்வெட்டில் காணப்படும் செய்தி: திருவரங்கத்தில் பெரிய கோயிலில் சேரனை வென்றான் மண்டபத்தில் சுந்தர பாண்டியன் பந்தற்கீழ் அரியராயன் கட்டிலில் ஸ்ரீரங்கநாதர் வீற்றிருந்தருளினர். அவ்வமயம் கோதை வீட்டிலிருந்துஅர்ச்சகர், குடவர், தண்டெடுப்பார் முதலியவர்கள் வந்தார்கள். ஸ்ரீரங்கநாதர் அவர்களை எதிர்கொண்டழைப்பித்தார். அவர்கள் கோதை வரக் காட்டின சாசனம் (அனுப்புவித்த கடிதத்தை) வாசித்துக் காட்டச் செய்திகளை ஸ்ரீரங்கநாதர்அறிந்து கொண்டருளினர். அக்கடிதத்தில் 'ஸ்ரீரங்கநாதர் பதினாருயிரம் தேவிமாரொடும் பெரிய மண்டபத்திலே விநோதித் திருப்ப'தாகத் தோழியர் கோதைக்குத் கூறினர்; கோதை புண்ணிற்பு புளி பெய்தாற்போலவும், வேலால் துன்னம் பெய்தாற்போலவும் மனம் வெந்து நிலை தளர்ந்தாள்:

"கொள்ளும் பயனொன் றில்லாக்
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட் டவன்மார்பில்
எறிந்தென் அழலைத் தீர்வேனே!"

என்று உள்ளே உருகி நைந்தாள் என்ற செய்திகளுடன் அரங்கநாதரைப் 'பொருத்தமிலி, பெண்ணின் வருத்தமறியாத பெருமான்' என்று தாய்கூறி வருந்தியதாகக் கோதை வரக் காட்டிய கடிதத்தில் இருந்தது. இங்ஙனம் தாய் கூறியது, 'நம்திறத்து ஊடல் கொண்டு உவப்பதற்காகவே' என்று அரங்கநாதர் கருதி, 'நாம் முப்பத்துமுக்கோடி அமரர்க்கு முன் சென்று கப்பம் தவிர்ப்பது காரணமாகவும், தேவ ரக சியமாகவும் பெரிய மண்டபத்தில் இருந்தோம்; நாம் கோதையல்லது பிறரை விரும்புவதில்லை; நமக்கு உள்ளவாறு பல்லக்கும் குடையும், நாம் பூணும் கண்டமாலை ஆபரணங் களும், பட்டு, பருத்தி, சுகந்த திரவியங்களும் கோதையும் பெற வேண்டும்' என்று அருளி, அடுக்களைப் புறமாகத் திடியன் ஆன திருவரங்க நல்லூரை ஸ்ரீரங்கநாதரே அளிப்ப தாக அமைந்தது இச்சாசனம்.

இதுகாறும் கூறியவற்றால், கம்பன் இராமனைக் குறித்த 'சுந்தரவில்லி' என்ற பெயரையும், 'உறங்கா வில்லி' என்று இலக்குவனை நினைவூட்டும் பெயரையும் மக்கள் தம் பெயர் களாகக் கொண்டு மகிழ்ந்தனர் என்பதும், இங்ஙனமும் இராமகாதையைப் பெரிதும் போற்றினர் என்பதும் அறியலாம்.

### பிள்ளை உறங்கா வில்லிதாசர்

இராமாநுசருடைய சீடர்களில் பிள்ளை உறங்கா வில்லி தாசர் என்பவர் ஒருவர். இவர் மறக்குடியில் தோன்றியவர்; உறையூர்ச் சோழருக்குச் சேவகம் செய்து வந்தவர். இவரது மனைவி பொன்னாச்சி. இவ்வழகியின் அழகில் ஈடுபட்டிருந் தமையை மாற்றி இறைவனது அழகில் ஈடுபட்டு உய்யுமாறு செய்தார் இராமாநுசர். ஒருநாள் நீராடித் தூய்மையுடன்

சென்றுகொண்டிருந்தார் இராமாநுசர். செல்பவர் தம் சீடர் களுள் இருவரின் கைமேல் ஆடையை மடித்துவைத்து அதன் மேல் தன் கை வைத்துச் செல்வது பழக்கம். உறங்காவில்லி தாசர் எதிரில் வந்து வணங்கினர். உடனே இராமநுசர் வேடவில்லியார் தோளின்மலே் தம்முடைய கையை வைத்து அவர்மீது சாய்ந்து நடந்தார்; இதற்குரிய காரணம் வினவ, அவருடைய உடம்பைத் தீண்டிஞலே தமக்குப் புதிய சக்தி பிறப்பதாகக் கூறினர். ஒரு சமயம் யாவருக்கும் தெரியாமல் இராமாநுசர் தம்முடைய சீடர்களின் ஆடைகளில் ஒரு சிறிது கிழித்துஎடுத்து மறைத்து வைத்தார்; கிழிக்கப்பட்டிருந்ததைக் கண்டு யாவரும் கூக்குரலிட்டனர். மறுநாள் இராமாநுசர் இருவரை அழைத்துப் பொன்னச்சியாரின் நகைகளைக் களவாடி வருமாறு ஏவினர். சென்றவர்கள் அம்மையாரின் ஒரு பக்கத்துக் காதணிகளைக் கழற்றினர். இதை அறிந்த அம்மையார் இன்னெரு புறத்துக் காதணிகளையும் கொண்டு செல்வாராகுக என்று நினைத்துப் புரண்டார்; அம்மையார் விழித்துக் கொண்டார் என்று நினைத்து அவர்கள் திருடிக் கொண்ட காதணியுடன் இராமாநுசரிடம் வந்தனர். நடந் ததை அறிந்த வில்லியார், திருடர்கட்கு நேர்ந்த ஏமாற்றத்தை அறிந்து வருந்தித் தன் மனைவியைப் புறகு என ஒதுக்கினர். இச்செய்தியை அறிந்து, இராமாநுசர் இருவரையும் அழைப் பித்து, உண்மையை யாவரும் உணருமாறு கூறி, அவ்விருவ ருடைய உள்ளத் தூய்மையையும் பொருட்பற்றின்மையையும் உலகினர்க்கு அறிவித்து, அவ்விருவரையும் ஒருங்கு சேர்ப் பித்தார். இவரும் இலக்குமணருடைய பெயர் தரித்த ஸ்ரீவைஷ்ணவர் ஆதல் அறிந்து இன்புறற் பாலதாகும்,

### நெல்லூர்க் கல்வெட்டில்

நெல்லூர் ஸ்ரீரங்கநாயகர் கோயிலில் முதற் குலோத் துங்க சோழனது 31 ஆவது ஆட்சியாண்டுக்குரிய கல்வெட் டில் உறங்கா வில்லிதாசர் என்றெருவர் குறிக்கப் பெறுகிறர். இது பூந்தமலி வெட்டந்தை நம்பியாண்டி மகன் வெம்பாழ் வான் கொடுத்த சாசனம் ஆகும். இது கி.பி. 1111-க்குரியது. (S. I. I. Vol. V, No. 491).

# 11. எண்ணலங்காரம்

## குறிப்பில் தருமொழி

சொற்கள் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பொருளைத் தருவன ஆகும். 'ஊர் உறங்கியது' என்பதில் ஊர் என்பது மக்களைக் குறிக்கும். இதனை இடவாகுபெயர் என்று கூறுவர் இங்ஙனம் ஆகுபெயருள் பலவகை உண்டு.

'அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மர் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!'

என்ற இடத்தில் நூற்றுவர் என்பது துரியோதனனை முதலாகக் கொண்ட நூறுபேரையும், ஐவர் என்பது தருமனை முதலாகக் கொண்ட ஐந்து பேரையும் குறிக்கும். இதனைத் தொகைக் குறிப்பு என்பர். இங்ஙனம் குறிப்பால் பிற பொருள்களை உணர்த்தும் மொழிகளைக் குறிப்புமொழி என்று கூறுவர். இவற்றை,

''ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே
முதல்தொகை குறிப்போடு இன்னபிறவும்
குறிப்பில் தருமொழி அல்லன வெளிப்படை''

என்ற சூத்திரத்துள் நன்னூலார் கூறியுள்ளார்.

## பிற குறிப்பு

பல்வேறு வகைகளில் கொடுக்கப்பட்ட சொற்களால் பொருளை உணர்ந்துகொள்ளுமாறு அமைப்பது பிறகுறிப்பு என்னலாம். பிறகுறிப்புக்கு உதாரணமாகப் புறப்பொருள் வெண்பாமாலையில் - பாடாண்திணையில்-ஓம்படை என்னும்

துறைக்குக் கொடுக்கப்பட்ட பின்வரும் பாடல் இலக்கண உரையாசிரியர்களால் தரப்பெற்றுள்ளது:-

''ஒன்றில் இரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களம்கொண்ட வேல்வேந்தே - சென்றுலாம்
ஆழ்கடல்சூழ் வையகத்துளை ந்துவென் றுறகற்றி
ஏழ்கடிந்து இன்புற் றிரு.''

இதில் ஒன்றுமுதல் ஏழுவரை உள்ள எண்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. இவ்வெண்கள் ஒவ்வொன்றும் குறிப்பாகப் பல பொருள்களை அறிவிப்பனவாகும். இப்பாடலில் கண்ட எண்களின் விளக்கம் பின்வருமாறு:

ஒன்று — ஞானம்
இரண்டு — காரண, காரியங்கள்
மூன்று — நட்பு, பகை, நொதுமல்
நான்கு — யானை, தேர், குதிரை, காலாள்
ஐந்து — மெய், வாய், கண், மூக்கு, செவி
ஆறு — நட்பு, பகை, செலவு, நல்லிருக்கை,
கூடினரைப் பிரித்தல், கூட்டல்
ஏழு — வேட்டம், கடுஞ்சொல், மிகுதண்டம், சூது,
மிகுபொருளீட்டம், கள், மிகுகாமம்

இவ்வெண்களை வேறுகூறுவாரும் உளர். அவை வருமாறு:-

ஒன்று — ஆன்மா
இரண்டு — புண்ணியம், பாவம்
மூன்று — காமம், வெகுளி, மயக்கம்
நான்கு — சாம, தான, பேத, தண்டம்
ஐந்து — சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
ஆறு — படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு
அரண்

## எண்ணடுக்கு

மேற்கண்டவாறு எண்கள் தொகைக்குறிப்பான் பொருளை உணர்த்தாது, ஒன்றுமுதல் பதினெட்டு ஈருக அடுக்கி, வெண்பா யாப்பில் காளமேகப்புலவர் பாடிய பாட்டொன்று தனிப்பாடல் திரட்டில் காணப்படுகிறது. அஃது பின்வருமாறு:—

''ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு ஏழெட்டு
ஒன்பது பத்துப் பதினென்று பன்னி
ரண்டுபதின் மூன்றுபதி நான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழுபதி னெட்டு.''

இப்பாடலில் முதல்வரியில் ஐந்தாறு ஏழெட்டு என்ற இரு இடங்களிலும் 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடா'மை குறையே ஆகும்.

## எண்ணலங்காரம்

மேலே கண்டவாறு எண்கள் பிற குறிப்பான் பிற பொருளை உணர்த்துதல் இன்பம் பயப்பதாக இருக்க எண்களை வரிசையாக அடுக்கி அவற்றோடு அவ்வெண்கள் குறிக்கும் பொருளையும் இணைத்துப்பாடும் பழக்கம் காணப் படுகிறது. சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கு விநாயகர் துதியாக அமைந்த பின்வரும் பாடல் இவ்வழகு வாய்ந்த தாக இருக்கிறது:—

''ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தரும் ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகுலட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றோ, என்னச் செய்யும் தேவே!''

இப்பாடலில் நால்வாய் என்பதிலுள்ள நான்கு என்பதும், ஆறு என்பதும் எண்கள் போன்றிருப்பினும் எண்களைக் குறிக்கவில்லை.

இப்பாடலில் கண்ட அணியை எண்ணலங்காரம் என்று சிவஞான முனிவர் சிற்றுரையில் கூறியுள்ளார்.

### சம்பந்தர் தேவாரத்தில்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருவீழிமிழலைத் திருப்பதிகத்துப் பாடலொன்றிலும் இவ்வெண்ணலங்காரம் பொருந்தியிருத்தலைக் காணலாம். அப்பாடல்,

"ஈறாய்முதல் ஒன்றாய்இரு பெண்ஆண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உட னானான்இடம் வீழிம்மிழ லையே"

என்பது. உலகிற்கு இறுதியைச் செய்யும் முதல்வன் அந்தமும் ஆதியும் ஆகும்போது வேறாய் நிற்கிறான்; உலகியல் பொருள்களோடு ஒன்றாய் நிற்கிறான்; உயிர்களோடு உடனாய் நிற்கிறான். இச்செய்திகளைச் சம்பந்தர் மேற்குறித்த பாடலில் அருளிச் செய்துள்ளார். இறைவன் ஒன்றாய் நின்று உலகியல் பொருள்களை இயக்கும் திறத்தைக் கூறவந்த பகுதியே 'ஒன்றாய்' என்பது முதல் 'எட்டுத்திசை தானாய்' என்பது வரை ஆகும். இதனுள்,

| | | |
|---|---|---|
| ஒன்று | — | ஒன்றாய் இருந்து உலகியற் பொருள்களோடு ஒன்றாய் நிற்பது |
| இரண்டு | — | ஆண், பெண் |
| மூன்று (குணம்) | — | சத்துவம், இராஜசம், தாமசம் |
| நான்கு (மறை) | — | இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் |
| ஐந்து (பூதம்) | — | நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் |
| ஆறு (சுவை) | — | துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, புளிப்பு, இனிப்பு |

ஏழு (ஓசை) — குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்

எட்டு — எட்டுத்திசை

### திருமூலர் திருமந்திரத்தில்

எண்ணலங்காரம் பொருந்திய பாட்டொன்று திருமந்திரத்தின் முதற் பாடலாகத் திகழ்கின்றது. அப் பாடல் பின்வருமாறு:-

"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே."

### எண் விளக்கம்

ஒன்று — இறைவன் ஒருவனே

இரண்டு — இறைவனும் அவனது இன்னருளாகிய சக்தியும்

மூன்று — அயன், அரி, அரன் என்னும் இம் மூன்றுள்ளும் நிற்கும் நிலை.

நான்கு — உலகாதீதன், உலககாரணன், உலகிற்கு அந்தர் யாமி (உயிராய் நிற்றல்), உலகரூபி.

ஐந்து — ஐம்பொறிகள்

ஆறு — ஆறு ஆதாரங்களாகவும்[1] அவ்வாதாரங்கட்குரிய தேவதைகளாகவும்[2] ஆறத்துவாக்களாகவும்[3]

ஏழு — ஏழாவதாகிய துவாத சாந்தத்தில்[4] இருப்பவன்

எட்டு — அட்டமூர்த்தியாக[5] உணரப்பெற்று அவற்றுள்ளே கலந்திருப்பவன்.

| 1 ஆறு ஆதாரங்கள் | 2 தேவதைகள் | 3 ஆறு அத்துவாக்கள் |
|---|---|---|
| மூலாதாரம் | கணபதி | மந்திரம் |
| சுவாதிட்டானம் | பிரமன் | பதம் |
| மணிபூரகம் | திருமால் | வன்னம் |
| அநாகதம் | உருத்திரன் | புவனம் |
| விசுத்தி | மகேசுவரன் | தத்துவம் |
| ஆஞ்ஞை | சதாசிவன் | கலை |

4. துவாதசாந்தம் — பிரமரந்திரத்திற்கு மேலிருப்பது; அங்கு ஆயிரத்தெட்டிதழ்க் கமலம் உள்ளதாகத் தியானிக்கப் படுவது; பரமசிவத்தை அதிதேவதையாகப் பெற்று விளங் குவது.

5. அட்டமூர்த்தி — நிலன், நீர், தீ, இயமானன், காற்று, திங்கள், ஞாயிறு, ஆகாசம்.

## தஞ்சை வாணன் கோவையில்

கோவைப் பிரபந்தங்களில் வெகுவாகப் பயிலப்படுவது தஞ்சைவாணன் கோவை என்னும் பிரபந்தமாகும். இதனை எழுதியவர் பொய்யாமொழிப் புலவர். இந்நூல் ஏறத்தாழ 750ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதெனக் கருதப்படுகிறது இந்நூலுள் 341 ஆவது செய்யுள், 'ஆற்றிடை முக்கோல் பக வரை வினாதல்' என்ற துறையில் அமைந்துள்ளது. அது பின் வருமாறு:-

"ஒருவெண் குடையிரு நீழல்முக் கோல்கொண்
டொழுக்கத்தின
அருவெங் களரியைந் தாறுசெல் வீரரு ளீரெழுபார்
மருவெண் திசைபுகழ் வாணன்தென் மாறையென்
வஞ்சியன்னாள்
பொருவெஞ் சுடரிலை வேலொரு காளைபின்
போயினளே."

இதில் ஒன்று முதல் எட்டு வரை எண்கள் பயின்றுள்ளன. இரண்டைக் குறிக்கும் 'இரு' என்பது பெருமை என்ற பொருளிலும், 'களரியைந் தாறுசெல்வீர்' என்ற இடத்தில் ஐந்து ஆறு என்ற எண்கள் குறிப்பாக வேறு பொருளிலும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

## திருவள்ளுவ மாலையில்

திருவள்ளுவ தேவரையும் அவர் தம் திருக்குறளையும் சங்கப் புலவர்கள் போற்றிப் புகழ்ந்து பாடிய நூலாகக் கருதப் பெறும் திருவள்ளுவமாலையில் களத்தூர் கிழார் பாடிய பாடல் ஒன்றுளது. அது,

'ஒருவர் இருகுறளே முப்பாலின் ஓதும்
தருமம் முதல்நான்கும் சாலும் – அருமறைகள்
ஐந்தும் சமயநூல் ஆறும்நம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்'

என்பது. இப்பாடலுள் ஒன்று முதல் ஆறு வரை எண்கள் பயின்றுள்ளன. இப்பாடலில் எண்களின் விளக்கம் பின் வருமாறு:–

| | | |
|---|---|---|
| ஒருவர் | — | |
| இருகுறள் | — | ஒருவிகற்பக்குறள், இருவிகற்பக்குறள் |
| முப்பால் | — | அறத்துப்பால், பொருட் பால், காமத்துப்பால் |
| தருமமுதல் நாங்கு | — | அறம், பொருள், இன்பம், வீடு |
| மறைகள் ஐந்து | — | இருக்கு, எசுர், சாமம், அதர்வணம், பாரதம் |
| சமயநூல் ஆறு | — | சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்யம், கௌமாரம் |

## பதினோராம் திருமுறையில்

பதினோராம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவையின் முதல் ஆசிரியப் பாடலுள்,

'... ... .. புரிபுன் சடையோன்
திருவருள் பெற்ற இருபிறப் பாளன்
முத்தீ வேள்வி நான்மறை வளர
ஐவேள் வுயர்த்த அறுதொழி லாளன்
ஏழிசை யாழை எண்டிசை அறியத்
துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்'

என அமைத்துள்ள அடிகளில் இரண்டு முதல் எட்டு வரை எண்கள் பயின்றுள்ளன. எண்விரிவை இக்கட்டுரையில் ஆங்காங்குக் காணலாம்.

## பரிபாடலில்

பரிபாடலில் மூன்றும் பாடல் கடுவன் இளவெயினனார் பாடியது. அதில்,

' . . . . . . ஒன்றெனா
இரண்டெனா மூன்றெனா நான்கெனா ஐந்தெனா
ஆறெனா ஏழெனா எட்டெனாத் தொண்டெனா
நால்வகை யூழியெண் நவிற்றும் சிறப்பினை!

எனத் திருமாலைப் புகழ்ந்த பகுதி எண்ணலங்காரம் அமைந்தது. இப்பகுதிக்குப் பரிமேலழகர் தரும் விளக்கத்தின் சுருக்கம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| ஒன்று | — | ஆகாயத்தின் பண்பாகிய ஓசை |
| இரண்டு | — | காற்றின் சிறப்புப் பண்பாகிய ஊறு |
| மூன்று | — | தீயின் சிறப்புப் பண்பாகிய ஒளி |

நான்கு — நீரின் சிறப்புப் பண்பாகிய சுவை
ஐந்து — நிலத்தின் சிறப்புப் பண்பாகிய நாற்றம்
ஆறு — ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனமும்
ஏழு — அகங்காரம்
எட்டு — மான் (ஆன்மா)
தொண்டு(ஒன்பது)— மூலப்பகுதி

இப்பகுதியில் ஆறுதொகைப் பொருளதாய் வருவதென், றும், எஞ்சிய எண்கள் புரணப் பொருள என்றும் பரிமேலழகர் குறிக்கிருர். தொகைப் பொருளை உணர்த்தாமல், ஒன்றினையே சிறப்பாக உணர்த்துவதைப் பரிமேலழகர் புரணப் பொருள் எனக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

**கல்லெழுத்தில்**

மெய்க்கீர்த்திகளிலும் பிரசஸ்திகளிலும் எண் அலங்காரம் பொருந்திய பகுதிகள் பலப்பல. மாதிரிக்கு ஒன்று:—

கி. பி. 1216 முதல் கி. பி. 1238 வரை பாண்டிய அரசாகத் திகழ்ந்த முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்ற அரசனது மெய்க்கீர்த்தி ஒன்றில் எண்ணலங்காரம் பொருந்திய வரிகள் காணப்படுகின்றன. அவ்வரிகள்,

''ஒருகுடை நீழல் இருநிலம் குளிர
மூவகைத் தமிழும் முறைமையில் விளங்க
நால்வகை வேதமும் நவின்றுடன் வளர
ஐவகை வேள்வியும் செய்வினை யியற்ற
அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ
எழுவகைப் பாடலும் இயலுடன் பரவ
எண்டிசை யளவும் சக்கரம் செல்ல ''

என்பன. இவ்வரிகளில் உள்ள எண்களின் விளக்கம் பின்வருவாறு:—

இருநிலம் — பாண்யநாடும் சோழநாடும்

மூவகைத் தமிழ் — இயல், இசை, நாடகம்

நால்வகை வேதம் — இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்

ஐவகைவேள்வி — பிரமவேள்வி (வேதமோதுதல்), தேவ வேள்வி (யாகம்செய்தல்) மானிட வேள்வி (விருந்தோம்பல்), தென்புலத்தார். வேள்வி (தென் புலத்தார் பொருட்டு நீர்க்கடன் முதலியன செய்தல்), பூதவேள்வி (பிராணிகட்குப் பலியுணவு கொடுத்தல்).

அறுவகைச் சமயம்: புறம், அகப்புறம், அகம் எனும் நான்கனுள் தனித்தனி அறுவகைப் பட்ட சமயங்களுள் அகச்சமயம் ஆறு என்னலும் ஆம்.

எழுவகைப்பாடல் - ஏழிசை பொருந்தியபாடல் (ஏழிசை-குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன.)

## ஒன்றுகொலாம்

பொங்குகடல் கன்மிதப்பில் போந்தேறிய பெருந்தகை யாளராகிய திருநாவுக்கரசர், திருவையாற்றுக்குச் செல்லும் வழியில் திருநாவுக்கரசர் என்ற திருநாமம் ஒரு தண்ணீர்ப் பந்தர் முழுவதும் எழுதியிருப்பதைக் கண்டார். ஆங்கு அப் பூதி அடிகளாரின் அன்பின் திறத்தை வினவி அறிந்து அப் பூதி அடிகளாரின் அகத்தை அண்மினர். அப்பூதியடிகளும் வந்தவர் திருநாவுக்கரசர் என்பதை உசாவி அறிந்தார். அப்பூதியடிகளின் வேண்டுகோட்கிணங்கித் திருநாவுக்கரசர் அமுதுசெய இசைந்தார். அப்பூதியடிகளாரின் மூத்த மகன் வாழைக்குருத்து அரிந்துவரச் சென்ற பொழுது அராத்

தீண்டப்பெற்று மயங்கி வீழ்ந்தான். இருமுது குரவரும் தம் மூத்த புதல்வனின் உடலை மறைத்துவைத்துத் தடுமாற்றம் இலராகித் திருநாவுக்கரசரை அமுதுசெய வேண்டினர். இறைவன் திருவருளால் திருநாவுக்கரசர் அங்கு நடந்ததை அறிந்தார்; அராத்தீண்டிய மகன் உயிர் பெறப் பதிகம் பாடினார். அப்பதிகம் 'ஒன்றுகொலாம்' என்று துவங்குவது. அப்பதிகத்தில் ஒன்று முதல் பத்து எண்கள் தொகைக் குறிப்பாகவும் எண்ணலங்காரம் பொருந்தவும் சொல்லப்பட்டு உள்ளன. (விரிவைத் தருமையாதீன வெளியீடாகிய நாலாந் திருமுறையில் காண்க).

## எழுகூற்றிருக்கை

மாறனலங்காரம் என்றோர் அணியிலக்கணம் 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டது. இதனை இயற்றியவர் பரமபாகவதராகிய திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இந்நூலுக்குச் சிறந்த விருத்தியுரை உண்டு. அதனைச் செய்தவர் காரிரத்னகவிராயர். இம்மாறனலங்காரம், சொல்லணி இயலில், இறுதியில் எழுகூற்றிருக்கை என்று ஒரு அணி கூறப்பட்டுள்ளது. செய்யுளிலே ஒன்று என்னும் எண் முதற் கொண்டு ஏழு எண் வரயிலேயும் ஏற்றியும் இறக்கியும் பதினான்கு தடவை எண்ணலங்காரம் பொருந்த எண்ணி முடிப்பது எழுகூற்றிருக்கை எனப்படும். அதாவது:

1; 1–2–1; 1–2–3–2–1; 1–2–3–4–3–2–1;
1–2–3–4–5–4–3–2–1; 1–2–3–4–5–6–5–4–3–2–1;
1–2–3–4–5–6–7–6–5–4–3–2–1; என்ற முறையில் வருவது.

இதனை இரதபந்தத்தில் அமைப்பதும் உண்டு. அவ்வாறு அமைக்கப்பட்ட முறையை மாறனலங்கார உரையிலும், சாமிநாத பண்டிதர் அவர்களால் அச்சிடப்பெற்ற அடங்கல் முறைப் பதிப்பிலும் காணலாம்.

ஞானசம்பந்தர் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் திருஎழுகூற்றிருக்கையாக ஒரு பதிகத்தை அருளியுள்ளார்.

நக்கீரதேவநாயனார் பதினோராம் திருமுறையில் அருளியுள்ள திருஎழுகூற்றிருக்கையும், 11-ம் திருமுறையில் கண்ட நக்கீரர் பாடிய "ஓருரு" வும், மாறனலங்கார மேற்கோட் பாடலாகவுள்ள "ஒரு தனித்திகிரி"யும், இவ்வலங்காரம் கொண்டனவேயாம்.

## நாலாயிர திவ்ய பிரபந்தத்தில்

திவ்விய பிரபந்தத்தில் இரண்டாவதாயிரம் – திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழியில்–இரண்டாம் பத்து, பத்தாம் திருமொழி, இரண்டாவது பாசுரம் பின் இரண்டடிகளில் ஏழு முதல் எண்கள் இறங்குமுகமாக எண் அலங்காரம் பொருந்தவுளது. அப் பாடற்பகுதி பின் வருமாறு:-

வந்தனை செய்து இசையேழ் ஆறங்கம் ஐந்து
வளர்வேள்வி நான்மறைகள் மூன்று தீயும்
சிந்தனைசெய் திருபொழுதும் ஒன்றும் செல்வத்
திருக் கோவலூரதனுட் கண்டேன் நானே.

மூன்று முதல் ஏழு வரையில் ஏறுமுகமாக எண்கள் பயின்றவற்றைப் பெரிய திருமொழி 3-8-4ல் காணலாம்.

திருமங்கையாழ்வார் பாடியருளிய திருவெழுகூற்றிருக்கையும் திவ்யப்பிரபந்தத்தில் உண்டு. இது 46 அடிகளால் அமைந்த நிலைமண்டல ஆசிரியப்பா ஆகும்.

இத்திருவெழுகூற்றிருக்கையை இரதபந்தத்தில் அமைப்பது ஒருமுறை. ஆகவே இதனைச் சித்திரகவியின்பாற் படுத்தலாம்.

## முடிப்புரை

எண்ணலங்காரம் பொருந்திய பாடல்கள் இன்னும் எத்தனையோ உள. முன்னர்க் கூறிய 'ஈருய்முதலொன்ருய்'

என்ற பாடலோடு 'எண்ணிடை யொன்றினர்' 'மேவிலொன்றர்' 'மணந்திகழ் திசைகளெட்டும்' என்ற ஞானசம்பந்தர் தேவாரங்களும் எண்ணலங்காரம் பொருந்தியவையே! இவற்றுள் ஒன்று 'எண்ணிடை யொன்றினர்' என்ற பாடலுள் ஒன்று முதல் பத்துவரை எண்கள் உள்ளன. 'மணந்திகழ் திசைகளெட்டும்' என்பதில் எட்டு முதல் ஒன்றுவரை எண்கள் இறங்கு முகமாகக் கூறப்பட்டுள்ளன.

எண்கள் பயிலப்பட்டுள்ள இவ்வழகினை எண்ணலங்காரம் என்று அணியிலக்கண நூலாரோ அதன் உரையாசிரியர்களோ கூறியதாகத் தெரியவில்லை. ஆனால் சிவஞான சித்தியார்க்குச் சிற்றுரை யாத்த மாதவச் சிவஞானயோகிகளே 'ஒரு கோட்டன்' என்ற திருப்பாடலுரையில் 'இஃது எண்ணலங்காரம்' என்று குறித்துள்ளார். எனவே இவ்வழக்குக்குப் பெயரிட்டவர் சிவஞானமுனிவர் என்றே கருதலாம்.

# 12. தொனி

ஒரு செய்தியைச் சொல்லுமிடத்து வேருெரு பொருளும் உடன் அறியுமாறு அமைக்கப்பெறுவது தொனி எனப்பெறும். த்வனி–துவனி–தொனி இவை எல்லாம் ஒரு பொருளன. துவனி என்ருல் ஓசை என்று பொருள்படும். சம்பந்தர் தேவாரம்-காஞ்சிபுரம்–திருவியமகம்– ''தூயவானவர் வேதத் துவனியே'' காண்க. துழனி என்பதும் ஓசை என்று பொருள் படும்.

யமகம் என்று ஒரு சொல்லணியுண்டு. ஒரு சொல்லோ தொடரோ மடங்கி வேறுபொருள் அமையுமாறு பாடப்பெறுவது அது; மடக்கு என்பதும் அதுவே. ஆனல் தொனி என்பது அங்ஙனம் அன்று. கண் பார்வைக்கு அல்லது செவியுணர்வுக்குச் சொல்லளவில் அல்லது ஒலியளவில் சொற்கள் அமைந்திருக்கப் பொருள் புலப்பாட்டின்போது புலவன் கருதிய வேறுபொருள் அமையப்பெறின் அங்குத் தொனி என்னும் அழகு அமைந்துள்ளது எனக்கொள்ளலாம். இவ்வழகு இலக்கியங்களில் அருகியே காணப்படுவது.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிவஞானத்தைக் களிருக உருவகிக்கிருர். துதி செய்வதால் சிவஞானமாகிய களிறு பஞ்ச மலங்களையும் சுவரச் செய்கிறது. சிவஞானம் களிருக உருவகம் செய்யப் பெற்றதற்கேற்பத் துதிக்கையினுல் என்று யானைக்குரிய துதிக்கை என்னும் உறுப்பின் பெயர் அங்கு ஆசிரியரால் தொனிப்பொருள் அமையப் பெய்தருளப் பெற்றது. இங்கு வேண்டற்பாலது, துதிக்கை என்னும் உறுப்புச்சொல் அமைப்பு அல்ல; ஆனல் துதிக்கை எனும் சொல் இங்குத் தொனிப் பொருள் உடையதாய் அழகு தருவதாயிற்று.

"துதிக்கையினூற் பஞ்ச மலங்காய்ந்த சிவஞானக் கடாக்களிறு" என்பன அவ்வரிகள், (கந்தர்கலிவெண்பா 70 ஆவது கண்ணி காண்க.)

"சிவபெருமான் எவர்க்கும் பொது" என்று சொல்ல விழைந்த ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், திருவாரூர் நான்மணி மாலை செய்யுள் 23–ல், "எல்லார்க்கும் பொதுவில் நிற்கும், மதுவேய் மலர்ப்பொழில் ஆரூரினும் வைகும்" என்று கூறுகிறார். இதில் பொது என்பது சிதம்பரத்தையும் ஆரூர் என்பது திருவாரூரையும் த்வனிப் பொருளில் அமைத்து, இறைவன் பொதுவாக நிற்கும்' என்றும், 'யாருடைய ஊரிலும் (ஆர் ஊரிலும்) தங்கும்' என்றும் பொருள் தோன்றுமாறு அமைத்தார்.

இங்ஙனம் காட்சியளவை அல்லது செவியளவையில் சொற்கள் அமைத்துப் பொருள் அளவில் தாம் கருதிய பொருள் பொருந்துமாறு திருவானைக்கா உலாவில் சிலவரிகள் அமைந்துள்ளன. அவ்வரிகள் வருமாறு:—

"ஆதிரையான் மூல மறையத்தத் தா்ன்மகத்தான்
ஓதமெறி நாகைக்கா ரோணத்தான் சோதியான்"

இவ்வரிகளில் ஆதிரை மூலம் அத்தம் மகம் ஓணம் சோதி என்ற நட்சத்திரப் பெயர்கள் தொனிக்கின்றன.

ஆதிரை நட்சத்திரத்துக் குரியவன்; பழைய வேதத்தின் முடிவில் இருப்பவன்; (அந்தத்தான் என்பது வலித்தல் விகாரம் பெற்று அத்தத்தான் என்ருயிற்று); யாகத்துக்குத் தலைவன்; அலைகள் வீசும் நாகைக்காரோணம் (நாகப் பட்டினத்தில்) இருப்பவன்: ஒளிபொருந்தியவன் – இதுவே அவ்வரிகட்குரிய பொருள்.

பின்வரும் அவ்வுலா வரிகளில் ஆடி முதல் பன்னிரண்டு மாதங்களின் பெயர்களும் தொனியினுல் குறிக்கப்பட்டுள்ளன;

"கெச்சைதனில் ஆடியான் கேதகையொன் றுவணியான்
அச்சமனை யன்றுபுரட் டாசியான் பிச்சை
அடர்ந்திட்ட மாமுனிவர் ஆச்சிரமந் தோறும்
படர்ந்திட்ட மையற் பசியான் கொடுங்கூற்(று)
எடுக்கைக்கு வந்திறந்(து) ஏங்காத் திகையான்
கடுக்கைத் தொடைமார் கழியான் பொடிச்சுவைதையான்
வன்னி வளர்க்கும்சோ மாசியான் வஞ்சகமே
பண்ணுமவர் நெஞ்சத்தற் பங்குனியான்- நன்னீரால்
தீவணத்தங் குஞ்சித் திரையான் சிறுவனையாள்
காவணத்தில் ஏழோர்வை காசியான்-மூவரைவிட்டு
அப்புரத்தா ரூர்க்கும் அளித்தஉயிர் ஆனியான்"

'ஆடியான்' என்பது 'நடனம் ஆடியவன்' என்று பொருள்படும்; ஆடி என்பது தொனி.

'கேதகை ஒன்றுவணியான்' என்பது 'தாழையை ஒரு பொருளாக (மதித்து) அணியாதவன்' என்று பொருள்படும். ஆவணி என்பது தொனி.

'சமனை அன்று புரட்டு ஆசியான்' என்பது "யமனை அன்று புரட்டிய போரையுடையவன்; (ஆசி-போர்) என்று பொருள்படும்; புரட்டாசி என்பது தொனி.

'இட்ட மையல் பசியான்' என்பது 'மையலாகிய பசியை யிட்டவன்' என்று பொருள்படும்; அற்பசி (ஐப்பசி) என்பது தொனி.

'ஏங்காத்திகையான்' என்பது 'ஏங்கித் திகைக்கமாட்டான்' என்று பொருள்படும்; கார்த்திகை என்பது தொனி.

'கடுக்கைத் தொடை மார்கழியான்' என்பது 'கொன்றை மாலையை மார்பினின்று நீங்கான்' என்று பொருள்படும். மார்கழி என்பது தொனி.

'பொடிச்சுதையான்' என்பது 'திருநீற்றுப்பொடி பூசியவன்' என்று பொருள்படும்; தை என்பது தொனி.

'வன்னி வளர்க்கும் சோமாசியான்' என்பது 'நெருப்பு வளர்க்கும் சோமயாகம் செய்தவன்' என்று பொருள்படும்; மாசி என்பது

'நெஞ்சத்து அற்பங்குனியான்' என்பது 'நெஞ்சை அற்பமும் (சிறிதும்) கருதமாட்டான்' என்று பொருள்படும்; பங்குனி என்பது தொனி.

'தீவணத்து அம் குஞ்சித் திரையான் என்பது 'தீவண்ணம் உடைய அழகியசடையில் திரை (கங்கை)யை யுடையவன்' என்று பொருள்படும்; சித்திரை என்பது தொனி.

'வைகு ஆசியான்' என்பது 'தங்கி ஆசியருள்பவன்' என்று பொருள்படும்; வைகாசி என்பது தொனி.

'உயிர் ஆனியான்' என்பது 'உயிர்க்கு ஆனி (கேடு) வரச் செய்தவன்' என்று பொருள்படும்: ஆனி என்பது தொனி.

இங்ஙனம். காளமேகப் புலவர் பாடிய திருவானைக்கா உலாவில், ஆடி தொடங்கிப் பன்னிரண்டு மாதப்பெயர்கள் தொனியால் அமைந்திருக்கச் சித்திரை தொடங்கிப் பன்னிரண்டு மாதப் பெயர்களும் தொனியால் குறிக்கப்பெற்றிருத்தலைப்பின்வரும் தனிப் பாடலிற் காணலாம்:—

மாதஞ்சித் திரைக்கடலை வைதனனீ யன்பு
 வைகாசி னஞ்சிறியா னையானி பெருக்கும்
போதம்பன் போராடி ஞனையா வணியாய்ப்
 புரட்டாதின் கலம்வெறுத்தா னைப்பசியில் லென்றே

சாதனைசெய் தேசினந்தாள் கார்த்திகைக்குங்
கொடைவேந்
தாசகிமார் கழியார்கோ தையுமாசி லாமல்
காதலுடன் சேர்வணவல்ல திட்டமுன் பங் குனிப்பார்
கந்தனெனும் கலியாண சுந்தரமா முகிலே.

இது திருவாரூர்ச் சொக்கலிங்கக் கவிராயர் பாடிய பாடலாகும். (தனிப் பாடல் திரட்டில் காண்க).

இப்பாடலில் பன்னிரண்டு மாதப்பெயர்களும் தொனியால் குறிக்கப்பெற்றுள்ளன. ஆனால் அச்சொற்கள் பிரிந்திசைத்து வேறு பொருள் படுமாற்றைப் பின்வரும் உரையால் அறிக:—

மாது அஞ்சித் திரைக் கடலை வைதனள் தலைவி பயந்து (மன்மதனின் முரசாகிய) திரையுடைய கடலைப்பழித்தாள்; சின்னம் (சினம்) சிறியாளை—மிகவும் இளமையானவளை; ஆனி பெருக்கும். துன்பம் செய்கின்ற; போது அம்பன்போர் ஆடினன்—மலர்களை உடைய மன்மதன் போரிட்டான்; ஐயா ஐயனே; அணியாய்ப் புரட்டா—அழகாகப் புரண்டு; தின்கலம் வெறுத்தாள்—உண்ணும் உணவை வெறுத்தனள்; ஐப்பசி இல் என்றே-நல்ல பசி இல்லை என்று; சாதனை செய்தே சினந்தாள்; சாதித்துக் கோபித்தாள்; கார் திகைக்கும் கொடை வேந்தா—மேகம் திகிலடையுமாறு கொடையுடைய அரசனே; நீ அன்புவைகா—நீ அவளிடம் அன்பு வைப்பாயாக; அவளைக் காப்பாயாக; சகிமார் கழியார்-தோழியர் உன்னை நீக்க மாட்டார்கள்; கோதையும் – தலைவியும்; மாசு இலாமல்— குற்றம் இல்லாமல்; காதலுடன் சேர்வள் – விருப்பத்துடன் கூடுவாள்; நல்லதிட்டம் உனக்கு நல்ல அதிர்ஷ்டம்; உன் பங்கு உனிப்பார்—நீ செய்ய வேண்டியதை யோசித்துப்பார்.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய அழகர் கிள்ளை விடுதூதில் சில ஆறுகளின் பெயர்கள் தொனியால் குறிக்கப்பெற்றுள்ளன. “தேறுபனி காவேரி சிந்து கோதா

விரியும்' என்பது அவ்வரி (கண்ணி 33). தேறு–ஆராயின், கனி-பழங்களைத்தரும், கா–சோலையில், வேரி–தேனை, சிந்து–சிந்துகின்ற, கோதா–சக்கையாக, இரியும்–வீணாகும் என்பது பொருள். கனி – கன்னி. இதில் கன்னி, காவேரி, சிந்து, கோதாவரி என்று நான்குஆறுகளின் பெயர்கள் தொனியால் குறிக்கப்பெற்றிருத்தலைக் காணலாம்.

இந்நூல் 163 ஆவது கண்ணி: "அரசா யிருத்தியா லத்தி எடுத்து" என்பது அரசாக இருக்கும்படி செய்து ஆலத்தி எடுத்து "என்று பொருள்படும். இதில் அரசு, ஆல், அத்தி என்ற மரப்பெயர்கள் தொனிக்கின்றன. சொக்கநாதப் புலவர் என்பார் பாடிய தனிப் பாடல்களுள் ஒன்று பின்வருமாறு:—

வெங்காயம் சுக்கானுல் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை – மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே.

முதல்வரி "வெம்மையான உடம்பு சுக்குப்போல ஆனுல் வெம்மையான வினையினுல் வரக்கூடியதென்ன" என்றும், 3-ம் வரி 'சிறந்த வீட்டினைத் தந்தால் பெரிய உடம்பைத் தேடேன்' என்றும் பொருள்பட்டு, வெங்காயம், சுக்கு, வெந்தயம், சீரகம், பெருங்காயம் என்ற பலசரக்குத் தொனியால் அமைந்து கிடத்தலைக் காணலாம்.

கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் தொனிப் பொருள் அமைப்பதில் ஈடு இணையில்லாதவர், அப்புலவர் பெருந்தகை பாடிய நூல்களை Dr. சாமிநாதையர் அவர்கள் 1932லேயே அச்சிடுவித்துத் தமிழுலகுக்கு அளித்தருளியுள்ளார்கள். அந்நூல்களுக்குரிய முகவுரை ஆராய்ச்சியுரை முதலியவற்றைமட்டும் படித்தாலே நூலை நன்குபடித்த அறிவு வாசகர்களுக்கு அமைந்துவிடும். இவற்றுள் கோடீச்சுரக் கோவையில் மிகுதியான தொனிகள் காணப்படுகின்றன.

கோடீச்சுரக் கோவையில் காணப்படும் தொனிகளைப் போல வேறு எந்தத் தமிழ்நூலினும் காண்டல் அரிதாம். கோடீச் சுரக்கோவையில் கண்ட தொனிகள் சில இனிக் காணப் பெறும் :-

மும்மூர்த்திகளின் பெயர்கள் "மாலாய உன்னை உருத்திர ஞமென்பர் மற்றயனே" என்ற வரியில் (செ 115)தொனிக்கக் காணலாம். 'மயக்கம்பொருந்திய உன்னை அழித்தல்தொழிலை யுடையவன் என்று கூறுவர் ஐயனே' என்பது பொருள்(மால் மயக்கம்; உருத்திரன் - அழித்தல் தொழிலையுடையவன்; அயனே-ஐயனே).

தேவார மூவர் பெயர்கள் பின்வரும் பாடலில் (செ. 424) அமைந்துள்ளன:

வெற்றிகொள் மால்விடைக் கோடீச் சுரவள்ளல் வெற்பனைய
மற்றி தோளுடைச் சுந்தரர் ஆனநம் மன்னவர் நூல்
பற்றிடு வாக்கர(சு) ஆகிமெய்ஞ் ஞானசம் பந்தர் பதம்
பெற்றிட எண்ணிப் பிரிந்தாரின்(று) ஓதப் பிறைநுதலே.

இதில் சுந்தரர் என்பது அழகுடையவர் என்ற பொருளி லும், வாக்கரசு என்பது நாவலர் என்ற பொருளிலும், மெய்ஞ் ஞானசம்பந்தர் என்பது உண்மையறிவொடு பொருந்தியவர் என்ற பொருளிலும் வந்து தேவார மூவர்பெயர்கள் தொனி யில் அமைந்தமையும் காணலாம்.

இராசிகளின் பெயர்களும் இங்ஙனம் செ. 48லும், 123 லும் அமைந்துள்ளன:-

'தலைவியின் நெற்றி-தனு (வில்); குழை (காது)-மகரம் (மீன்); முலை- கும்பம் (குடம்); பார்வை (கண்)-மீன்போலும்' என்று கூறவந்தவர் கன்னி, தனு, மகரம், கும்பம், மீனம் என்ற இராசிகளின் பெயரைத் தொனியில் அமைத்துள்ளார்.

அப்பாடல் பின்வருமாறு:—

கனவல் இடபத்தர் கோடீச் சுரம்அன்ன கன்னிநுதல்
இனவண் மணிக்குழை மாமுலை பார்வை எனவுரைக்கும்
தனுவும் மகரமும் கும்பமும் மீனமும் சார்ந்தங்குநீ
முனமுற நோக்கிடின் அன்பஇவ் வாறு மொழியலையே.

இதில் கூறப்பட்ட ராசிகளின் அமைப்போடு பொருந்த "கனவல் இடபத்தர்" என்றவிடத்து இடபம் எனும் ஓரிராசிப் பெயர் தொனிக்கக் கூறியமையும் காணலாம்.

செ. 123ல் "கைவில், காலுறு கற்கட கச்சிங்க மேய்ந்தக் கன்னியுன்றன், பாலுறச் செய்வேன் இராசியமாக" என்ற பகுதியில் தனு, கடகம், சிங்கம், கன்னி எனும் நான்கு ராசிகளின் பெயர்கள் அமைந்துள்ளன. இராசியமாக-இரகசியமாக என்ற விடத்து இராசி என்னும் பெயரும் தொனிக்கின்றது.

செய்யுள் 137லும் 190லும் சில நட்சத்திரங்களின் பெயர்கள் தொனித்தலைக் காணலாம். "ஓணத்தவன் போற்றவிட்டத்தன் கேட்டையுருன்:' என்ற அடியில் ஓணம் அவிட்டம் கேட்டை என்ற நட்சத்திரங்கள் பெயர்கள் தொனிக்கின்றன (ஓணத்தவன்-திருமால்: போற்ற-போற்றுதலால்; இட்டத்தன்-விருப்பமுடைய சிவன், கேட்டையுருன் - ஆழியான்). "வெண்பொடி பூசத்தர் ஆதிரையார் மகம் மேலழித்தோர், பெண்புணர் அத்தத்தர்" என்ற 190-ம் செய்யுளில் பூசம், ஆதிரை, மகம், அத்தம் என்பவை தொனியில் வந்துள்ளன.

ஐந்திலக்கணத்தின் பெயரும் செ 117ல் தொனிக்கின்றமை, "எழுத்து இசை யாதுமுன் சொற்பொருள் கொள்ளாது யாப்பணியின் விழுத்தக ஓதி முடியா இப்பேதை" என்ற வரிகளில் காணலாம். 'சொல்முன் எழுத்து இசையாது-இவளுடைய சொல்லானது முதலில் எழுத்து வடிவம் பெற்றதன்று என்றது குதலையை; சொல்பொருள் கொள்ளாது-சொல் சரியான பொருள் கொள்ளாது; யாப்பு அணியின் ஓதி முடியா

இப்பேதை-கட்டுதலையுடைய அணிகலன்களோடு சேர்த்துக் கூந்தல் முடிக்கப்படாத இப்பெண்''- என்பது இவ்வரிகளின் பொருள். இதில் எழுத்துச் சொற்பொருள் யர்ப்பணி என்னும் ஐந்திலக்கணப் பெயரும் தொனித்தல் காணலாம்.

சில ஆறுகளின் பெயர்களும் தொனிக்கின்றன பின்வரும் பாடலில் (439):-

கங்கைகொள் வேணியர் கோடீச்சு ரேசர்தம் காவிரி
நாட்(டு)
அங்க யமுனை முலைத்தென் குமரி யனநடையாய்
இங்கினிச் சிந்துநன் கோதா வரியுறை யீர்ந்தொடையார்
தங்க வருகின் றனர்வேனில் கண்டு தளர்ந் திடலே.

அம் கயம் முனைமுலை-அழகிய யானை (க் கொம்பைப்) பொருகின்ற முலையுடைய; தென்குமரி-அழகிய பெண்ணே அனநடையாய்-அன்னம் போலும் நடையுடையவளே; சிந்து நன்கு ஓதா வரி உறை ஈர்ந்தொடையார்-சிந்து என்னும் பாட்டை நன்ருகப்பாடி வண்டுகள் உறைகின்ற குளிர்ந்த மாலையை யணிந்த தலைவர்'' -என்பது பொருள். இப்பாடலில் கங்கை, காவிரி என்ற ஆறுகளைக்கூறி. இரண்டு மூன்று வரிகளில் யமுனை, குமரி, சிந்து, கோதாவரி என்னும் ஆறுகளின் பெயர்களைத் தொனியினுல் குறிப்பித்தார்.

இங்ஙனமே சிவப்பிரகாசரும் பின்வரும் பாடலில் ஆறுகளின் பெயர்களைத் தொனிக்கச் செய்துள்ளார்:-

பெண்ணை சாய்த்துப் பெருகிக் காவேரியின்
நண்ணி ஓதியம் நன்றே வைகை சேர்ந்(து)
எண்ணி கரும்பை இயைந்து மணித்திரள்
மண்ணி ஏரும் வளங்கெழு பாலியே.

சில தலங்களின் பெயர்கள் சிவக்கொழுந்து தேசிகர் பாடிய தஞ்சைப் பெருவுடையார் உலாவில் தொனியால் அமைக்கப் பெற்றுள்ளன. (கண்ணி 152-54)

வல்லம்எனும் கொங்கையாள் மாகாளம் போற்கண்ணுள்
முல்லைவாய் உற்றதெனும் மூரலாள்-சொல்லியசீர்
ஏற்றிடுகுற் றாலந்தான் என்னும் வயிறுடையாள்
சாற்றிடுமா யூரம்எனும் சாயலாள்-போற்றலுறும்
வஞ்சி யிடையாள் வலஞ்சுழிநல் உந்தியாள்
கஞ்சனூர் அன்ன கதிநடையாள்.

குறிப்புரை பின்வருமாறு:-

வல் அம் எனும் - சூது ஆடு கருவியின் அழகையுடையள் என்று சொல்லப்படும்; மாகாளம்போல்-கொடியவிஷம் போன்ற; முல்லைவாய் உற்றது - முல்லை அரும்பு வாயில் பொருந்தியது; (முல்லைவாய்-திருமுல்லைவாயில் எனும் தலம்) குறு ஆலம்-குறிய ஆலிலை; மாயூரம்-மயிலின் சாயல்; வஞ்சி-வஞ்சிக்கொடி போன்ற இடையையுடையவள். (வஞ்சி-திருவஞ்சைக்களம் எனும் தலம்); வலம்சுழி-வலமாகச் சுழித்த; கஞ்சன்ஊர்-பிரமன் ஊர்ந்து வருகிற.

இப்பகுதியில் திருவல்லம், திரு (அம்பர்) மாகாளம், திருமுல்லைவாயில், திருக்குற்றாலம், மாயூரம் (திருமயிலாடுதுறை) திருவஞ்சைக்களம், திருவலஞ்சுழி, கஞ்சனூர் என்ற தலப் பெயர்கள் தொனிக்கின்றன.

கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் அவர்கள் பாடிய நூல்களுள் இன்றொன்று சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் என்பதாகும். இதில் மன்மதோபாலம்பனம் ஆக அமைந்த பாடல் வருமாறு:—

பிரபவனுகிப் பிரஜோர்பத்தி செய்கின்ற மன்மதா-இன்று
பேதையேன் தன்னைப் பரிதாவி யாக்கலேன் மன்மதா
பரவுங் கடலினைத் துந்துபியாக்கொண்ட மன்மதா--நீயும்
பைபாவமார் களுக்குவிரோதியா யினதென்ன மன்மதா

வானின்மேற்கு ஓடும்துன் மதியைக் குடையாக்கி
மன்மதா காற்றும்
வடக்கோடும் தேர்கொண்டாய் இதுவென்ன காலயுத்தி
மன்மதா
மீனகே தனத்திஞல் விஜயம் பெறலாமோ மன்மதா
யார்க்கும்
விகுருதியா காதிருந்தான் மிகவும் ஜயமாமே மன்மதா
தேஞர் மலரம்பால் ஆனந்த மடைகின்ருய் மன்மதா—சீறும்
திறவம்பொன் றுளதாயின் பிரமாதி யாவையே மன்மதா
மாஞேர் கரமுற்ற ஈசுவரன் முன்ஞளின் மன்மதா-உன்னை
வாட்டிய காலையில் சாட்டும் குரோதி யல்லை மன்மதா
தெரியும்இவ் வுலகத்தில் ஏவர்கீ லகத்திஞல் மன்மதா—
என்மேல்
சித்திரபா னுவைபோல மெத்தவும் காய்கின்ருய் மன்மதா
சரபோஜி மகராஜர் தமைநான் மருவச்செய் மன்மதா-நீ
சருவஜித் தாகிமேல் அக்ஷய ஞகுவாய் மன்மதா.

குறிப்புரை:- பிரபவன்—புகழையுடையவன். பிரஜோத் பத்தி-மக்களையுண்டாக்குதல். பரிதாபி-துன்புறுபவள். துந் துபி-முரசு. விரோதி-பகைவன். துன்மதி-கெட்ட சந்திரன் காலயுக்தி-காலத்திற்கு உரிய யுக்தி. விஜயம்-வெற்றி. விகி ருதி-வேறுபாடான இயல்பு. ஜயம்-வெற்றி. பிரமாதி-மிக்க வலியையுடையவன். குரோதி-கோபமுடையவன். கீலகம்— கலகம். சித்திரபானு-அக்கினி. சருவஜித்-எல்லாவற்றையும் வெல்பவன். அக்ஷயன்-அழிவற்றவன்.

இதில் பிரபவ முதலாய பத்தொன்பது ஆண்டுகளின் பெயர்கள் தொனியில் அமைத்திருத்தல் காணலாம்.

# 13. தோட்டிமையுடைய தொண்டர்

## திருத்தொண்டர் சிறப்பு

இறைவன் தொண்டர் உள்ளத்து அடக்கம்; ஆகவே, தொண்டர் தம் பெருமையைச் சொல்ல முடியாது என்று கூறினர் ஔவையார். "மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்" என்று அப்பரும் தொண்டர்களிடத்து இறைவன் வீற்றிருப்பதை அருளா நிற்பர். இத் திருத் தொண்டர் சிறப்பைச் சேக்கிழார் "திருக்கூட்டச்சிறப்பு" என்ற தலைப்பில் பெரிய புராணத்தில் சிறிது விரிவாகவே பாடியுள்ளார்.

"அடியவர் தம் மேனியில் திருநீறு பூசியிருப்பர்; தாம் பூசும் நீறுபோல் உள்ளமும் தூய்மை யுடையராயிருப்பர்; பூதம் ஐந்தும் நிலை தடுமாறினும் இறைவன் மலர்த்தாளை மறக்க மாட்டார்கள்; கெடுதி வரின் அதற்காக மனம் கலங்குதலோ, நன்மை வரின் அதற்காக மகிழ்தலோ இலர்; ஓடும், செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் இயல்புடையவர்; அடியார்களைக் கண்டால் அன்புமீக்கூர்ந்து வணங்குதலில் விருப்பம் உடையராயிருப்பர்; கண்டிகையை ஆரமாகக் கொள்வர்; கந்தையையும் மிகையாகவே கருதுவர்; யாவர் மாட்டும் அன்பு பூண்டு விளங்குவர்; அடியவர்களுக்கு ஊறு வந்தவிடத்து அஞ்சாமையுடையராய் வீரத்துடன் அவர் களைக் காக்கும் இயல்பினர் ஆவர்" என்பன சேக்கிழார் தொண்டரைப்பற்றி அங்குக் கூறியனவாகும்.

தொண்டர் தம் பெருமை தடுத்தாட்கொண்ட புராணத்தில்,

"பெருமையால் தம்மை யொப்பார்
 பேணலால் எம்மைப் பெற்றார்

ஒருமையால் உலகை வெல்வார்
　　ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
　　அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்''

என்று கூறப்பெற்றுள்ளது.

பத்தராய்ப் பணிவார் புராணத்தில், அடியார்கள் இடையறாச் சிவ சிந்தனை உடையராவர் என்பதை,

''நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்''

என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

இத் தொண்டர்களைத் திருநாவுக்கரசு சுவாமிகள் 'தோட்டிமையுடைய தொண்டர்' என்று பின்வரும் திருவாரூர்த் திரு நேரிசைப் பாடலில் கூறுவர்:—

''தொழுதகங் குழைய மேவித்
　　தோட்டிமை யுடைய தொண்டர்
அழுதகம் புகுந்து நின்றார்
　　அவரவர் போலும் ஆரூர்
எழிலக நடுவண் முத்தம்
　　அன்றியும் ஏர்கொள் வேரிப்
பொழிலகம் விளங்கு திங்கள்
　　புதுமுகிழ் சூடி னாரே.''

தோட்டிமை என்ற சொல்லைத் 'தொட்டிமை' என்று கொண்டவரும் உண்டு. தொட்டிமை என்ற சொல் சீவக சிந்தாமணியில் பின்வரும் இடங்களில் பயின்றுள்ளது,

தண்ணுமை முழவம் வீணை
குழலொடு குயிலத் தண்பூங்
கண்ணொடு புருவம் கைகால்
கலையல்குல் நுசுப்புக் காமர்
ண்ணுதல் கொண்ட ஆடல்
தொட்டிமை உருவம் நோக்கி
வெண்ணெய்தீ யுற்ற வண்ணம
ஆடவர் மெலிகின் றாரே." (செ. 1255)
"பட்டவா ணுதலி னுய்க்குப்
பாடுவல் காமன் தந்த
தொட்டிமை யுடைய வீணைச்
செவிச்சுவை யமிழ்த மென்றார்." (செ. 2047)
"வட்டிகைப் பாவை நோக்கி
மகிழ்ந்திருந் தினிரோ என்னுத்
தொட்டிமை உருவம் தோன்றச்
சுவரையே பொருந்தி நின்றாய்." (செ. 2085)

பெருங்கதையிலும் 'தொட்டிமை கலந்த' (1-50-8) என்ற விடத்து இச்சொல் பயின்றுள்ளது.

சீவக சிந்தாமணிக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் 'தொட்டிமை' என்ற சொல்லுக்கு 'ஒற்றுமை' என்று பொருள் எழுதியுள்ளார்.

சூடாமணி நிகண்டிலும் "ஒற்றுமை தொட்டிமை குறிப்போ டொற்றுமை" என்று காணப்படுகிறது.

## படைப்புச் சொல்

'தோட்டிமை' என்பதைத் 'தொட்டிமை' என்றுகொள்ள வேண்டியதில்லை என்று தோன்றுகிறது. தோட்டிமை என்ற சொல் திருநாவுக்கரசு சுவாமிகளின் அரிய படைப்பு.

மூவர் தேவாரத்தில் இங்ஙனம் புதிய படைப்புச் சொற்களைக் காணலாம். 'வேதியன் மாதிமையால் விரும்பும்

இடம் வேண்டுறையே'' என்ற விடத்து 'மாதிமை' என்ற சொல்லைக் 'காதல்—ஆசை' என்ற பொருளில் ஞானசம்பந்தர் பயின்றுள்ளார். ''ஊர்பலி இச்சை கொண்டு உண்பது மாதிமையோ உரையே'' என்பது அப்பர் தேவாரம். ''மறி யேறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர்'' என்பது சுந் தரர் செந்தமிழ். ''திருதிமை'யால் ஐவரையும் காவல் ஏறி'' என்ற திருத் தாண்டகத்தில் 'திருதிமை' என்ற சொல் பயில்கிறது. அது 'மனவுறுதி' என்று பொருள்படும். இங் ஙனமே தோட்டிமை என்ற சொல்லும் அப்பர்தம் அரும் படைப்பாகவே கொள்ளலாம்.

## சொற்பொருள்

'தோட்டி' என்பது யானையை அடக்குவதற்கு யானைப் பாகர் கையகத்திருக்கும் ஒரு சிறு ஆயுதம் என்பது யாவரும் அறிந்ததே. அதனை 'அங்குசம்' என்றும் கூறுவதுண்டு, தோட்டி அல்லது அங்குசம் யானையை அடக்குவதற்குப் பயன்படுவது. எனவே யானையை அடக்குவதே 'தோட்டி யின் தன்மை'யாகும். 'தோட்டியின் தன்மை' என்பதே 'தோட்டிமை' எனப்பட்டது.

## ஐம்புலன் - யானை

மெய் வாய்கண் மூக்குச்செவி என்பன ஐம்பொறி எனப் படும். 'பொறி வாயில் ஐந்து'—அதாவது ஐம்புலன் எனப் படுபவை 'சுவை ஒளி யூறு ஓசை நாற்றம்' என்பன. இறை வன் 'பொறிவாயில் ஐந்து அவித்தவன்' ஆவான். இறைவ னுடைய தொண்டர்களும் பொறிவாயில் ஐந்தவித்தவர் களே ஆவர். இவ்வைம்புலன்களையும் ஐந்து யானைகள் என்றும் கூறுவர். அவ்வைந்து யானைகளையும் அடக்க வேண்டும் எனின் ஒரு அங்குசம் வேண்டும். அவ் வங்கு சத்தை 'உரன்' என்று உருவகம் ஆகக் கூறுவர் திருவள் ளுவர்.

"உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து"

என்பது திருக்குறள். 'உரன்' என்பதற்குத் 'திண்மை, என்று பரிமேலழகரும், 'அறிவு' என்று மணக்குடவரும், 'ஒருவழிப்பட்ட சித்தம்' என்று காலிங்கரும் உரை கூறுவர். எனவே, திண்மையான மன ஒருமைப்பாடுடைய அறிவி னாலே ஐம்புலனை அடக்கலாம். இவ்வுரனைத் திருவள்ளுவர் 'தோட்டி' என உருவகித்தார். உரனைத் 'தோட்டி' என்றவர் ஐம்புலனையும் யானை என்னாமையால், இஃது ஏகதேசஉருவகம் என்று பரிமேலழகரும் கூறியுள்ளார். ஆகவே தோட்டியின் தன்மை யானையை அடக்குவது என்பது விளங்குவதாயிற்று. தோட்டியின் தன்மையே தோட்டிமையாகும்.

## தோட்டிமையுடைய தொண்டர்

தொண்டர்கள் பொறிவாயில் ஐந்தவித்தவர் ஆவர். "தொண்டர், அஞ்சுகளிறும் அடக்கி' என்ற இடத்துச் சம்பந் தரும், தொண்டர் ஐந்து புலன்களாகிய களிறுகளை அடக்கு வர் என்று கூறியுள்ளார். ஐந்துகளிறுகளையும் அடக்குபவ ராகிய தொண்டர்களையே திருநாவுக்கரசர் 'தோட்டிமை யுடைய தொண்டர்' என்றார். எனவே, "ஐம்புலன்களாகிய யானைகளை 'உரன்' என்னும் தோட்டியால் அடக்கும் தன்மை யுடைய தொண்டர்" என்பது இச் சொற்றொடரின் பொருள் என்க.

ஆகவே, தோட்டிமை வேறு, தொட்டிமை வேறு என்ப தும் இதனானே போதரும்.

# 14. திருநெல்வாயில் அரத்துறை

நடு நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்கள் 22; அவற்றுள் முதலாவதாக வைத்து எண்ணப் பெறுவது திருநெல்வாயிலரத்துறை என்னும் தலமாகும். இது வித்தகப்பாடல் முத்திறத்து அடியராகிய சம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப் பெற்ற சிறப்புடையது. இது பெண்ணு கடம் என்னும் ஊருக்கு அருகில் உள்ளது; "நிவா" எனப் பெறும் வடவெள்ளாற்றின் கரையில் உள்ளது. சம்பந்தர்,

> "கந்த மாமலருந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
> அந்தண் சோலைநெல் வாயில் அரத்துறை"

என்றும், சுந்தரர்,

> கல்வாயகிலும் கதிர்மா மணியுந்
> கலந்துந் திவரும் நிவவின் கரைமேல்
> நெல்வாயிலரத்துறை'

என்றும் பாடுவர்.

## சம்பந்தர் பெற்ற பேறு

திருப்பெண்ணுகடத்திலிருந்து திருவரத்துறைக்குப் புறப்பட்ட சம்பந்தர், தம் தந்தையார் தோளின்மேல் எழுந்தருளிச் செல்வதை விடுத்து, நடந்து செல்லலானார். மாறன் பாடி என்னும் தலத்தை அடைந்த பொழுது, தம்மைச் சூழவந்தவர்கள் களைப்படைந்தனர். ஆகவே சம்பந்தர் மாறன் பாடியில் இரவில் தங்கியருளினார். திருவரத்துறையில் கோயில் கொண்டருளிய எம்பெருமான், சம்பந்தர் வழி நடந்து வந்த வருத்தத்தைப் போக்கத் திருவுளங்கொண்டார்; சம்பந்தர் ஊர்ந்து செல்ல முத்துச்சிவிகையும், பிடித்துக் கொள்ள முத்துக்குடையும், முன்னே ஊதிக்கொண்டு போதற்கு முத்துச் சின்னங்களும் அளிக்க விரும்பியருளினார்; அரத்துறையிலுள்ள அந்தணர்களுக் கெல்லாம் தனித்தனியே கனவில் தோன்றிச், "சம்பந்தன் அரத்துறைக்கு

வருகின்றனன்; நீவிர் முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னம் ஆகியவற்றை நம்மிடத்திருந்து எடுத்துச் சென்று அவர்க்குக் கொடுங்கள்'' என்றருளி மறைந்தார். அந்தணர் யாவரும் விழித்தெழுந்து தாம் தாம் கண்ட கனவைக் கூறி மகிழ்ந்து கோயில் வாயிலில் குழுமினர்; திருப்பள்ளியெழுச்சிக் காலத்தில் கோயிற் கதவுகளைத் திறந்து, திருக்கோயிலி னுள்ளே முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் முத்துச் சின்னங்களும் இருத்தலைக் கண்டனர்; அவற்றை எடுத்துக் கொண்டு சம்பந்தர் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றனர்.

சிவபெருமான் சம்பந்தர் கனவிலேயும் தோன்றி, ''நாம் உனக்கு அளிக்கும் முத்துச்சிவிகை முதலாயின வற்றை ஏற்றுக்கொண்டு சிவிகையில் ஏறி வருக'' என்று கூறியருளினர் சம்பந்தரும் தம் கனவைத் தம் தந்தை யாரிடமும் மற்றத் தொண்டர்களிடமும் கூறி வைகறையில் நித்திய கன்மங்களை முடித்துக்கொண்டு திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டு இருந்தார்.

அவ்வமயம் ''அர அர'' என்னும் ஒலி முழங்க முத்துச் சிவிகை முத்துக்குடை முத்துச் சின்னங்கள் ஆகியவற் றுடன் அரத்துறையினின்று அன்பர்கள் வந்தனர்; சம்பந் தரை வணங்கித், ''திருவரத்துறை இறைவன் அளித்தருளிய இவற்றை ஏற்றருள்க'' என்று வேண்டினர். சம்பந்தரும்,

''எந்தைஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுளென்று ஏத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால் சென்றுகை கூடுவதன்றால்''

என்ற திருப்பதிகத்தைப் பாடி, ''அரத்துறை அடிகள் தம் திருவருள் இது'' என்று திருப்பதிகத்தை நிறைவாக்கி னார்; முத்துச் சிவிகையை வலம் வந்தார்; கீழே வீழ்ந்து வணங்கினார்; வெண்ணீற்றொளி தோன்ற அவ்வொளியினைத் துதித்தார்; இஃது ஆதியார் திருவருள் என்று உலகெலாம் உய்ய, அஞ்செழுத்து ஓதிச் சிவிகையின் மீது ஏறியருளினார்.

"சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்ருெளி போற்றிநின்று
ஆதி யார்அருள் ஆதலின் அஞ்செழுத்து
ஓதி ஏறினர் உய்ய உலகெலாம்"

தொண்டர்கள் "அரஅர" முழக்கம் செய்து ஆர்த்தனர். சம்பந்தர் சிவிகையில் அமர்ந்த காட்சி திருப்பாற் கடலில் வளர்மதி உதித்தாற் போன்று இருந்தது. இறைவன் அருளிய எக்காளம், "உலகமேழும் தவத்தினரும் உய்யும் வண்ணம் திருஞானசம்பந்தன் வந்தான்" என்று இயம்பியது; திருச் சின்னம், "உமாதேவியார் ஞானப் பாலூட்ட உண்ட பாலரு வாயன் வந்தான்" என்று ஊதியது; தாரை, "எல்லாக்கலை களையும் ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகன் வந்தான்" என்று ஒலித்தது. சம்பந்தர் திருக்கோயிலுக்குச் சிறிது தூரத்தி லேயே சிவிகையினின்று இறங்கிக் கோயினுட்புகுந்து "பொரு ளும் ஞானமும் போகமும் போற்றி என்பார்க்கு அருளும்', திருவரத்துறைப் பெருமானை வணங்கி ஏழிசைத் திருப்பதிகம் பாடி அத்திருப்பதியிலேயே சின்னளிருந்தருளினர்.

**உலகெலாம்**

சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தைப் பாடுவதற்குத் தில்லைப் பெருமான் எடுத்துக் கொடுத்தருளிய தொடர் "உலகெலாம்" என்பதாகும். சிவபெருமானின் திரு வருட்டிறத்தை மறவாதிருத்தற் பொருட்டும், அப்பெருமா னின் அருட்டிறத்தை நூலுக்கு மிகுவித்தற் பொருட்டும், அவ்விறை அருளிய "உலகெலாம்" என்னும் தொடரை முதற்கண் வைத்ததோடு திருநெல்வாயில் அரத்துறையில் சம்பந்தர் முத்துச் சிவிகையில் ஏறியருளிய செய்தியைக் கூறும்,

"சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்ருெளி போற்றிநின்று

ஆதி யாரருள் ஆதலின் அஞ்செழுத்து
ஓதி ஏறினர் உய்ய உலகெலாம்''

என்ற பாடலில் பெரிய புராணத்து நடுவிலும்,

''என்றும் இன்பம் பெருகும் இயல்பினேடு
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான் புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்''

என்ற பாடலில், பெரியபுராணத்து இறுதியிலும் வைத்துச் சேக்கிழார் போற்றினர். இச்செய்தியைத் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தாம் பாடிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ்–காப்புப்பருவம் முதல் பாடலில்,

''பார்கொண்ட தொண்டர்வர லாறுசொல் புராணம்அம்
பலவரருளால் அமைந்த
படிதெரித்திட ''உலகெலாம்'' எனும் சுருதிநாப்
பண்ணும்சுற் றும்பொருத்தி''

என்று குறித்துள்ளார்.

### எந்தை ஈசன்

இது சம்பந்தர் திருநெல்வாயில் அரத்துறையில் பாடிய பதிகத்தின் முதற்குறிப்பு. இறைவன் அளித்த முத்துப்பல்லக்கு முதலியவற்றை அரத்துறை அன்பர்கள் கொணர்ந்து கொடுத்து 'ஏற்றருள்க' என்ற பொழுது, சம்பந்தர் இப் பதிகத்தைப் பாடினர். இறைவன் திருவருளைப்பெறுவதற்குரிய வழி யாது என்று இப்பதிகத்தில் நன்கு சொல்லப்பெற்றுள்ளது. திருக்கடைக்காப்பிலும் ''அரத்துறை அடிகள் தம் அருளை முறைமையாற் சொன்ன பாடல்'' என்றிருத்தல் காணலாம். இப்பதிகத்தைச் ''சிந்தை செய்யும் திருப்பதிகம்'' என்பர் சேக்கிழார். ''ஏத்திச் சிந்தை செய்பவர்க்கல்லால் சென்று கைகூடுவது அன்றால்'', என்ற சம்பந்தர் வாக்கை ஒட்டி

அமைந்ததே சேக்கிழார் வாக்கு. ஏத்திச் சிந்தை செய்தல்—எம்பெருமான் சீரும் செல்வமும் ஏத்துதல் – பேணிப்பணி கலந்து செய்தல் – உன்னிநைதல் – உள்கி உருகுதல் – ஏத்திப் பரவுதல் – பேணும் சீல முடையராதல் – போற்றி என்றல் வணங்கி நைதல் ஆகிய இவையே இன்னருள் பெறற்குரிய வழி என்று இத் திருப்பதிகத்து நிரலே சொல்லப்பெற்றுள்ளது.

## அப்பர் திருக்குறுந்தொகை

திருநாவுக்கரசு சுவாமிகளும் திருநெல்வாயில் அரத்துறைக்குச் சென்று பாடிய பதிகம் ஒன்று உண்டு. அது "கடவுளை" என்று தொடங்கும் திருக்குறுந்தொகையாகும். இதில் "ஒப்பாரி (ஒப்பு) இல்லாத ஒருவன்" என்று முதற் பாடலில் கூறி, அங்ஙனம் 'ஓர் உவமன் இல்லி' ஆகிய கடவுளை நாம் தொழுவதற்காக 'இன்ன இன்னவற்றை ஒத்திருக்கிறார்' என்று கூறப் பெற்றுள்ளது. பெரும்பாலும் எல்லாப் பாடல்களிலும் "விண்ணோரும் அறிகிலார்" என்றுள்ளது. "இறைவன் எல்லாவுயிர்க்கும் இறை- கற்றார்க்கு ஓர் அமுது—கரும்பு ஒப்பான் – கரும்பினிற் கட்டி போல்வன் - அரும்பு ஒப்பான் – சுரும்பு ஒப்பான் – நெய்ஒப்பான் - நெய்யிற் சுடர் போல்வன் – நெதி ஒப்பான் – புனல் ஒப்பான் - அனல்ஒப்பான் – இத்தகைய இறைவனை நாம் தொழல்வேண்டும்" என்பதே இப்பதிகம் நுதலிய பொருளாகும். "ஒப்பாரி இலாதார்க்கு ஒப்பனையாவும் சொல்லிய ஒப்பற்ற கருத்துடைய பதிகம்" என்பர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

## சுந்தரரும் அரத்துறையும்

சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து மகிழ்ந்திருந்தார்; வசந்த காலம் வந்தது; திருவாரூர்ப் பெருமானை நினைத்தார்; ஒற்றியூரை விட்டகன்றார்; சங்கிலியார்க்கு அளித்த வாக்குறுதியைத் தவறியமையின் இருகண்களின் ஒளியும் மறையப் பெற்றார்; திரு வெண்பாக்கத்தில் ஊன்று

கோல் பெற்ருர்; காஞ்சிபுரத்தை அடைந்தார்; இடது கண் பார்வை வரப் பெற்ருர்; பின்னர்ந் திரு ஆமாத்தூர் வழியாகத் திரு நெல்வாயில் அரத்துறை அடைந்து "கல்வாயகிலும்" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினுர்.

## பதிகச் சிறப்பு

இப்பதிகம் இரண்டாவது பாடலில் "எற்றே ஒரு கண்ணிலன்" என்றமையால் ஒருகண் ஒளியின்றி இப்பதியைச் சுந்தரர் வணங்கினுர் என்றும், இப்பதிகம் பாடினுர் என்றும் அறியலாம். 'ஒரு கண்ணிலேன்; உன்னை யன்றி ஒரு பற்றிலேன்; அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே' என்பது இப்பதிகப் பொருளாகும். "இப்பதிகம் தமிழ் இலக்கிய நயமும், நீதி ஞான மொழிகளின் நயமும், தத்துவ நிச்சயம் ஆகிய உபதேச நயமும் செறிந்த அருமைப்பாடு உடையது; திருக்குறட் கருத்துக்களும் காணப்படுவது" என்பர் திரு C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

## யாக்கை நிலையாமை

யாக்கை நிலையாமையைக் கூருதார் இல்லை; கற்ருரும் கல்லாரும் பேச்சளவில் சொல்லிக்கொண்டுதான் இருக்கிருர்கள். குழந்தை பிறந்ததும் மன்பதை அடையும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. பிறந்ததுமே மகிழ்ச்சி ஆரவாரம். தாயும் சேயும் நலம்– இடையருது மகிழ்ச்சி. சேய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறது – பின்னும் மகிழ்ச்சி. பெயரிடல் முதலியசடங்குகள்–ஆரவாரம் மகிழ்ச்சி. குழந்தை குறுகுறு நடத்தலில் மகிழ்ச்சி–அற்றம் மறைத்தும் மறைக்காமலும் உடுத்தலில் மகிழ்ச்சி; ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொள்ளுதலில் மகிழ்ச்சி; நல்ல இல்லாளை அடைந்து இன்பம் துய்த்தலில் மகிழ்ச்சி; இப்பொழுதெல்லாம் யாக்கை நிலையாமை பற்றி நினைக்கக்கூட நேரமில்லை. நரை வருகிறது. இது இளமை நிலையாமையை அறிவிக்கும்

தூது. 'ஓடும் புனற்கரையாம் இளமை' — என்பர் சுந்தரர். செ. 4-ல் நரை வந்த நிலையில் யாக்கை நிலையாமை நினைத்தலும் பேசலும் ஒரோவழி நிகழும். பின்னர் மூப்புச் சாக்காடு. இத்தகைய யாக்கை நிலையாமையை நாலடியார்,

'புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை — இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான் தன்கேளலறச்
சென்றான் எனப்படுத லால்' — என்று கூறுகிறது.

ஸ்ரீகுமரகுருபரசுவாமிகளும் சிதம்பரம் செய்யுட்கோவை நீதிநெறி விளக்கம் ஆகிய நூல்களில்,

'நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுந்தாத தெம்பிரான் மன்று'

என்று இளமை யாக்கை நிலையாமைகளைப் பாடியுள்ளார் இவற்றை நாம் படித்துள்ளோம். படித்திருப்பினும் என்! 'இந்நிலையாமையைச் சொல்லிக்கொண்டேதான் இருக்கிறோம் உணர்வதில்லை' என்று சுந்தரர், ''நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார் நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில் சொல்லாய்க் கழிகின்றது'' என்ற பாடற் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். இரண்டாவது பாடலிலும் ''வறிதே நிலையாத இம் மண்ணுலகு'' என்று இந்நிலையாமைகள் குறிக்கப்பட்டுள்ளன

## திருக்குறட் கருத்து

இறந்தவர் பிறத்தலும் பிறந்தவர் இறத்தலும் புதுவதன்று இவ்வுலகத்து இயற்கை. ''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு'' என்பர் திருவள்ளுவர். இதனைச் சுந்தரர் 4ஆவது பாடலில் ''உறங்கி விழித்தாலொக்கும் இப்பிறவி'' என்பர்.

"பொறிவாயி லிவ் வைந்தினையும் அவியப் பொருது" என்ற இரண்டாவது பாடற் பகுதியில், "பொறிவாயி லைந் தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி" என்ற குறளின் சொல்லும் பொருளும் அமைந்திருக்கும் மாட்சியைக் காணலாம். 'அவியப் பொருது' என்றதன் பயன், 'அவிந்து அப்பொய் தீர் ஒழுக்க நெறியின் கண் நிற்றலே' ஆகும்.

மூன்றாவது பாடலில் "அற்றார் பிறவிக்கடல் நீந்தி ஏறி" என்ற வரி, "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்ற குறளை நினைப்பிக்கிறது.

7-ஆவது திருப்பாடலில் இறைவனை "அகர முதலின் எழுத்தாகி நின்றாய்" என்று சுந்தரர் விளிப்பர். எழுத்துக்கள் எல்லாவற்றுள்ளும் விரவியும், எழுத்துக்களுக்கு முதலிலும் அகரம் நிற்கும். அங்ஙனமே இறைவனும் உயிர்கள் தோறும் விரவி நின்று, தான் முதலும் ஆகவும் நிற்பன்—என்பது இவ்வரியின் பொருளாகும். திருவள்ளுவரும், "அகரமுதல வெழுத்தெல்லாம், ஆதிபகவன் முதற்றே யுலகு" என்றார். பின்னர் வந்தருளிய சந்தானாசாரியர்களுள் நான்காமவராகிய உமாபதி சிவாசாரியர், திருவருட்பயன் என்னும் சாத்திர நூலில், "அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரிலிறை நிற்கும் நிறைந்து" என்றருளினார். திருவள்ளுவர் குறளையும் திருவருட்பயன் குறளையும் முதுமொழிமேல்வைப்பு என்னும் நூலின் ஆசிரியர் வெள்ளியம்பலவாண முனிவர் எடுத்தாண்டு இறைவன் தானே தனித்தும் ஏனையுயிர்களோடு கலந்தும் இருக்கும் நிலையை விளக்கியிருக்கிறார். அப்பாடல்கள் வருமாறு:-

"எங்கும் உளனிறைவன் என்றிரண்டாய் ஏத்துதமிழ்ச்
சிங்கம் நடந்தவழிச் சித்தாந்தம் — என்றது
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

இப்பாடலில் "இரண்டாய்" என்றது 'தனித்தும் உயிர்கள் தோறும் விரவியும் நின்ற நிலையை. "தமிழ்ச்சிங்கம்" என்றது சிவஞான போதத்தை அருளிச் செய்த மெய்கண்ட தேவரை. இது முதுமொழிமேல் வைப்பின் முதற்பாடலாகும். இந்நூலின் 187–ஆம் பாடல், வீட்டின் பாலில் முதற்பாடல் ஆகும். அது பின் வருமாறு:—

"வள்ளுவரும் தாமும் மதித்தபொருள் ஒன்றென்றே
தெள்ளு தமிழ்விரகாய்ச் செப்பியது — சொல்லின்
அகர வுயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து".

இப்பாடலில் 'தாமும்' என்றது திருவருட்பயன் என்னும் நூலை அருளிய உமாபதி சிவாசாரியாரை.

## பிற பாடல்களை நினைவூட்டுதல்

இப்பதிகம் ஏழாவது திருப்பாடலில் "மணக்கோல மதே பிணக்கோலமதாம் பிறவியிதுதான்" என்றவரி, "மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்" என்ற பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் — பழியஞ்சின படலம் 40–ம் செய்யுளை நினைவூட்டும்

"வாணுர் நுதலார் வலைப்பட்டடியேன் பலவின் கனி ஈயது போல்வதன்முன்" என்ற ஒன்பதாவது பாடலடி, "உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து ஈயின் ஒப்பாய் விழைதரு வேனை விடுதி கண்டாய்" என்ற திருவாசகத்தை நினைவூட்டும். "மற்றேல் ஒரு பற்றிலன்" (மூன்ருவது பா) என்றதோடு எட்டாவது பாடல் "நின்னுமம் பயிலப் பெற்றேன்" என்றதையும் ஒருங்கு இணைப்பின், "மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்" என்ற சுந்தரர் தேவாரமே நினைவுக்கு வரும்.

## முன்னைத்தவம் வேண்டும்

'உண்டென்றிரு அவன் ஒன்றென்றிரு' என்பர் சிலர்: அவன் திருநாமம்—சிறப்பாகச் சிவநாமத்தைக் கூறுவர் சிலர்; அங்ஙனம் சிறப்புப் பெயரால் கூறுமல் இறை கடவுள் என்ற பொதுப்பெயர் மட்டுமே கூறுவர் சிலர்; சிறப்புப் பெயரை ஏன்று கொளினும் மானதமாகக் கூறலேசாலும் என்பர்சிலர்; உரத்துக் கூறல் வேண்டா என்பதோடு உரத்துக் கூறவும் கூசுவர் சிலர்; பழிப்போர் சிலர். தீவினையாளரே இங்ஙனம் இருப்பர். சிவ சிவ என்கிலர் தீவினையாளர் என்பர் திருமூலர்; முன்னர்ச் செய்த நல்வினைப் பயன் சிறிதே தோன்றினும், இறைவன் திருநாமத்தை (எந்தையார் திருநாமம் நமச்சிவாய, திருநாமம் அஞ்செழுத்துக் கூறத்தோன்றும். எனவே சிவ நாமத்தைப் பயிலுவதற்கு முன்னைத்தவம் மிகுதியாக வேண்டும் என்பர் சுந்தரர், "பண்டேநான் செய்த பாக்கியத்தால் பரஞ்சோதி நின்னமம் பயிலப்பெற்றேன்" என்றமை காண்க.

## திருக்களிற்றுப்படியார்

இது சைவ சித்தாந்த சாத்திரம் பதினுன்கனுள் ஒன்று; திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர் என்பவரால் அருளப் பெற்றது. இந்நூல் 70-ஆம் பாடலில் திருஞானசம்பந்தர் திருவரத்துறையில் சிவிகை பெற்ற வரலாறு குறிக்கப் பெற்றுள்ளது. அப்பாடல் வருமாறு:

ஓடம் சிவிகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலை நெய்தல் — ஏடெதிர் வெப்பு
என்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

## திருப்புகழ்

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடல் ஒன்று திருநெல்வாயில் திருவரத்துறைக்கு உண்டு. "கறுவி" என்று

தொடங்கும் அப்பாடலில் திருஞானசம்பந்தர் முத்துச்சிவிகை முத்துக்குடை பெற்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. அப் பாடற் பகுதி வருமாறு:—

பிறவியைத் தணித் தருளுநிட்களப்
 பிரமசிற் சுகக் கடல்மூழ்கும்
பெருமுனித்திரட் பரவு செய்ப்பதிப்
 ப்ரபல கொச்சையிற் சதுர்வேதச்
சிறுவநிற்கருட் கவிகை நித்திலச்
 சிவிகையைக் கொடுத் தருளீசன்
செகதலத்தினிற் புகழ்படைத்தமெய்த்
 திருவரத்துறைப் பெருமானே.

# 15. வாரணவாசி

## வாரணவாசி – வாரணுசி

வாரணவாசி என்று கூறியதும், வாரணுசி என்ற சொல் நினைவுக்குவரும். வாரணவாசி வேறு; வாரணுசி வேறு. வாரணுசி என்பது காசியைக் குறிக்கும். வாரண அசி என்ற இரு சொற்களும் சேர்ந்து தீர்க்க சந்தி பெற்று வாரணுசி என்ருகும்; வாரண அசி என்ற இரு துறைகட்கு இடைப்பட்ட ஊர் என்பது பொருள். ஆனுல் வாரணுசியிலும் வேறுபட்ட தாகிய வாரணவாசி என்பது பற்றி, இலக்கியங்களிலும் கல் வெட்டிலும் பயின்றுள்ளவற்றை அறிவிப்பதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

## குறிஞ்சிக்கலியில்

கலித்தொகை என்ற சங்க மருவிய எட்டுத்தொகை நூலில் ஒருபகுதி குறிஞ்சிக்கலி. இது 29 பாடல்களையுடையது. இதில் 24 ஆவது பாடலில், பின்கண்ட வரிகளில் வாரண வாசி என்பது பயின்றுள்ளது:

> "தெருவின்கண்,
> காண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ,
> வாரண வாசிப் பதம்பெயர்த்தல்!ஏதில
> நீநின்மேற் கொள்வது; எவன்?"

"நம்மிடத்தில் யாதொரு காரணமும் இல்லாதிருக்கத் தெருவின்கண் யாரோ சிலர் கலங்குவதைக் கண்டு, நீ உனக்குத் தொடர்பில்லாதனவற்றை நீ உன்மேல் ஏற்றுக் கொள்வது, எதுபோல் இருக்கிறது என்ருல், வாரணவாசி யிலுள்ளாரது ஒழுக்கம்போல் காணப்படுகிறது" என்பது இவ்வரிகளின் பொருளாகும். "வாரணவாசிப்பதம்" என்ப

தற்கு நச்சினார்க்கினியர், "பிறர்வருத்தம் தம் வருத்தமாகக் கொண்டு ஒழுகுவதனை வாரணவாசியிலுள்ளார் பதம்" என்று குறிப்பு வரைந்திருக்கிறார். இதனால் வாரணவாசி என்பது ஓரூர் என அறியக் கிடக்கிறது.

## குலோத்துங்க சோழனுலா

இவ்வுலா இரண்டாம் குலோத்துங்கன் பேரில் ஒட்ட கூத்தரால் பாடப்பெற்றது. இரண்டாம் குலோத்துங்கன், "விக்கிரம சோழனுடைய மகன்-மேகம் போன்ற நிறத்தை யுடையவன் - துவராபதியில் சந்திரகுலத்தில் தோன்றி மனு குலத்தை வாழ்விக்க வந்தவனைப்பெற்ற வாரணம் என்பானது மகள் வயிற்றுப் பேரன் - கனகளபன்" என்று பின்வரும் குலோத்துங்க சோழனுலாக் கண்ணிகளினின்றறியலாம்:-

"பெரும்பரணி கொண்ட பெருமான்—தரும் புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன்; குவலயங்கள்
முற்றப் புரக்கும் முகில்வண்ணன்- பொற்றுவரை
இந்த மரபில் இருக்கும் திருக்குலத்தில்
வந்து மனுகுலத்தை வாழ்வித்த- பைந்தளிர்க்கை
மாதர்ப் பிடிபெற்ற வாரணம்; அவ்வாரணத்தின்
காதற் பெயரன்; கனகளபன்."

இதில் "கலிங்கப் பெரும்பரணி கொண்ட பெருமான்" என்பது விக்கிரம சோழனைக் குறிக்கும். இவ்வரிகளுக்குரிய பழையவுரையில், "மாதர்ப் பிடி-பெண் சக்கரவர்த்தி. வாரணம் -பெண்சக்கரவர்த்தியின் பிதா; அவர் யோகீசுவரரான காலையிற் பேர், வாரணவாசித் தேவர்" என்பது காணப்படு கிறது. இவ்வுரைக்கு எழுதப்பெற்ற குறிப்புரையில், "வாரண வாசி - இப்பெயருள்ளவூரொன்று அரியலூருக்குத் தென்பா லுள்ளது" என்று உள்ளது. இதனால் வாரணவாசி என்பது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூர்க்கு அருகில் இருக்கும் ஊர் என்றறியலாம்.

குறிப்பு: 'மாதர்ப்பிடி பெற்ற வாரணம்; அவ்வாரணத்தின் காதற் பெயரன் கனகளபன்' என்பதற்கு ''அழகிய பிடிபோன்ற விதுகுலநாயகி பெற்ற யாஊ போன்றவன்; அவ்யாஊக்குரிய சிறப்புப் பெயராகிய கனகளபம் என்னும் பெயரிஊயுடையவன் (அல்லது) அவ்யாஊயின் விருப்பமான கனகளபன் என்ற பெயருடையவன்'' என்றும் பொருள் கூறுவர். குலோத்துங்கனின் தாய் ''விதுகுல நாய்கி'' ஆவள் என்று குலோத்துங்க சோழனுலா 112-ஆம்கண்ணி (224ஆம் வரி)யில் கூறப்பெற்றுள்ளது. (குலோத்துங்க சோழனுலா பக்கம் 69 – கழக வெளியீடு). இப் பிறருரை ஈண்டைய ஆய்வுக்கு வேண்டியதன்று.

## வாரணவாசி நாடு

கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறங்களும், புறத்தாய நாடு என அழைக்கப்பெற்றது. அது முறத்தாயநாடு எனவும் கூறப்பெற்றது. இந்நாடு வாரணவாசி நாடு என்று பெயர் பெற்றிருந்தது என்பதைப் பின்வரும் சாசனப்பகுதி கூறும்; ''ஸ்வஸ்திஸ்ரீ கொல்லம் 376-ஆவது மேட நாயிற்று 21 சென்ற சனியாண்ட மகத்துநாள் ஸ்ரீபாண்டிய நாட்டுப் புறத்தாய நாடான தென்வாரணவாசி நன்ஞட்டுப் புறத்தாய நாடான தென்வாரணவாசி நன்ஞட்டுக் குமரி கன்னியா பகவதியார் கோயிலில்...'' இது கி.பி. 1231-க்குரிய கன்னியா குமரிக் கல்வெட்டு. (2) புறத்தாய நாட்டுக்குத் தென் வாரண வாசி நாடு என்ற பெயருண்மையை இக்கல்வெட்டுக் கூறியிருக்க, அகத்தீசுவரம் பாறைக்கல்வெட்டு (3) தென் வாரண வாசி நாட்டைப் புறத்தாய நாட்டின் ஒரு பகுதியாகக் கூறுகிறது. அச் சாசனப்பகுதி பின் வருமாறு:

''ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செய்கை. புறத்தாய நாட்டுத் தென்வாசி வாரண நன்ஞட்டு அகத்தீசுவரமான உதயமார்த் தாண்டச் சதுர்வேதி மங்கலத்து...'' ('தென் வாரணவாசி' என்பது இக் கல்லெழுத்தில் 'தென்வாசி வாரணம்' என்று

மாற்றிக் கூறப்பட்டுள்ளது. எனவே இரண்டாம் குலோத்துங்க சோழனின் பாட்டனார் பெயர் வாரணம் என்பதாகும். அவர் யோகிருந்த பின்னர் வாரண வாசித் தேவர் என அழைக்கப்பெற்றார். அவர் பெயரால் வாரணவாசி என்ற ஊர் அமைக்கப்பெற்றது. இரண்டாம் குலோத்துங்கன் குமரிப் பகுதிக்குத் தன் பாட்டன்பெயரை இட்டனன் என்பனவற்றை அறியலாம். (சங்கப்பாடலில் கூறப்பெற்ற வாரணவாசி இதனின் வேறுதல் வேண்டும்).

### வாரணவாசி யாறு

திருவதிகைக்கு அருகில் செல்லும் யாற்றை வாரணவாசி யாறு என்ற பெயரால் மூன்றும் இராசராச சோழனுடைய திருவயிந்திரபுரக் கல்வெட்டு (4) உணர்த்துகின்றது. மூன்றும் இராசராசசோழன் அரசனாதும், கி. பி. 1219இல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பான் சோழநாட்டின்மேல் படையெடுத்து வந்து, சோழநாட்டில் பல அழிவு வேலைகளைச் செய்து, சோழநாட்டைத் தனதாக்கிப் பின் பொன்னமராவதியில் தங்கியிருந்து, இராசராசனையழைத்து அவனுக்குச் சோணாட்டை வழங்கினான். மீண்டும் கி. பி. 1231இல் இம்மாறவர்மன் சுந்தரபாண்டியன் இரண்டாவது தடவை சோணாட்டின் மேல் படையெடுத்து வந்தான். மூன்றும் இராசராசன் தோற்று வடக்கு நோக்கி யோடினான். அப்பொழுது கோப்பெருஞ்சிங்கன் என்பான், சோழனைத் தெள்ளாறு என்ற ஊரில் போரில் வென்று, தன் தலைநகராகிய சேந்தமங்கலத்தில் சிறையிட்டான். இதனைக் கேள்வியுற்ற போசள மன்னன் வீரநரசிம்மன், கோப்பெருஞ்சிங்கனது நாட்டை அழிவுக்குட்படுத்தி, அவனை அஞ்சுவித்து, மூன்றும் இராசராச சோழனை விடுவித்தான். இங்ஙனம் இராசராசனைச் சிறையினின்று மீட்ட வரலாறு திருவயிந்திரபுரக் கல்வெட்டால் அறியவருகின்றது. அதில் போசள வீரநரசிம்மனின் தண்டநாயகன், "திருவதிகை திருவக்கரை உள்ளிட்ட ஊர்களும் அழித்து, வாரணவாசி ஆற்றுக்குத் தெற்கு, சேந்தமங்கலத்துக்குக்

கிழக்கு, கடலிலே அழிவூர்களும் குடிகால்களும் சுட்டும் அழித்தும்'' கொள்ளை கொண்டான் என்ற கல்வெட்டுப் பகுதியில் வாரணவாசியாறு என்று ஒரு ஆறு குறிக்கப்பெற்றுள்ளது. இதனைக் கெடில ஆறு என்று ஆராய்ச்சியாளர் கூறிப்பிடுவர். (5) திருக்கெடிலத்துக்கு வாரணவாசியாறு என்று பெயர் வரக்காரணம் சரியாகத் தெரிந்திலது. வாரணாசி என்பதை வாரணவாசி என்று தவறுகக் கொண்டார்களோ என்று தோன்றுகின்றது. திருநாவுக்கரசர் திருக்கெடிலத்தைத் ''தென்திசைக் கெங்கையது தெனப்படும் கெடிலம்'' என்று கூறுவர். சேக்கிழாரும், 'தென்திசையில் கங்கை யெனும் திருக்கெடிலம்' என்பர். ஆகவே கெடிலயாறு வாரணாசியாறு என்று தொன்று குறிக்கப்பட்டுப் பின் தவறுக வாரணவாசி என்று குறிக்கப்பட்டதாதல் வேண்டும்.

**வயலைக் காவூரில்**

வயலைக்காவூர் என்பது காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள ஓரூர். வாரணவாசி யுடையான் களப்பாளன் என்பான் அவ்வூர்க் கோயிலைக் கற்றளியாக அமைத்து மண்டபம் கட்டிக் குடமுழுக்கு நடத்தி, விளக்கெரிக்க ஒரு மாடை (பொன்) அளித்தனன் என்று மூன்றும் இராசராசசோழனது 27ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று(6) உணர்த்துகின்றது.

சகல புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்கதேவருடைய 16 ஆவது ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டும், (7) வயலைக் காவூரிலிருந்த கோயிலுக்கு வாரணவாசீச்சுவரமுடையார் கோயில் என்பது பெயர் என்றும். இசையூர் பலகண்ணன் தழுவக்குழைந்தான் திருவீழிமிழலையுடையான் என்பான் ஒருவன் ஒருசந்தி விளக்கு எரிக்க ஸ்ரீவாரணவாசீச்சுரமுடையார் கோயில் காணியுடைய சிவப்பிராமணனிடத்தில் ஒரு மாடை (பொன்) அளித்தனன் என்றும் கூறுகிறது.

வயலைக்காவூர்க் கோயிலில் நந்திவர்ம பல்லவனுடைய இரண்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுளது. அதில்

இறைவன், ‘‘பட்டாரர்’’ எனப் பெற்றுர். இந்நாளில் அக் கோயில் வாணுதீசுவரர் கோயில் எனப் பெறுகிறது.

## சிதம்பரத்தில்

கோப்பெருஞ்சிங்கனது 10 ஆவது ஆட்சியாண்டுக் குரிய சிதம்பரக் கல்வெட்டு (8) வாரணவாசி மகாதேவர் கோயில் என்று ஒரு கோயிலைக் குறிப்பிட்டுப் பிடாரியார் கோயில் கட்டுவதற்குச் சோழக் கோனுர்க்கு நிலம் விற்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.

கோப்பெருஞ்சிங்கனது 10 ஆவது ஆட்சியாண்டுக்குரிய இன்னொரு சிதம்பரக் கல்வெட்டு(9) சோழர்கோன் என்பானின் ஓலை (உத்தரவு) ஆகும். அதில் பிடாரி திருச்சிற்றம்பலமா காளி கோயில் இருக்கும் பகுதியாகிய விக்கிரமசோழநல்லூரில் உள்ள 140. 7/8 குழி நிலத்துக்குப் பதிலாக வாரணவாசி மகாதேவர் கோயில் தானத்தார் பக்கல் 141 குழி நிலத்தைப் பெற்றுக்கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது. இப்பிடாரியார் கோயில், நாயகர் (நடராசப்பெருமான்) திருக்கடலுக்கு எழுந் தருளும் திருவீதியாகிய விக்கிரம சோழன் தெற்குத் திரு வீதிக்குத் தெற்கில் அமைந்திருந்தது. பதிலாகப்பெற்ற நிலம் விக்கிரமசோழன் தெற்குத் திருவீதிக்குத் தெற்கிலும், வாரண வாசிமகாதேவர் திருக்குளத்துக்கும் திருநந்தனவனத்துக்கும் திருமடவிளாகத்துக்கும் கிழக்கிலும் இருந்தது.

## தொகுப்புரை

இதுகாறும் கூறியவாற்ருல் ‘வாரணவாசி, யென்பது சங்க காலத்திருந்த ஓரூர் என்றும், ‘வாரணம்’ என்பது இரண்டாம் குலோத்துங்கனது பாட்டன் பெயர் என்றும், அவர் யோகீசுவரரான காலையில் ‘வாரணவாசித் தேவர், எனப் பெற்ருர் என்றும், அவர் பெயராலும் வாரணவாசி என்ருேரூர் அமைக்கப் பெற்றதென்றும், கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறங்களும் இரண்டாம் குலோத்துங்கன்

காலத்தில் 'வாரணவாசிநாடு' எனப் பெற்றது என்றும், திருவதிகைக் கருகில் ஓடும் கெடிலயாற்றுக்கு 'வாரணவாசி யாறு' என்ற பெயரும் இருந்தது என்றும், வயலைக்காவூர் என்ற ஊர்க் கோயிலுக்கு 'வாரணவாசீசுவரமுடையார் கோயில்' என்பது பெயர் என்றும், அவ்வூர்க் கோயிலைக் கற்றளியாக்கியவர் 'வாரணவாசி யுடையான் களப்பாளன்' என்ற பெயரினன் என்றும், சிதம்பரத்திலும் தில்லைக் காளி கோயிலுக்கருகில் 'வாரணவாசி மகாதேவர் கோயில்' என்ற பெயரில் ஒரு கோயில் இருந்ததென்றும் அறியப்பெறும்.

---

(1) சேரநாடும் செந்தமிழும், பக். 136–137.
(2) T. A. S. vol, IV, p. 65
(3) Kerala Society Papers Vol I, p. 264
(4) 142 of 1902 : E. I. VII, p. 167-8,
(5) K. A. N. Cholas, II p. 182.
(6) 254 of 1922.
(7) 255 of 1922; 197 of S. I. I. vol. XII.
(8) 401 of 1903
(9) 312 of 1913; 159 of S. II, Vol. XII.

# 16. கண்காள் காண்மின்களோ!

கண் எடுத்த பயன்-கண்களைக் கொடுத்த இறைவனை யும், இறைவன் தங்கி அருள் புரிவதற்குரிய 'குறி' ஆகிய சிவலிங்கத் திருமேனியையும், அத்திருமேனி எழுந்தருளப் பெற்றுள்ள திருக்கோயிலையும் அத்திருக்கோயிலில் வழிபடும் அடியார்களையும், அக்கோயில்களைக் கட்டிய அரசர்களது உருவங்களைக் காணுதலாகும்.

தஞ்சையில் சிவபாதசேகரன் இராசராசசோழன் சதயத் திருவிழா ஆண்டு தோறும் நடைபெறுகிறது. இவ்வரசன் எடுப்பித்த கோயிலே தஞ்சை பிரகதீசுவரர் ஆலயம் எனப்பெறும் ராஜராஜேஸ்வரம் ஆகும். அக்கோயில் விமானம் வானளாவிக்கண்களை ஈர்க்கும் தகைமையதாக விளங்குகிறது. அவ்விமானத்தின் நிழலில் எழுந்தருளி யுள்ள பிரகதீசுவரர் மிகப்பெரிய திருமேனி. இச்சிவலிங்கத் திருமேனியை எழுந்தருள்வித்துப் பொன்னும், மணியும், மாலையும் பூட்டி அலங்கரித்து வழிபட்டவன் இராசராச சோழன்.

அவன் இக்கோயில் எடுப்பித்தபொழுது இறைபணி யாளனாக (ஸ்ரீகாரியம் ஆராய்பவனாக) இருந்தவன் பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவனாவான்.

இவ்வலுவலன் தஞ்சைப் பெரிய கோயிலில் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராசராசசோழனுடைய உருவத்தை எழுந்தருளுவித்தான். அது ஒரு முழமே நான்கு விரல் உயரமுடையது. அவனுடைய பட்டத்தரசி யாகிய 'ஒலோகமாதேவியார்' உருவத்தையும் எழுந்தருளச் செய்தான் என்று கல்வெட்டில் உள்ளது. இந்நாளிலும் இராசராச சோழனின் உருவம் அக்கோயில் உள்ளது.

கோயிலுக்கு வெளியே வீரச்சுவையை வெளிப்படுத்திக் கொண்டு இராசராசனின் உருவம் இந்நாளில் அமைக்கப் பெற்றிருப்பதும் யாவரும் அறிந்ததே.

இராசராசன் தன் மனைவி ஒலோகமாதேவியாருடன் இருக்கும் உருவம் திருவிசலூர்த் திருக்கோயில் மகாமண்டபப் புறச்சுவரில் செதுக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம் அவ்வுருவங்கள் திருக்கோயில் திருப்பணி செய்த காலத்தில் செப்பம் செய்யப்பட்டிருந்த போதிலும், பழைய உருவத்தின் நிழற்படம் கோயில் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

இராசராசன் தேவாரத் திருமுறைகளைத் தொகுத்தவன். இங்ஙனம் தொகுப்பதற்கு இவனுக்கு உதவியவர் திருநாறையூரில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் ஆவார். திருநாறையூர் பொல்லாப்பிள்ளையார் சன்னதியில் இராசராசனின் உருவம் வைக்கப்பட்டுள்ளது.

இராசராசனுடையபாட்டன் அரிஞ்சயன். அரிஞ்சயனின் தமையனார் கண்டராதித்தர். இவர் தில்லைத் திருவிசைப்பாப் பாடியவர். இக்கண்டராதித்த சோழர் திருநல்லமுடையாரை வழிபடுவதுபோல் (கோனேரிராசபுரத்துக்கோயிலில் தட்சிணா மூர்த்தி சன்னதிக்குப் பக்கத்தில்) இருத்தலைக் காணலாம்.

கண்டராதித்தருடைய மனைவி செம்பியன் மாதேவியார். அவர் சிறந்த சிவபக்தர்; பல கோயில்களுக்குச் சிறந்த திருப்பணிகள் செய்தவர். அவர் பெயரால் அமைந்ததே செம்பியன் மாதேவி என்ற ஊராகும். அவ்வூர்க் கோயிலில், செம்பியன் மாதேவியாரின் உருவச்சிலை உண்டு.

இரண்டாம் இராசராசசோழன் எடுப்பித்தது தாராசுரத்துச் சிவன்கோயில் ஆகும். அதில் இராசராசன் II, அவன் மனைவி ஆகிய இருவரது உருவச்சிலைகள் வைக்கப் பட்டிருந்தன. அச்சிலைகள் இற்றைஞான்று தஞ்சைக் கலைக் கூடத்தில் வைக்கப்பெற்றுள்ளன.

மூன்றும் குலோத்துங்க சோழன் திரிபுவன வீரதேவன் எனப்பெறுவான். இவன் எடுப்பித்ததே திருபுவனத்திலுள்ள கம்பகரேசுவரர் கோயிலாகும். இக்கோயிலில் உள்ள விமானம் மிகப்பெரியது. கோயிலின் மேல்தளத்தில் விமானத்தின் அறையில் இக்குலோத்துங்க சோழனுடைய உருவமும் இவன் மனைவியின் உருவமும் அமைக்கப்பெற்று உள்ளன.

முதலாம் இராசராசனுடைய மகன் முதலாம் இராசேந்திரன் பெருவீரன்; கங்கை, கடாரம் வரையிலும் படையெடுத்தவன். அவன் கங்கைகொண்ட சோழபுரத்தில் கங்கைப் படையெடுப்பின் நினைவாக வானளாவிய விமானம் உடைய அரிய கோயிலை எடுப்பித்தான். அதில் அவனுடைய உருவச்சிலை இல்லை. எனினும், சண்டேசனுக்குச் சிவபெருமான் இண்டை மாலைசூட்டி அனுக்கிரகிப்பது போல ஒரு உருவம் அக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ளது. அதனைக் கூர்ந்து நோக்குவார் சிலர், அனுக்கிரகம் பெறும் படியான உருவத்தில் சண்டேசராகிய மாணிக்கு உரிய பூணூல் முதலிய நிலைகள் காணப்படாமையாலும், அவ்வுருவம் அரசனது உருவம் போன்று காணப்படுதலினாலும், அது இராசேந்திரனுடைய உருவமாகக் கொள்ளுதற்கு இடம் தருகிறதுஎன்பர். இவ்வூகம் உண்மையாயின் இராசேந்திரனையும் காணும்பேறு நம் ஊனக் கண்களுக்குக் கிடைக்கும்.

இதுகாறும் கூறிய அரச உருவங்கள் 11, 12 ஆம் நூற்றாண்டுகட்கு உரியவை. தேவார காலத்து—அதாவது 7 ஆம் நூற்றாண்டுக்குரிய பல்லவ அரசர்களது உருவங்கள் இந்நாளிலும் காணக்கிடப்பனவாகும்.

மகாபலிபுரம் சிறந்த கலைச் செல்வங்களை உடையது. அவற்றுள் ஒன்று ஆதிவராகர் கோயில். இதில் இரண்டு உருவச் சிலைகள் உள்ளன. திருநாவுக்கரசரை நீற்றறையில் இடல் முதலான முறைகளில் வருத்திய மகேந்திரவர்மனுடைய சிலை ஒருபுறச்சுவரில் உள்ளது. அதன் மேல்புறஞ்

தில் மகேந்திர போதாதி ராசன் என்ற எழுத்துக்கள் உள்ளன. அதற்கு நேர் எதிர்ப்புறச் சுவரில் உட்கார்ந்த நிலையில் அரச உருவம் ஒன்று செதுக்கப்பெற்றுள்ளது. அதன் மேல்புறத்தில் சிம்மவிஷ்ணு போதாதி ராசன் என்று எழுதப்பெற்றுள்ளது. இவ்வுருவச்சிலை மகேந்திரவர்மனுடைய தந்தை சிம்மவிஷ்ணுவைக் குறிக்கும்.

மகேந்திரவர்மனுடைய மகன் நரசிம்மவர்மன் எனப்படுவான். இவன் வாதாபி கொண்டவன். இவனுடைய சிலையும் மகாபலிபுரத்துக் குகைக்கோயிலில் காணப்படுகிறது.

இங்ஙனம் கோயில்கள் கட்டிய பல அரசர்களுடைய உருவங்கள் இன்றும் காட்சி அளித்து அவர்களுடைய தொண்டின் நினைவைப் பசுமையாக வைத்திருக்கின்றன. கண்காள்! அவ்வுருவங்களைக் காண்மின்களோ!

# 17. கல்வெட்டுக்களும் இசையும்

"மாசில் வீணையும் மாலை மதியமும் போன்றது ஈசன் எந்தை இணையடி நீழல்" என்றருளினர் அப்பர்.

அப்பர் காலத்துப் பல்லவ அரசன் மகேந்திரவர்மன் அவன்தான் எழுதிய மத்தவிலாசப்பிரஹசனம் என்ற நூலில் சூத்திரதாரன் வாயிலாக 'அஹம்து ஸம்ப்ரதி ஸங்கீத தன:' –இசை எனது செல்வம் என்று கூறுகிறான். இவ்வரசன் இசைக்கலையில் வல்லுநன். இதனை விளக்கும் முறையில் இவனுக்குரிய சங்கீர்ணஜாதி என்னும் சிறப்புப் பெயர் அமைந்துள்ளது. திருச்சியிலும் பல்லாவரத்திலும் இவன் அமைத்த குகைக்கோயில் சாஸனங்களில் சங்கீர்ணஜாதி என்ற தொடர் காணப்படுகிறது.

தாளவகைகள் ஐந்து: அவை சதுரஸ்ரம், திஸ்ரம் மிஸ்ரம், கண்டம், சங்கீரணம் என்பன. சங்கீரணம் என்னும் தாளத்தைப் புதிதாகக் கண்டு, அதன் வகைகளையும் ஒழுங்குகளையும் அமைத்தவன் ஆகலின், மகேந்திரன் சங்கீர்ண ஜாதி என்றசிறப்புப் பெயரைப் பெற்றான் என்று ஆய்வாளர் கூறுவர்.

மகேந்திரனது இசையறிவைப் புலப்படுத்துவது இவனது குடுமியாமலைக்கல்வெட்டாகும். குடுமியாமலை என்பது புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர்த் தாலுகாவில் உள்ளது. அங்குக் குன்றின் மேல் சிகாநாதர் கோயில் என்று ஒரு குகைக் கோயில் இருக்கிறது. இக்கோயிலுக்குப் பின்புறத்தில் பாறையில் இரண்டு பிள்ளையார் உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. இருவிநாயகர்க்கு இடையில் இசைச் சாஸனம் பொறிக்கப்பெற்றுள்ளது. இது 1904–ல் கண்டு பிடிக்கப் பெற்றது. ராவ் சாஹிப் H. கிருஷ்ணசாஸ்திரி எடுத்த படியைக்கொண்டு, ராவ்பகதூர் P. R. பந்தர்க்கர் அவர்கள் எபிகிராபியா இந்திகா XII ஆவது தொகுதியில் விளக்க

வரைகளுடன் வெளியிட்டார். Journal of the Oriental Research Vol. VII ல் Dr. T. N, இராமச்சந்திரன் இச் சாஸனத்தைப் பற்றி ஆய்வுரை எழுதி வெளியிட்டுள்ளார். புதுக்கோட்டைச் சாஸனங்கள் என்ற வெளி யீட்டில் சாஸனம் மட்டும் தேவநகரி எழுத்தில் அச்சிடப் பெற்று உள்ளது. விபுலானந்த அடிகளும் தம் யாழ்நூலில் இச் சாஸனம் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்.

இச்சாஸனம் 13X14 அடி பரப்புள்ள இடத்தைக் கொண்டுள்ளது; முப்பத்தெட்டு வரிகளையுடையது; "சித்தம் நம சிவாய" என்று தொடங்குவது;

1. மத்தியம க்ராமே சதுஷ்ப்ரஹார ஸ்வராகமா:
2. ஷட்ஜ க்ராமே ,, ,,
3. ஷாடவே ,, ,,
4. சாதாரிதே ,, ,,
5. பஞ்சமே ,, ,,
6. கைசிகமத்யமே ,, ,,
7. கேசிகே ,, ,,

என்று ஏழுதலைப்புக்களில் இசை பற்றிய செய்திகளைக் கூறுகிறது; இறுதியில் "ருத்ராசார்ய சிஷ்யேண பரம மாஹேச்வரேண ராஜ்ஞ சிஷ்ய ஹிதார்த்தம் க்ருதா:ஸ்வராகமா:"என்று உள்ளது. அதாவது "ருத்ராசார்யருடையசீடரும் பரமமாஹேச்வரும் ஆன அரச மாணவர் பொருட்டு 'ஸவராகமங்கள்' இயற்றப் பெற்றன" என்பது பொருள். இதற்குப்பிறகு தமிழ் எழுத்துக்களில், "எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய" என்றுள்ளது." மகேந்திரன் கண்டறிந்தவை எட்டு நரம்புகளைக் கொண்ட வீணைக்கும் உரியன" என்பது பொருள்.

ஏழு நரம்புகளையுடைய வீணையே யாண்டும் காணப்படுவது; எட்டு நரம்புகளையுடைய வீணையை மகேந்திரன் கண்டுபிடித்தவன் ஆதல் கூடும் என்பர் ஆய்வாளர்.

இது பற்றி விபுலானந்த அடிகள் தம் யாழ் நூலில், ''எட்டிற்கும் ஏழிற்கும் இவையுரிய'' எனக் கல்வெட்டின் ஈற்றிலே காணப்படுகின்ற குறிப்பினை நோக்குமிடத்து ச்சுத்த மூர்ச்சனையாகவும், அந்தரம் கூடிய மூர்ச்சனையாகவும் காகலி அந்தரம் கூடிய மூர்ச்சனையாகவும் அனைத்தினை யும் இசைக்கலாம் என்றும், கரஹரப்ரியா சமனத்திற்குள்ள சுத்த நரம்புகள் ஏழினையும் பெற்ற மூர்ச்சனை ஏழு எனக் குறிக்கப் பெற்றது என்றும், அந்தரம் கூடியது எட்டு எனக் குறிக்கப் பெற்றது என்றும், காகலியந்தரம் கூடியது ஒன்பது எனக் குறிக்கப் பெற்றது என்றும் எழுதுவர்.

குடுமியாமலை இசைக்கல்வெட்டுக்கு வடபாரிசத்தில், வலம்புரிகணேசருடையஉச்சியில் ஒரு சிறு கல்வெட்டுள்ளது. அது பரிவாதினி என்ற எழுத்துக்களால் ஆயது. வீணை, வல்லகீ, விபஞ்சி என்பன மூன்றும் வீணைக்குரிய பெயர்கள் என்றும், ஏழு நரம்புகளை உடையது பரீவாதினீ எனப்படும் என்றும் அமரகோசத்தில் கூறப்படுகிறது. 'ஒரு பெண் தன் தோழியை அணைத்துக் கொண்டு படுப்பது போல, நங்கை ஒருத்தி பரீவாதினியை அணைத்துக் கொண்டு உறங்கினாள்' என்று அசுவ கோஷர் என்பார் தம் புத்த சரித்திரத்தில் கூறி யிருக்கிறார்; அன்றியும் இவ்வீணை பொன்நரம்புகளை உடையது என்றும் கூறுகிறார். எனவே பரிவாதினீ என்ற வீணையைத் தான் மகேந்திரவர்மன் பயன்படுத்தினான் போலும்.

குடுமியாமலை இசைக் கல்வெட்டில் கூறியுள்ள ஏழு தொகுதிகளும் ஏழு இராகங்களைக் குறிக்கும் என்று பந்தர்க்கர் கூறுவர்.

குடுமியாமலை இசைக் கல்வெட்டில் ராகம் என்ற சொல் யாண்டும் காணப்படாமையாலும்,

மத்யமகிராம, ஷட்ஜகிராம் என்று முதலிரண்டும் கூறப் படுதலானும்,

பாரதீய நாட்ய சாத்திரத்தில் இசை நாடகம் இரண்டி னுக்கும் உரிய இரண்டு கிராமம் ஐந்து ஜாதிகள் ஆகியவற் றைக் கூறுதலினுலும்,

அ இ உ எ என்பன சுருதி பேதங்கள் ஆகையினுலும்,

ராகம் ஜாதியினின்று தோன்றும் – ஜாதிகள் கிராமங்களி னின்றும் தோன்றும் – கிராமங்கள் ஸ்வரங்களினின்றும் தோன் றும் – ஸ்வரங்கள் சுருதியினின்றும் தோன்றும் – ஆகையால் குடுமியாமலை ஸ்வரங்கள் பலவித இராகங்களை உண்டாக்கும் நெறியில் அமைக்கப் பெற்றுள்ளன என்று அறியப்படுதலா னும்,

குடுமியாமலைக் கல்வெட்டில் இராகங்களைக் கூறவில்லை என்றும்,

தென்னிந்திய இசைக்கலையின் சிறந்த அமிசங்களாகிய கிராமம் ஜாதி ஆகியவற்றைக் குறிப்பன ஆகும் என்றும் –

Dr. C. மீனுட்சி அவர்கள் ''பல்லவர்கால ஆட்சியும் வாழ்க்கையும்'' என்ற நூலில் கூறுவர்.

ஆனுல் விபுலாநந்த அடிகளார் தம் யாழ்நூலில் ஒழி பியலில்,

கல்வெட்டானது ஏழு தொகுதிகளாக அமைந்த 38 ஆளத்திகளை உடையது என்றும்,

ஏழுதொகுதிகளும் ஏழு இராகங்களைக் குறிப்பன என்றும்,

இவ்வேழும் சுத்தம் என்னும் வகையைச் சார்ந்தன என்றும்,

மத்யம கிராமம் ஷட்ஜக்கிராமம் என்னும் சொற்கள் அவ் வக்கிராமங்களைக் குறிப்பது மாத்திரம் அன்றி, அப்பெயர் பெற்ற இராகங்களைக் குறிப்பன என்றும்,

மத்யமக் கிராமம் ஷட்ஜக் கிராமம் என்னுமிவை சுத்த சுவரங்கள் பெற்று வருதலும் – ஷாடவம் பஞ்சமம் எனுமிவை அந்தரத்தொடு கூடி வருதலும் – சாதாரிதா, கைசிகமத்யமம், கைசிகம் எனுமிவை அந்தரம் காகலியொடு கூடி வருதலும், ஆளத்திகளை நோக்குமிடத்துக் காணப்படுகின்றன என்றும் கூறுவர்.

Dr. V. பிரேமா அவர்கள் சாஸனத்திற் கண்ட ராகங்கள் ஏழாம் நூற்றுண்டில் கண்ட தேவாரப் பண்களோடு தொடர்புடையன; மத்யம கிராமம் ஹரிகாம் போஜி;. ஷட்ஜ கிராமம் கரஹரப்ரியா; ஷாடவம் சீகாமரப்பண்; சாதாரித சாதாரிப்பண்; பஞ்சம பஞ்சமப் பண்; கைசிக மத்யமம் பழம் பஞ்சுரப்பண் ஆகலாம்-என்று கூறுவர்.

குடுமியா மலைக்கு அருகிலே திருமயம் என்னும் ஊரில் மலைக்கோவிலில் குடபோக வாயிலில் பல்லவர்கால எழுத்திறல் எழுதப் பெற்ற இசைக்கலைச் சாசனம் ஒன்று இருந்தது. பிற்காலத்துப் பாண்டியன் ஒருவன் இச் சாஸனத்தை அழித்து அவ்விடத்துத் தன் சாஸனத்தைப் பொறித்தான். இங்கும் அங்குமாகக் காணப்படும் பகுதி களினின்று ஷட்ஜ, காந்தாரம், தைவத என்பனவற்றை அறிதலோடு, பின்வரும் பகுதிகளும் காணப்படுகின்றன:

பரிவாதினிதா
கற்கப் படுவது காண்
ஞ் சொல்லிய புகுற் பருக்கும் நிமி
முக்கந் நிருபத்துக்கும் உரித்து
குண சேனப் பிரமாணஞ்
செய்த வித்யா வித்யா பரிவாதினி கற்........

திருமயம் சாஸனத்தில், பரிவாதினி சொல்லப்பெறுவதால், அழிக்கப் பெற்ற பகுதியிற் கண்ட இசைச் செய்திகள் பரிவாதினிக்கு உரியன என்று ஊகித்து அறியலாம்.

'நிமி முக்கந்நிருவத்துக்கும் உரித்து' என்பது, (நிமி-நேமி) இவ்வுலகில் காந்தர்வ வித்தையின் முப்பகுதிகளாகிய கீதம் வாத்யம் நிருத்தம் ஆகிய முப்பகுதிகளுக்கும் உரியது என்று பொருள்படும்.

'குணசேனப் பிரமாணம் செய்த வித்யா பரிவாதினி கற்க' என்பது, குணசேனனால் கண்டுபிடிக்கப்பட்ட இவ் விசைக்கலை, பரிவாதினி கற்பதற்குப் பயன்படும் என்று பொருள்படும்.

இங்ஙனம் Dr. மீனாட்சியம்மையார் இதற்குப் பொருள் தாராநிற்பர்.

யாழ்நூல் ஒழிபியலில் விபுலாநந்த அடிகளார், 'புகில் பருக்கும் நிமி முக்கந் நிருவத்துக்கும் உரித்து' என்பதை "ஒற்றுநீக்கி நோக்குமிடத்து, 'புகிபரு-நிமிமுக-நிருஅது-தெமிமுக" என்னும் நான்கும் குடுமியாமலைக் கல்வெட்டில் அமைந்த நான்கு அக்கரச்சுவர வரிசைகள் போல்வன'' என்று கூறுவர்.

இனி, மாமண்டூர்க் கல்வெட்டிலும் இசையைப் பற்றிய பகுதி மிகவும் சிதைந்துள்ளது. எனினும்,

> கந்தர்வ சாஸ்த்ர
> மத்தவிலாசாதி பதம் பிரஹஜேத்தமம்
> சத்ருமல் லஸ்ய
> கல்பாத் ப்ரவிபஜ்ய வ்ருத்தம் தக்ஷிண சித்
> வித்யாம்கார மித்வாதா யாதாவிதிஹி
> ஸ்ச விவிதைஹ் த்ருத்வா வர்ணசதுர்த்தம்
> அப்ராத்
> பூர்வம் நிர்வெஷ்டும் வாத்யா ஸ்ரவணைஹ்
> நிருதவாதைவ

என்ற பகுதிகள் படிக்கவியலுமாறு உள்ளன.

இவ்வரிகளினின்று, சத்ருமல்லன் என்ற சிறப்புப் பெயரையுடைய மகேந்திரன் கந்தர்வ சாத்திரத்தில் வல்லவன் என்றும், சதுர் வர்ணங்களை விதிகளுக்கு ஏற்ப அமைத்து, மனத்துள் நன்கு ஏற்று அவற்றை வாத்யத்தில் அமைத்துப் பார்த்தனன் என்றும் அறியப் பெறும்.

மகேந்திரவர்மனின் பெயரனுக்குப் பெயரனும், 7-ஆம் நூற்றுண்டின் இறுதியில் வாழ்ந்தவனும், காஞ்சிபுரத்தில் கயிலாசநாதர் கோயிலை எடுப்பித்தவனும் ஆகிய இராசசிம்மன் இசையில் பேரறிவுடையவன். அவன் வாத்ய வித்யாதரன் (இசைக்கருவிகளை இசைப்பதில் விஞ்சையனைப் போன்றவன்), ஆதோத்ய தும்புரு (தும்புருவைப் போல ஆதோத்ய வீணை வாசிப்பதில் வல்லவன்), வீணநாரதன் (வீணையில் நாரதன்போன்றவன்) என்று இசைப்புலமை விளக்கும் பட்டங்களைப் பூண்டவன்.

இதுகாறும் பல்லவர் காலத்து இசைச் சிறப்புக் கூறப் பட்டது. பல்லவர் காலத்துக்கு முற்பட்ட சிலப்பதிகார காலத்தது எனப்பெறும் இசைபற்றிய சாஸனம் ஒன்று அரச்சலூர் என்றஊரில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஈரோட்டிலிருந்து காங்கேயம் செல்லும் பாதையில் பன்னிரண்டு கல்தொலைவில் அரச்சலூர் என்ற சிற்றூர் உள்ளது. அவ்வூர் எல்லையில் நாகமலை என்றமலை இருக்கிறது. அதில் ஆண்டிப்பாறை என்ற பகுதி; அதனுள் ஓர் இயற்கைக் குகை. இக்குகையில் பண்டைத்தமிழ் எழுத்துக்கள் இருத்தலைத் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியிற் பயின்றவரும், தமிழ் ஆசிரியராக இருப்பவரும், கல்வெட்டு ஆராய்ச்சியில் புலமை சான்றவரும் ஆன வித்துவான் திரு. இராசு கண்டார். இக்குகையில் மூன்று பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. முதல் கல்வெட்டு ஐந்தெழுத்துக்கள் கொண்ட ஐந்து வரிகளையுடையது, அது:—

த தை தா தை த
தை தா தே தா தை
தா தே தை தே தா
தை தா தே தா தை
த தை தா தை த

இரண்டாவது கல்வெட்டில் இரண்டாம் வரியும் ஐந்தாம் வரியும் சிதைந்து காணப்படுகிறது.

இவ்விரு கல்வெட்டுக்களையும் இடமிருந்து வலமும், மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும் படித்தாலும் ஒரே மாதிரியிருத்தலைக் காணலாம்.

மூன்றும் கல்வெட்டைத் திரு. தி. நா. இராமச்சந்திரன் அவர்கள், "எழுத்தும் புணர்த்தான் மணிய வண்ணக்கன் தேவன் சாத்தன்" என்று படித்து, "வண்ணங்கள் பாட வல்ல ஆதன் சாத்தன் என்பான் இவற்றை இயற்றினான்" என்று பொருள் கொண்டார்.

பேராசியர் மகாலிங்கம் அவர்கள் மூன்றும் கல்வெட்டை "சித்தம் தீத்தம் பூணதத்தான் மறைய் வண்ணக்கன் தேவன் சாத்தன்" என்று படித்துத் 'தவம் பூண தேவன் சாத்தன் இதை அளித்தான்' என்று பொருள் கொண்டார். இவர் கருத்துப்படி மற்ற இரண்டு கல்வெட்டுக்களுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் "ஏழுதானம் பண்ணுவித்தான் மணிய் வண்ணக்கன் தேவன் சாத்தன்", என்று படித்து 'மணிகளைச் சோதிக்கும் தேவன் சாத்தன் என்று படித்து மற்ற இரு கல்வெட்டுக்களும் யந்திரம் போன்றவை என்று கூறினர்.

மத்தியக் கல்வெட்டாராய்ச்சியாளர் இதை, "எழுத்துப் புணருத்தான் மணிய் வண்ணக்கன் தேவன் சாத்தன்"

என்று படித்தனர். இதனையே தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர், Dr. R. நாகசாமி அவர்கள் ஏற்றுக்கொண்டு, "தா - தை என்ற இசை - கூத்து எழுத்துக்களைப் புணர்த்தவன் மணிய வண்ணக்கனாகிய தேவன் சாத்தன்" என்று கூறினார். இக்கல்வெட்டு, கி. பி. முதல் நூற்றாண்டுக்கு உரியது ஆதலின், இசை எழுத்துக்களைத் தொகுத்துக் கல்லில் பொறித்த பெருமை தேவன் சாத்தனைச் சாரும் என்று அறிய வருகிறது.

சோழர் காலத்தில் கோயில்களில் தேவார இன்னிசை வெகுவாகப் போற்றப் பெற்றது. பாடல் பெற்ற கோயில்களில் திருப்பதியம் விண்ணப்பிக்க (தேவாரம் ஓதுவதற்கு)ப் பிடாரர்கள் (ஓதுவார்கள்) நியமிக்கப் பெற்றனர். திருப்பதியம் விண்ணப்பிக்கத் தரப்பெற்ற நிபந்தங்களில் மிகப் பழமையான நிபந்தம் மூன்றும் நந்திவர்மன் காலத்ததாகும். முதற்பராந்தகன் காலத்துத் திருத்தவத்துறை (லால்குடி)க் கல்வெட்டினின்று மூன்று சந்திகளிலும் இரண்டு பிராமணர் திருப்பதியம் விண்ணப்பித்தனர் என்று அறியவருகிறது. தஞ்சைப் பெரிய கோயிலில் 48 பேர் நியமிக்கப் பெற்றனர்; இவர்கள் யாவரும் சிவபூசகர். தேவாரம் ஓதுங்கால் உடுக்கையும் கொட்டி மத்தளமும் வாசிக்கப் பெற்றன. உடுக்கை வாசித்தவன், சூரிய தேவக் கிரமவித்தன் ஆன ஆலாலவிடங்க உடுக்கை விச்சாதிரன். உடுக்கையில் வல்லவன் ஆதலின் 'உடுக்கை விச்சாதிரன்' என்றும், வேதத்தைக் கிரம முறையில் அத்யயனம் செய்தவன் ஆதலின் கிரமவித்தன் என்றும் கூறப்பெற்றனன். திருவாமாத்தூர்க் கோயிலில் 16 குருடர்கள் திருப்பதிகத்தைப் பாடினர். அவர்களுக்குக் கண்காட்டுவார் இருவர் இருந்தனர்; கோயில்களில் இசையும் நடனமும் வல்ல பெண் மகளிர் இருந்தனர்; அன்னோர் அடிகள்மார், மாணிக்கத்தார் எனப் பெற்றனர். அப்பெண்டிரும் திருப்பதியம் விண்ணப்பித்தனர். வீர ராஜேந்திரன் காலத்துத் திருவொற்றியூரில் தேவர் அடி

யார்கள் திருவெம்பாவை விண்ணப்பிக்கவும், திருப்பதியம் பாடவும் நிபந்தம் அளிக்கப்பெற்றது. அக்கல்வெட்டினின்று, தேவாரம் பாடும் பொழுது, சுவை பொருந்தச் சத்துவம் தோன்ற அபிநயத்தோடு பாடினர் என்று அறியலாம்.

நாலாயிரப்பிரபந்தம் ஓதுவதற்கும் நிபந்தங்கள் அளிக்கப் பெற்றன. திருமங்கை யாழ்வார் அருளியது திருநெடுந்தாண் டகம். ''இந்தத் திருவோலக்கத்திலே திருநெடுந்தாண்டகம் விண்ணப்பம் செய்வார்க்கு ஒருகாசு இடுவதாகவும்'' என்று திருக்கோவலூர்க் கல்வெட்டில் காணப் பெறுகின்றது. திரு வாய் மொழியை அருளியவர் நம்வாழ்வார். உத்தரமேரூர், எண்ணாயிரம், திருபுவனி, திருக்கோவலூர், திருக்கண்ணபுரம் முதலிய திருப்பதிகளில் திருவாய்மொழி விண்ணப்பம் செய்ய நிபந்தங்கள் தரப்பெற்றன. 'தேட்டருந்திறல்' என்பது குல சேகராழ்வார் அருளிய திருமொழியில் இரண்டாம் பத்து. குலோத்துங்க சோழனது ஸ்ரீரங்கம் கல்லெழுத்தினின்று தேட்டருந்திறல் விண்ணப்பம் செய்யப்பெற்ற செய்தி அறியப் பெறும்.

முதற்குலோத்துங்க சோழனது மனைவி ஏழிசை வல்லபி எனப்பட்டாள். இவள் தன் கணவன் இயற்றிய இசைநூலைப் பயின்று அம்முறையைப் பின்பற்றி இனிமையாகப் பாடி ஏழிசையையும் வளர்த்தாள். ஆசிரியர் ஜயங்கொண்டார் ''ஏழுபாருலகோடு ஏழிசையும் வளர்க்க உரியாள்'' என்றது இதனை வலியுறுத்தும்.

இசைக்கருவிகளில் வல்லவர்கள் வாத்ய மாராயன் என்ற சிறப்புப் பெயரால் வழங்கப் பெற்றனர். ஆரியம் பாடவும் தமிழ் பாடவும் வல்லவர்களை இராசராச சோழன் நியமித்தனன். வங்கியம் இயக்கவும், பாடவியம் இசைக்க வும், உடுக்கைவாசிக்கவும், வீணை வாசிக்கவும் நிவந்தக்காரர் நியமிக்கப்பெற்றனர்.

வீணையைப்பற்றிச் சாஸனங்களினின்று அரிய செய்திகள் தெரிய வரும். பரிவாதினி பற்றி முன்னரே கூறப்பட்டது. நரசிம்மவர்மன் காலத்துத் தருமராசர் தேரில் வீணாதர மூர்த்தியின்சிற்பம் உளது. தண்டு என்னும் வீணையை வலது கையினாலும் இடது கையினாலும் சாய்த்துப் பிடித்து வீணை வாசிக்கும் நிலை காணப்படுகிறது. இராசசிம்மன் எடுப்பித்த கயிலாசநாதர் கோயிலிலும் வீணாதரனாகச் சிவபெருமான் காட்சி யளிக்கிறார் இச் சிற்பங்களில் உள்ள வீணைக்கும் இக்கால வீணைக்கும் வேறுபாடு உண்டு. ஒரு சிற்பத்தில் வீணைக்கு நான்கு நரம்புகளும், மற்றொரு வீணையில் ஒரே நரம்பும் காணப்படுகிறது. வீணை வாசிப்பவர்க்கு அளிக்கப் பெற்ற இறையிலி நிலம் "வீணைக்காணி" எனப் பெற்றது. திண்டிவனம், வேம்பத்தூர், திருக்கடவூர்த் திருமயானம் ஆகிய தலங்களில் வீணை வாசிப்பதற்கு நிபந்தம் அளிக்கப் பெற்றமை அறியவருகிறது.

தேவார இசையைப் பரப்புவதற்குத் தேவாரத்திருப்பதிகங்களைக் கோயில்களில் சிலாசாஸனம் செய்யும் பழக்கம் இந்நாளில் பரவலாக உள்ளது. முன்னாட்களிலும் இந்த முறை இருந்திருத்தல் கூடும். கொள்ளிடத்தின் வடகரையில் கோவந்தபுத்தூரில் "வாழ்க அந்தணர்" என்று தொடங்கும் திருப்பாடல் சிலாசாஸனம் செய்யப்பெற்றுள்ளது. திருமுறை ஏடுகளில் காணப் பெறாத ஒரு திருப்பதிகம் திருவிடைவாயில் என்ற ஊரில் சாஸனமாக உள்ளது.

திருச்செந்துறைக் கல்வெட்டொன்று வெண்பாவான் அமைந்தது. அது பின்வருமாறு:—

உண்ணலாம் நெய்யொடுசோ றோவாதே எப்பொழுதும்
பண்ணெலாம் பாடி யிருக்கலாம் — மண்ணெலாம்
அகன்மாட நீடூர்கூர் கங்கை சடைக்கரந்தான்
பொன்மாடத் தெப்பொழுதும் புக்கு.

இப்பாடலில் "பண்ணெலாம் பாடி யிருக்கலாம்" என்பதால் பண் ஒன்றப் பாடும் முறை சோழர் காலத்து இருந்தமை பெறப்படும்.

# 18. இரண்டாம் இராசாதிராசனது திருவொற்றியூர்க் கல்லெழுத்து

## இரண்டாம் இராசாதிராசன்

இவன் இரண்டாம் இராசராச சோழனுக்குப்பின் பட்டம் எய்திய சோழவரசன்; விக்கிரமசோழனது பேரராகிய நெறியுடைப் பெருமாள் என்பவருடைய மகன்; எதிரிலிப் பெருமாள் என்பது இவனது இயற்பெயர். இரண்டாம் இராசராசன், தனக்குப்பின் பட்டம் எய்துவதற்குரிய ஆண் மக்கள் இல்லாமையின் இவ்வெதிரிலிப் பெருமாளை இளவரசாக்கினான். 1163-ல் இவன் முடிசூட்டப்பெற்றபொழுது இராசாதிராசன் என்று அபிஷேகப் பெயர் பெற்றான்; 1178 வரை இவன் அரசு செலுத்தினான்.

## கல்லெழுந்து நுதலியபொருள்

இரண்டாம் இராசாதிராசன் தம் 9-ஆம் ஆட்சியாண்டில் திருவொற்றியூர்க்குச் சென்றிருந்தான். அப்பொழுது திருவொற்றியூர் இறைவற்குப் பங்குனியுத்தரப் பெருவிழா நடந்து கொண்டிருந்தது. அத்திருவிழாவின் ஆறும் திருநாளான புதன்கிழமையும் ஏகாதசியும் பெற்ற ஆயிலியநாளில் படம்பக்கநாயகதேவர் திருமகிழின்கீழ் எழுந்தருள்விக்கப் பெற்றார். இராசாதிராசனும் அப்பொழுது அக்காட்சியைக் காணச் சென்றனன். அங்கு அரசனோடு மடமுடைய சதுரானன பண்டிதன், மாகேசுவரக்கண்காணி திருவீதி வெயிடம்கொண்டான், ஸ்ரீ காரியம் அரியபிரான் பட்டன், சோம சித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதன், காலும் பிடாரும் செயங்கொண்ட சோழமண்டலப் பிடாரன், திருவொற்றியூர்ப் பிச்சன், கோயில் நாயகம் படம் பக்க

நாயகபட்டன், கோயில் கணக்குத் திருவொற்றியூருடையான் உறவாக்கினுன் ஆகியோர் வந்திருந்தனர். இறைவன் திருமுன் ஆளுடையநம்பி ஸ்ரீ புராணம் படிக்கப்பெற்றது; எல்லோரும் புராணத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பெற்றது.

திருவொற்றியூர்ப் பெருமானுக்குரிய தேவதானங்களில் வடுகப்பெரும்பாக்கம் என்பது ஒன்று. காணியாளர் இன்றி நெடுங்காலம் அவ்வூர் நிலங்கள் பயிரிடப்பெருதிருந்தன. இக்கோயிலுக்குரிய ஊர்களில் இரணையூர் என்பது ஒன்று. அவ்வூரில் அமுதங் கிழவன் பெரியான் சோமன் என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு இவ்வடுகப்பெரும்பாக்கத்துக் காணியுரிமையைக் கொடுக்க என்று அரசன் உத்தரவிட்டான். அங்ஙனமே அன்ருடு நற்காசு நூற்றிருபதும் ஸ்ரீ பண்டாரத்தில் சோமன் சேர்ப்பித்தான்; இனி ஸ்ரீ பண்டாரம் இறை யிறுக்க வேண்டும்; அமுதங் கிழவன் சோமனும் அவன் வம்சத்தாரும் விற்ருெற்றி பிந்திக்கிரயத்துக்குரித்தாவதாக இந்நிலம் விற்றுக் கொடுக்கப்பெற்றது.

## பொது

இக்கல்லெழுத்து 1896-ம் யாண்டில் 403-ம் எண் கொண்ட கல்வெட்டாகவும், 1911-ம் யாண்டில் 371-ம் எண் கொண்ட கல்வெட்டாகவும் படியெடுக்கப்பெற்றது. இதனைக் குறித்து, 1912-ம் ஆண்டில் வெளியிட்ட கல்வெட்டுத்துறை அறிக்கையில் பக்கம் 67, 68ல் எழுதப்பெற்றுள்ளது. பேராசிரியர் திரு. K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்களின் 'சோழர் வரலாறு' பாகம் II-லும். Dr. இராசமாணிக்கனருடைய 'பெரியபுராண ஆராய்ச்சி' என்ற நூலில் பக்கம் 30-31லும், திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்கள், அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் நிறுவியுள்ள நூல் வெளியீட்டு நிதிப் பதிப்பாகச் சித்தாந்த கலாநிதி திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் பதிப்பித்த ஞானுமிர்தம்' என்ற நூலின் முற்பகுதியில் ஆராய்ச்சியில்

XXI - XXVIII, XXXIV - XXXVII1 பக்கங்களிலும், இக் கல்லெழுத்தைப்பற்றி எழுதி யுள்ளார்கள். அண்மையில் வெளிவந்த தென்னிந்தியக் கோயில் சாஸனங்கள் பாகம் I-ல் 516-வது எண்ணுகவும். பாகம் II-ல் பிற்சேர்க்கை VI-ல் பக்கம் XVII-லும் இக் கல்லெழுத்துக்குரிய குறிப்புக் காணப் பெறுகிறது.[1] இக்கல்லெழுத்து, திருவொற்றியூரில் ஆதி புரீசுவரர் கோயில் இரண்டாம்பிராகாரத்துக் கிழக்குச்சுவரில் உள்ளது.

## இக்கல்லெழுத்தின் காலம்

இக்கல்லெழுத்து இரண்டாம் இராசாதிராசனுடைய 9-ஆம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்டது. இவன் பட்டம் பெற்றயாண்டு 1163; எனவே இக்கல்லெழுத்து கி. பி. 1172-73க்கு உரியது என்னலாம்.

## சதுரானன பண்டிதன்

படம்பக்க நாயகதேவர் திருமகிழின்கீழ்த் திருவோலக்கம் செய்தருளியிருந்த சமயத்தில் போந்திருந்தவர்களுள் சதுரானன பண்டிதன் என்பாரும் ஒருவர். இவர் திருவொற்றியூரிலிருந்த ஒரு மடத்தின் தலைவர் ஆகலின் மடமுடைய சதுரானன பண்டிதன் எனப்பெற்றார்.

திருவொற்றியூரில் பல மடங்கள் இருந்தன.[2] அவற்றுள் ஒரு சைவ மடத்துக்குத் தலைவராய் இருந்தவர் நிரஞ்சன

---

[1] இந்நூலில் இக்கல்லெழுத்துக்குரிய அரசன் இராச ராசன் என்று காணப்பெறுகிறது; இதற்கு ஆதாரம் தரப் பெறவில்லை.

[2] சதுரானன பண்டிதர் மடம் 401 of 1896 (S.I.I.V 1356 Same as 130 of 1912), 405 of 1896 (S.I.I.V 1360 Same a 206 of 1912), 177 of 1912, 181 of 1912, 399 of 1896 (S. I.I. V 1354 Same as 104 of 1912), 105 of 1892 (S. I.I. IV 553 Same as 126 of 1912; செல்வத்திருவாரூர் கீழைமடம்) S. I. T. I. vol I 524; கீழைமடம் 207 of 1912. S. I. T. I. vol

தேவர் எனப்பெற்ருர். பல்லவ அரசனுன மூன்ரும் நந்திவர் மனின் (கி. பி. 825-50) மகனுன கோ விசய கம்பவர்மனின் 19-ஆவது ஆட்சியாண்டில் இந் நிரஞ்சன தேவர் திரு வொற்றியூரில் சிவன் கோயில் ஒன்றை எடுப்பித்தார்; அதற்கு நிரஞ்சனதேவேச்சரம் எனப்பெயரிட்டார்.3

இந்நிரஞ்சன தேவர்க்குப்பின் மடத்து அதிபராய் வந்த வருள் ஒருவர் சதுரானன பண்டிதர் என்ற பெயருடையவர்: இவர் முதற்பராந்தக சோழனது (907 - 953) இறுதிக்காலத் தில் இருந்தவர். இவர் கேரள நாட்டினர்; இராட்டிரகூட அரசனுகிய மூன்ரும் கிருஷ்ணனுக்கு மிகவும் வேண்டியவர்; இளமையில் பல கலைகளை நன்கு கற்ருர்; பின் சோழ நாட்டிற்குப்போந்து முதற் பராந்தகனுடைய மகனுகிய இராசாதித்தனுக்கு உற்ற நண்பராஞர்; அவ்விராசாதித் தற்குக் குருவாகவும் சாமந்தராகவும் இருந்தார்; எனினும் இராசாதித்தன் போரில் இறந்த பொழுது உடன் இறக்க முடியாதவராஞர். இதனுல் இவர் மனம் நொந்து, உலக வாழ்வை வெறுத்தார்; கங்கை நீராடிஞர்; ஆதிக்கிராமத்தில் (திருவெற்றியூரில்) இருந்த நிரஞ்சன குருவிடம் விரதம் (துறவு) பூண்டு மாவிரதியாஞர்4 ; நிரஞ்சன தேவர்க்குப் பின் இச்சதுரானன பண்டிதர் மடத்து அதிபதியாஞர். இராசாதித்தனிடம் சேஞபதியாக இருந்த கேரளன் வெள்ளங்குமரனே தக்கோலத்துப் போருக்குப் பிறகு துறவி யாஞர்என்று ஒருசாரார் கூறுவர். மேலே குறிப்பிட்ட மூன்ரும் கிருஷ்ணனுகிய கன்னர தேவனது 20-ஆவது ஆண்டுக்

---

I No. 508; செட்டிகள் மடம் 203 of 1912 S.I.T.I. vol I 522; பிக்ஷா மடம் 212 of 1912 S. I. T. I. vol I 525; ராஜேந்திர சோழன் மடம் 107 of 1892 S.I.I. vol IV 555; குலோத்துங்க சோழன் மடம் 200 of 1912; திருஞானசம்பந்தர் மடம் 238 of 1912; நந்திகேசுர மடம் 239 of 1912.

3. 372 of 1911; S. I. I. vol XII No. 105.

4. 181 of 1912; மூன்ரும் கிருஷ்ணனுடைய 20-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு.

கல்லெழுத்து (கி.பி. 960) நூறுநிஷ்கா[5] பொன் கோயிலில் பலிக்காகத் தந்ததைக் கூறுகிறது. தான் பிறந்தநாளாகிய தனிஷ்டா (கேட்டை) நாளில் சிறப்பாக வழிபாடு நடத்துதற்பொருட்டு இத் தருமம் அளிக்கப்பெற்றது. மான்ய கேதத்தில் இருந்த வியாபாரி ஒருவன் மூன்றும் கிருஷ்ணன் உடைய காடகத்துள்ளவன்; நஞ்சிப்பையன் என்ற பெயரினன்; திருவொற்றியூர் இறைவர்முன் ஒரு நந்தாவிளக்கு எரிக்க 30 ஊர்காற் செம்மைப்பொன்[6] சேற்றுப்பேட்டு[7] ஊரவரிடம் கொடுத்தான். இச் சதுரானன் பண்டிதர் கிருஷ்ணனுடைய 19-ஆவது ஆட்சியாண்டில் இத் தருமத்தை நடத்த ஏற்றுக்கொண்டார்.[8]

இனி முதல் இராசேந்திரன் (1012 - 1044) காலத்திலும் சதுரானன பண்டிதர் என்று ஒருவர் இருந்தார். இவர் திருவொற்றியூர்த் திருமயானமும் மடமும் உடைய சதுரானன பண்டிதர் எனப்பெற்றார்.[9] முதலாம் இராசேந்திரனுடைய 31-ஆம் ஆட்சியாண்டில் உடையார் ஸ்ரீ இராசேந்திரதேவர் திருநாள், மார்கழித்திருவாதிரைத்திருநாளன்று[10] திருவொற்றியூரிறைவன் நெய்யாடியருளுவதற்கு 150காசு இச்சதுரானன பண்டிதர் நிபந்தம் கொடுத்தார். 1½காசுக்கு ஒரு பசு வீதம் 100 பசுக்கள் வாங்கிப் பலமன்றாடிகளிடம்[11] கொடுக்கப்

---

5. நிஷ்கா ஒரு கழஞ்சுக்குச் சமானமானது (S. I. I. III 104).

6. ஊர்காற் செம்மைப்பொன்-உருகாச்செம்பொன்-செம்பொற்கட்டி: ஊர்ப்பொதுவாக உள்ள நிறைக்கும், உரைகல் மாற்றுக்கும் சமமானது (P. 1406 of S. I. T. I. vol. III Part II).

7. சேற்றுப்பேடு-சென்னை எழும்பூர் இரயில் நிலையத்துக்கு இப்பால் உள்ள இரயில் நிலையம் உள்ள ஊர்.

8. 177 of 1912; A. R. E; 1913 II 17; K. A. N. Cholas vol II Pages 496–7.

9 104 of 1912; 399 of 1896 S. I. I. V 1354.

10 முதலாம் இராசேந்திரன் மார்கழித் திருவாதிரை நாளில் பிறந்தவன். (திரு. பண்டாரத்தார் – பிற்காலச் சோழர் சரித்திரம் பாகம் I பக்கம் 139.)

11 மன்றாடிகள்-ஆட்டிடையர்.

பெற்றன. ஆண்டாண்டுதோறும் பசுவொன்றினுக்கு அருமொழிதேவன்[12] நாழியால் முந்நாழி நெய்யாக முந்நூறு நாழிநெய் மார்கழித்திருவாதிரை நாளில் தேவர்பண்டாரத்தே அளப்பதாக ஒப்புக்கொண்டனர்: முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் திருவொற்றியூர்த் திருக்கோயில் ஸ்ரீ விமானம் அருமையான கரிய கல்லினால் கட்டப்பெற்றது; அதனை ரவி என்னும் வரவீர சோழதக்ஷன் என்பவன் கட்டினான்; விமானம் மூன்று தளங்களால் ஆனது; இச் சதுரானன பண்டிதருடைய தூண்டுதலினால் இத்திருப்பணி செய்யப்பெற்றது.[13]

முதற்குலோத்துங்கசோழன் (1070 - 1118) காலத்தில் இன்னும் ஒரு சதுரானன பண்டிதரைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். இச்சோழனது 7ஆம்ஆட்சியாண்டு 290ஆவதுநாளில் அதிகாரிகளில் குளமுழார் ஏறன் கூத்தனான ராசராச மூவேந்த வேளார், திருவொற்றியூர்க்கோயிலில் ராசராசன் மண்டபத்தில் கோயில் கருமம் ஆராயவிருந்து திருவொற்றியூர்க் கோயிலுக்குரிய தேவதான ஊர்களின் கணக்குகளைப் பரிசீலனை செய்து 125 காசு கோயிலுக்கு வரவேண்டும் என்பதைக் கண்டறிந்தார்[14] இத்தொகையை வீரராஜேந்திரன் திருப்பள்ளி யெழுச்சிக்குவேண்டும் நிபந்தங்களுக்கு நிபந்தம் செய்துகொடுக்க என்று உத்தரவிட்டார்; புரவுவரித் திணைக் களத்துக் கணக்கு[15] பாலையூர் கிழவன் கம்பன் சீலமையனும், சீராளான் கண்டராச்சனும், மடமுடைய சதுரானன பண்டிதனும் இருந்து நிபந்தம் செய்தார்கள்.[16]

---

12 அருமொழி தேவன் நாழி—முதல் ராசராசன் பெயரால் வழங்கிய நாழி.

13 105 of 1892, S. I.I. IV 553; 126 of 1912.

14 இந்நாளில் கோயிற் கணக்குகளை, அரசியலார் நியமிக்கும் கணக்குப்பரிசோதகர், பரிசீலனை செய்தலை இங்கு ஒப்பிட்டு நோக்குக.

15 புரவு வரித்திணைக் களம் — அரசாங்கத்து வரிக் கணக்கு வைத்திருக்கும் குழு.

16 401 of 1896, S. I. I. V 1356; 130 of 1912.

இங்ஙனம் சதுரானன பண்டிதர் என்ற பெயர் தாங்க. மடபதிகள் பலர் திருவொற்றியூரில் இருந்து, கோயில் காரியங்களை மேற்பார்வை செய்து, அரசர்களால் மதிக்கப்பெற்றுச் சிறந்து விளங்கினர் என்று அறியப்பெறுகின்றது. இவர்கள் தலைமை பூண்டிருந்த மடமும் சதுரானன பண்டிதர் மடம் என்றே வழங்கப்பெற்றது.[17]

இனி இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் மட்முடையவர் ஆக இருந்தவரும் சதுரானன பண்டிதன் என்றே அழைக்கப்பட்டார். இச்சதுரானன பண்டிதரும் அரசரால் நன்கு மதிக்கப்பெற்றவர்; கோயில் காரியங்களை மேற்பார்வை செய்தவர்; இரண்டாம் இராசாதிராசன் மகிழடி சேவையைத் தரிசித்த காலத்தில் உடன் இருந்தவர்; இக்கல்லெழுத்தில் முதலில் கையெழுத்து இட்டவர் ஆகவும் இவர் காணப்பெறுகிறார்.

### வாகீசுவர பண்டிதர்

திருவொற்றியூரில் மேற்கூறித்த மகிழடி சேவைக்காலத்தில் அரசனோடு உடன் இருந்தவர்களில் நான்காமவராகக் குறிக்கப்பெற்றவர், சோமசித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதர் எனப் பெற்றார் இவ்வாசீசுவர பண்டிதர் கோடலம் பாகை[18] என்னும் ஊரினர்; கோடலம் பாகையிலிருந்தவரும் அருண்மொழி தேவர்[19] என்னும் பெயரினரும் ஆய பரமானந்த முனிவர் என்பாரிடம் சிவஞானோபதேசம் பெற்று சிவஞானம் நிறைந்து விளங்கினவர்; பின்னர்த்

---

17 ஞானமிருதம் : பக்கம் XXXIV.

18, 19 ஞானமிர்தம் 28, வரி 26-30; பாடல் சான்ற பல் புகழ் நிறீஇ, வாடாத்துப்பின் கோடலாதி, அருளாபரணன் அறத்தின் வேலி, பொருண்மொழி யோகம் கிரியையிற் புணர்த்த அருண்மொழி திருமொழி போலவும்'' என்ற நூற் பகுதியும், ''கோடல் என்றது கோடலம் பாகை என்னும் ஊர்; அருண்மொழி என்பது ஸ்ரீ பரமானந்த முனிகளின் பிள்ளைத் திருநாமம்'' என்ற உரைப் பகுதியும் காண்க.

திருவொற்றியூர்க்குச் சென்று சோமசம்பு சிவாசாரியார் முதலி யோர் வகுத்த பத்ததிகளையும் பிறவற்றையும் மக்களுக்கு அறிவுறுத்துவாராயினர்[20]; இதனால் ''சோமசித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதர்'' எனப்பெற்றார். இவர் அரசரும் அறிவரும் மதிக்கும் பெற்றியராய் விளங்கினார் என்பது ஒருதலை.

இவ்வாகீசுவர பண்டிதர் திருவொற்றியூரில் தனியாக ஒருமடத்தை நிறுவி அங்கிருந்து சிவத்தொண்டு புரிந்தார் என்று தோன்றுகிறது. சகம் 1260-61ல் (கி. பி. 1339-40ல்) அரசனான சகலலோக சக்கரவர்த்தி ராஜநாராயணச் சம்பு வராயருடைய 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்து[21] கீழை மடத்து முதலியார் என்று ஒருவரைக் குறிக்கிறது; இவனது 12ஆவது ஆட்சிஆண்டுக்கல்வெட்டு கீழைமடத்து முதலியார் வாகீசுவரதேவர்[22] என்று பெயர் கூறுகிறது. இது சோமசித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதர் குறிக்கப்பெற்ற கல்லெழுத்துக்கு 1½ நூற்றாண்டுக்குப் பிற் பட்டது எனினும் வாகீசுவர பண்டிதர் தங்கியிருந்து தொண்டுசெய்த மடம் ''கீழைமடம்'' என்று பெயர் பெற்ற தாயிருக்கும் என்று நினைக்க இடம் தருகிறது. அன்றியும் கீழைமடத்து முதலியார் வாகீசுர தேவர் இறந்து பட்ட காலத்தில் தனக்குப்பிறகு அம்மடத்துத் தலைமை பூண்பவர் அழகிய திருச்சிற்றம்பல முடையார் என்றும் கூறப்பெற்று உள்ளது. எனவே திருவொற்றியூரில் ஒரு மடத்தில் (அதாவது கீழை மடத்தில்) தங்கிச் சிவத்தொண்டு புரிந்தவர் வாகீச பண்டிதர் என்னலாம்; அவர் சிவாகமக் கருத்துக்களைத் தமிழில் யாவருக்கும் விளங்கும் வண்ணம் ஞானாமிர்தம்[23]

---

20 ஞானாமிர்தம் - திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை பக்கம் XXXIV.

21 212 of 1912; S. I. T. I 525

22 207 of 1912; S. I. T. I 508

23 இது செம்மையான 75 அகவற்பாக்களை யுடையது; சங்கத்தமிழ் நடையில் எழுதப்பெற்றது; சிவஞானசுவாமி

என்ற பெயரால் ஒரு சாத்திர நூலை எழுதினார். இந்நூலை எழுதியமையால் இவர் ஞானமிருதாசாரியர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பெற்றார்.

இனி இவர் திருநெல்வேலி மாவட்டத்துச் சென்று திருவாலீச்சரம் என்ற ஊரில் இருந்த கோளகி மடத்துத்தலைவராய் இருந்தார் என்றும், இவருக்குப்பின் திருவாலீச்சர மடத்தினர் தம்மை ஞானமிருதாசாரியார் சந்தானம் என்று கூறிக்கொண்டனர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்[24]. திருஞானம்[25] விண்ணப்பிப்பதற்குச் சிவப் பிராமணர் எண்மர் கோளகி மடத்து ஞானமிர்தாசாரிய சந்தானத்தைச் சார்ந்த புகலிப்பெருமாள் என்பாருடன் உடன்படிக்கை செய்துகொண்டனர் என்று ஜடாவர்மன் திருபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவனது 3ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்திலும்[26], கோளகி மடத்து ஞானமிர்தாசாரிய சந்தானத்தவரான அகோர தேவர் என்று இன்னொரு கல்லெழுத்திலும்[27] ஞானமிர்தாசாரிய சந்தானம் என்று ஒரு

---

களால் சிவஞானபோத உரையிலும், சிவஞானசித்தியார் உரைகளிலும், சிவப்பிரகாச உரையிலும் எடுத்தாளப்பெற்று உள்ளது; பதி பசுபாச வியல்புகளைத் தெளிவுற இயம்புவது; ஞான முதலிய நான்கு பாதங்களையும் தெரிவிப்பது; இந் நூற்கு அரியதோருரையுண்டு. இந்நூலைத் திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களைக் கொண்டு பரிசோதித்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்கள் நிறுவிய ஸ்ரீ ராஜராஜ அபய குலசேகர சோழ மகாராஜா நினைவுத் தேவாரத் திருமுறைப் பரிசு தமிழ்நூல் வெளியீடு என்னும் அறக்கட்டளையின் கீழ் வெளியிடப் பெற்றுள்ளது.

24 மு. ரா. சாஸன்த்தமிழ்க்கவி சரிதம் பக்கம் 79; ஞானமிர்தம் முன்னுரை பக்கம் XXV.

25 திருஞானம் - தேவாரம்.

26 359 of 1916

27 361 of 1916.

வழிமுறை நுவலப்பெறுகின்றது. இவற்ருல் ஞானமிர்தம் என்ற நூலை அருளிச் செய்தவரைத் தலைவராகக்கொண்ட சைவாசாரிய பரம்பரையொன்று நிலவியது என்றும் அறியக் கிடக்கின்றது.

இக்கல்லெழுத்தில் குறிக்கப்பெற்ற வாகீசுவர பண்டிதர் சோம சித்தாந்தத்தைப் பிறர்க்கும் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர் என்று அறியப்பெறுகின்றது. கோளகி மடத்தைச் சேர்ந்த சோமசம்பு சிவாசாரியார் என்பார் சோமசம்பு பத்ததி[28] என்ற நூலை எழுதியவர். இச் சோமசம்புபத்ததி முதலான நூல்களில் கூறப்பெற்ற செம்பொருள்களை விரித் துரைத்தலில் வல்லுநராயிருந்தமைப்பற்றி இவர் "சோம சித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதர்" எனப் பெற்ருர்.

இவ்வாகீச பண்டிதரே ஆளுடையநம்பி ஸ்ரீ புராணத்தை விரிவுரை செய்தார் என்று கருதுபவருமுண்டு[29]; அது பொருந்தாது. இவரும் பிறருடனிருந்து ஆளுடையநம்பி

---

28 சிவாகமங்களிலுள்ள கிரியாகாண்டப் பொருள்களைத் திரட்டி முறையாக வரிசைப்படுத்திப் பத்ததி என்னும் பெயருடன் 18 பத்ததிகள் 18 சிவாசாரியர்களால் செய்யப் பெற்றுள்ளன. அவர்களுள் ஒருவர் சோமசம்பு சிவாசாரியர். பத்ததி என்ருல் வழி என்று பொருள். எனவே சோமசம்பு பத்ததி என்ருல் சோமசம்பு சிவாசாரியார் கண்ட வழி என்பது பொருள். இந்நூலுக்குக் கிரியாகாண்டக்ரமாவளி என்றும் பெயருண்டு. இந்நூல் அசிந்திய விசுவ சாதாக்கியம் என்னும் ஆகமத்தை ஆதாரமாகக்கொண்டது. இதன் முடிவில் 4 சுலோகங்கள் உள்ளன. முதல் சுலோகத்தில் ஆசிரியருடைய குருபரம்பரை விளக்கப்பெற்றது; அடுத்ததில் இவர் கோளகி மடாதிபதி என்றுள்ளது; நான்காவதில் ஸ்ரீ விக்ரமன் என்ற அரசன் காலமாகிய சகாப்தம் 811ல் 2000 சுலோகங்கள் கொண்ட இந்நூல் செய்யப்பட்டது என்று கூறப்பெற்றது. இந்நூலில் கூறப்படுவன நித்தியம், நைமித்தியம், காமியம் என்பனவற்றின் விதிகளாம்.

29 ஞானமிர்தம், முகவுரை பக்கம் XXVIII.

ஸ்ரீ புராணம் நடத்தக்கேட்டார் என்று கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகிறது.

## ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம்

ஆளுடைய நம்பி30 என்பது சுந்தரரைக் குறிக்கும். சுந்தரர் வரலாற்றைக் கூறும் புராணம் ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் எனப்பெற்றதுபோலும், சேக்கிழார் பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம், கழறிற் றறிவார் புராணம்31, ஏயர் கோன்கலிக்காமர் புராணம், வெள்ளானைச் சருக்கம் என்ற நான்கு பகுதிகளில் சுந்தரர் வரலாற்றை மிக விரிவாகப் பாடியுள்ளார், ஆகவே பெரிய புராணத்தில் உள்ள இப்பகுதிகளையே ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் என்றனர் போலும். இதனைக் குறித்துப் பெரியபுராண ஆராய்ச்சி32 என்ற நூலில் கூறியது பின்வருமாறு:-

மக்கள் கேட்கத் தக்க நிலையிலும் கோயிலில் விளக்கமாக வாசிக்கத்தக்க முறையிலும் சுந்தரர் வரலாற்றைக் கூறுவது பெரியபுராணம் ஒன்றேயாகும்; மேலும் சுந்தரர் வரலாறு கூறும் வடமொழி நூலோ, வேறு தமிழ் நூலோ. சேக்கிழார்க்கு முன் இருந்தது என்று கூறச் சான்றில்லை; ஆதலின் திருவொற்றியூர்க் கோயிலில் படிக்கப்பட்டது சேக்கிழார் செய்த பெரிய புராணத்துள் அடங்கிய சுந்தரர் புராணமாகவே யிருத்தல் வேண்டும்".

## மகிழடி சேவை

சுந்தரர் புவியுட் சிவலோகம் போலத் திகழும் திருவொற்றியூரை அடைந்தார்; திருக்கயிலையினின்று அநிந்திதையார்

---

30 S. I. I. Vol IV 397; 73 of 1890 இரண்டாம் குலோத்துங்கனுடைய திருவாரூர்க் கல்லெழுத்தும் சுந்தரரை ஆளுடைய நம்பி என்று கூறுகிறது.

31 கழறிற்றறிவார்-சேரமான் பெருமாள் நாயனர்.

32 Dr. இராசமாணிக்கனர், M.A.,Ph.D.

ஞாயிறு என்ற ஊரில் ஞாயிறுகிழாரின் திருமகளாக அவதரித்திருந்தார்; சங்கிலியார் என்று திருநாமம் பெற்ருர்; சங்கிலியாருக்குத் திருமணப் பருவம் வந்தது; யாரையும் மணக்க விரும்பாமல் திருவொற்றியூரில் கன்னிமாடம் அமைப்பித்து அங்கே தங்கித் திருவொற்றியூர்ப் பெருமாற்குத் திருத்தொண்டுகள் புரிந்திருந்தார். திருவொற்றியூரை அடைந்த சுந்தரர் பூமண்டபத்தினுள்ளே சங்கிலியாரைக் கண்டு அவரைக் குறித்து வினவினுர்: செய்தி அறிந்து சங்கிலியாரைத் தந்தருளுமாறு இறைவனை வேண்டினுர். இறைவனும் 'சங்கிலியை உனக்குக் கொடுக்கின்ருேம்; கவலையை ஒழி என்றருளினுர். பின்னர்ச் சிவபெருமான் சங்கிலியார் கனவில் தோன்றி, "நம்பியாரூரன் உன்னை மணஞ்செய்ய விரும்பி என்னை வேண்டினுன்" என்று அருளி, 'உன்னைப் பிரியாதவாறு சபதம்செய்து கொடுப்பான்' என்றும் கூறினுர்; பின்னர்ச் சுந்தரரிடம் எழுந்தருளிச் சங்கிலியிடம் 'உன்னைப் பிரியேன்' என்று சபதம் செய்து கொடுத்தல் வேண்டும் என்ருர். சுந்தரர் பெருமானைநோக்கி, 'இறைவனே! சபதம் செய்து கொடுக்கச் சந்நிதிக்கு வரும்பொழுது தாங்கள் திருமகிழின்கீழ் எழுந்தருளல் வேண்டும்' என்று வேண்டினுர். சிவபெருமான் இசைந்தருளினுர்; சங்கிலியாரிடம் சென்ருர்; 'சங்கிலியே! நம்பியாரூரர் சபதம் செய்துகொடுக்கச் சந்நிதிக்கு வரும்பொழுது மகிழின்கீழ்ச் சபதம் செய்து கொடுத்தால் போதுமானது; சன்னிதியில் வேண்டாம் என்று கூறுவாயாக' என்றுகூறி மறைந்தருளினுர். மறுநாள் சுந்தரர் சபதம் செய்து கொடுக்கச் சன்னிதிக்கு வந்தார்; சங்கிலியார், 'இறைவன் திருமுன் சபதம் செய்து கொடுத்தல் தகாது; மகிழின் கீழ்ச் சபதம் செய்தால் போதும்' என்ருர். நம்பியாரூரர் திகைத்தார்; அங்ஙனமே திருமகிழின்கீழ்ச் சபதம் செய்து கொடுத்தார். மறுநாள் திருவொற்றியூர்த் திருத்தொண்டர்கள் நம்பியாரூரருக்கும் சங்கிலியாருக்கும் திருமணம் செய்வித்தார்கள்.

இச்சுந்தரர் வரலாற்றை நினைவுகூர்ந்து, திருவொற்றியூர்ப் பெருமானைத் திருமகிழின்கீழ் எழுந்தருளுவித்து விழாக் கொண்டாடுவது "மகிழடி சேவை" எனப்பெறும். மகிழடி

சேவை பிற கோயில்களில் நடத்தப் பெறுவதில்லை; இது திருவொற்றியூர்க்கே யுரியது.

இத் திருவிழா பங்குனியுத்தரப் பெருவிழாவில்[33] ஆறும் திருநாளில் ஆயில்ய நக்ஷத்திரம் கூடிய நாளில் நடை பெற்றது என்று இக் கல்லெழுத்திலிருந்து அறியப்பெறுகிறது. இவ்வாலயத்தில் தற்போது மாசி மாதத்தில் மக நக்ஷத்திரம் தீர்த்தவாரியாக வைத்துப் பிரமோற்சவம் நடைபெற்று வருகிறது. இது நீண்ட காலமாக மாசியில்தான் நடந்து வருகிறது என்று சொல்லுகிறார்கள். அவ்வுற்சவத் தொடர்ச்சியில் 9 ஆவது நாளில் (அதாவது ஆயில்ய நக்ஷத்திரத்தில்) மாலை சுமார் 6 மணிக்கு இவ்வற்புதத்தை நடத்திக் காட்டுகிறார்கள். அப்பொழுது எழுந்தருளிக் காட்சி கொடுக்கும் உற்சவமூர்த்தி (நின்ற கோலம்; சுவாமி பக்கத்தில் ரிஷபம்; அடுத்து அம்பிகை) தற்போது ஒற்றீசுவரர்[34] கோயிலில் எழுந்தருளியுள்ளார். சபதம் செய்து கொடுக்க எழுந்தருளும் மூர்த்தி கலியாணசுந்தரர்[35], இவர் ஆலயம் தான் மகிழ மரத்துக்குப் பக்கத்தில் உள்ளது. இவர் நின்ற கோலம்; ஒரு கரம் மேலே தூக்கப்பெற்றுள்ளது. ரிஷபாரூடர் வந்து மகிழடியில் நின்றதும் கலியாணசுந்தரர் எழுந்தருளி வருகிறார்; தனி விமானம்; மகிழைச் சுற்றிவந்து சபதம் செய்து கொடுப்பதாகப் புராணம் கூறும். அன்று கூட்டம் அதிகமாக மகிழமரத்து மேடையிலும் அதனைச் சுற்றிலும் நின்று கொள்வதால் கல்யாணசுந்தரர் மூன்று முறை முன்னும்

---

33. திருவொற்றியூரில் பங்குனியுத்திரப் பெருவிழா நடைப்பெற்று வந்ததை "ஒத்தமைந்த உத்திரநாள் தீர்த்தமாக ஒளி திகழும் ஒற்றியூர் என்கின்றரே" என்ற அப்பர் திருப்பாடலினால் அறியலாம்.

34. ஒற்றீசர்-இது கோயிலில் வடமேற்கு மூலையில் உள்ளது. திருவொற்றியூரான் அடிமை என்பவரால் திருப்பணி செய்யப்பெற்றது.

35. சுந்தரமூர்த்தி சுவாமிகள் (உற்சவமூர்த்தி)

பின்னும் ஆக மகிழமரம் முதல் ஒற்றீசர் சந்நிதிவரை போய் வருவது வழக்கம்''[36]

**படம்பக்கநாதர்**

திருமகிழின் கீழ்த் திருவோலக்கம் செய்தருளாநின்றவர் படம்பக்கநாதர் என்று கல்லெழுத்தில் உள்ளது. ஆனால் இப்பொழுது திருமகிழுக்கு வருபவர் ரிஷபாரூடர் என அறிய வருகிறது. ''ஒற்றியூரில் உபமன்னிய முனிவரிடம் சிவ தீக்கை பெற்றுப் பூசித்த வாசுகியைத் தமது திருவுருவில் சேர்த்து அமர்த்திக்கொண்டு அந்த அடையாளங்களுடன் இன்றும் விளங்க வீற்றிருத்தலின் சுவாமிக்குப் படம்பக்க நாதர் என்று பெயர் வந்தது''. ''சுவாமி சந்நிதிக்குத் தெற்கில் தனி மண்டபத்தில் மாணிக்கத்தியாகர் எனப்படும் உற்சவமூர்த்தி சோமாஸ்கந்தராக எழுந்தருளியுள்ளார். இம்மண்டபத்துக்குப் பின்னர் ஒரு சிறு தனிக் கோயில் உள்ளது. அதனைக் கௌடீஸ்வரர் என்று சொல்லு கின்றனர். ஆனால் அதனைப் பார்த்தால் சிவமூர்த்தங்கள் இருபத்தைந்துள் ஒன்றாயிருக்கக்கூடும் என்று கருதலாம். 4 கரங்களுண்டு; யோகாசனத்தில் அமர்ந்த கோலம்; வலது கரம் மேல் நோக்கி யிருக்கிறது; அதில் சூலம் போன்று ஒன்றிருக்கிறது''[37] இக் கௌடீசுவரர் கோயிலே படம்பக்க நாதர் ஆலயம் என்றும்[38] அது வீரராசேந்திர சோழனது ஐந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி.1068ல்) அதிகாரி ராசேந்திர மூவேந்த வேளான் என்பவரால் கற்றளியாக்கப்பெற்றது[39] என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். மேற் குறித்தவாறு

---

36. இப்பகுதியில் கண்ட பல நடைமுறைக் குறிப்புக் களைத் திரு. க. சோமசுந்தரம செட்டியார் அவர்கள் அன்புடன் உதவினார்கள்.

37. இக் குறிப்புக்களையும் திரு. க.சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் உதவினார்கள்.

38. ARE II Para 6 and 22 of the year 1913.

39. ஷை 232 of 1912.

யோகாசனத்தில் 4 திருக்கரங்களுடன் அமைந்த திருமேனியைப் படம்பக்கநாதர் என்று சமயநெறிமுறைகள் நன்கறிந்த பெருமக்கள் அக்காலத்துக் கல்லெழுத்துக்களில் எங்ஙனம் குறித்தனர் என்று தெரியகிற்றிலது.

## கோயிலதிகாரிகளும் பிறரும்

ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் கேட்டவர்களுள் இராசாதி ராசனும் சதுரானன பண்டிதனும், வாகீசுவர பண்டிதனும் ஆவர் என்று கண்டோம்; இவர்களோடு ஸ்ரீ மாகேசுவரக் கண்காணி திருவீதி வெளியிடங்கொண்டான் என்றவரும் அங்கு இருந்தார். மாகேசுவரர் என்றது சிவனடியார் என்பது. "கோயில் நிர்வாகத்தில் பொறுப்புள்ள சிவனடியார் சபை" யின் மேற்பார்வையாளர் மாகேசுவரக் கண்காணி எனப்பெறுவர். அங்கு இருந்தவர்களில் இன்னொருவர் செயங்கொண்ட சோழ மண்டலப் பிடாரன்[40] என்பவர் ஆவர். பிடாரன் என்பது திருக்கோயில்களுள் திருப்பதிகம் விண்ணப்பிப்பவரை (தேவாரம் ஓதுபவரை)க் குறிக்கும். இன்னொருவர் கோயில் நாயகம் படம்பக்கநாயகபட்டர் என்பவர். இப்பெயர் படம்பக்கநாயகர் திருப்பெயரைக்கொண்டவர் என்றோ படம்பக்கநாயகரைப் பூசை செய்யும் உரிமை பெற்ற சிவாசாரியர் என்றோ பொருள்படும். இவர் கோயில் நாயகம் என்ற அலுவலை மேற்கொண்டவர்; பூசகர்களுள் இவர் தலைவர்போலும். இந்நிகழ்ச்சிக்காலத்தில் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற அலுவலில் இருந்தவன் அரியபிரான்பட்டன் என்பவன் ஆவன்; ஸ்ரீகாரியம் என்றது கோயில்காரியம் என்பதாம்.

---

40. தொண்டைமண்டலம் முதல் இரர்சராசன் கால முதல் செயங்கொண்ட சோழமண்டலம் எனப்பெற்றது,

## வடமொழிப்பகுதி

இக் கல்லெழுத்தின் முதற்கண் காணும் வடமொழிப் பகுதியுள் சில எழுத்துக்கள் சிதைந்துவிட்டன. காணும் பகுதியின் மொழிப்புரை பின்வருமாறு:—

விற்கப்பட்டது நூற்றிருபது பொன் காசுகளினால் விருஷலனாகிய சோமன் என்னும் பெயருடையவனுக்கு வடுகப் பெரு(ம்பாக்கம்) விருஷலர் என்பது பெருங்குடிமக்களுக்கும் இழிந்தவர்களுக்கும் பிறந்தவர் என்பது பொருள்படும்; தமிழ்ப்பகுதியில் பெரியான்சோமன் எனப் பெற்றிருத்தலின் 'விருஷலஸ்ய' என்பதற்குப் 'பெருமை பொருந்திய' என்று பொருள் கூறுதல் பொருந்தும்.

## முடிப்புரை

திருமகிழடிசேவைத் திருவிழாக் காலத்தில் ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் (அதாவது பெரியபுராணப்பகுதி) வாசித்து விளக்கப்பெற்றது என்று அறிகிறோம். அப் பண்டைப் பழக்கம் இந்நாளிலும் நிகழின் சாலவும் பொருந்தும். இறைவன் திருவருள் புரிவாராக!